சுராவின்

# TNPSC

## 2013-ஆம் ஆண்டு முதல்
## 2026-ஆம் ஆண்டு வரை

### நடைபெற்ற அனைத்துத் தேர்வுகளில் கேட்கப்பட்ட

# பொது அறிவு

## வினாக்களுக்கான விடைகள்-
## முழுமையான விளக்க உரைகளுடன்

### குரூப் I, IA, IB, II, IIA, IIB, III, IIIA, IV & VAO, VI, VII & VIII

---

- ★ இந்திய வரலாறு மற்றும் பண்பாடு & இந்திய தேசிய இயக்கம்
- ★ இந்திய அரசியலமைப்பு
- ★ இந்தியப் பொருளாதாரம் மற்றும் தமிழ்நாட்டில் வளர்ச்சி நிர்வாகம்
- ★ புவியியல்
- ★ அறிவியல்
- ★ தமிழ்நாட்டின் வரலாறு, பண்பாடு, மரபு மற்றும் சமூக அரசியல் இயக்கங்கள்
- ★ திறனறிவுத் தேர்வு

வீ.வீ.கே. சுப்புராசு

சுரா காலேஜ் ஆஃப் காம்படிஷன்
சென்னை

B1188

© வெளியீட்டாளர்கள்

**TNPSC பொது அறிவு** (2013-ஆம் ஆண்டு முதல் 2026-ஆம் ஆண்டு வரை நடைபெற்ற அனைத்து தேர்வுகளில் கேட்கப்பட்ட வினாக்கள் விளக்கமான விடைகளுடன்)

**வீ.வீ.கே. சுப்புராசு**

**ISBN: 978-93-6417-322-3**
**Code : B1188**

(வெளியீட்டாளர்களின் எழுத்து மூலமான அனுமதி இன்றி இப்புத்தகத்தை மறுபதிப்புச் செய்யவோ, வேறு மொழிகளில் மொழிபெயர்க்கவோ, அச்சடிக்கவோ, போட்டோகாபி மற்றும் மின்பதிவேற்றம் / மின்பதிவிறக்கம் செய்யவோ கூடாது)

**சுரா காலேஜ் ஆஃப் காம்படிஷன்**

**தலைமை அலுவலகம்:** 1620, 'ஜே' பிளாக், 16-ஆவது பிரதான சாலை, அண்ணா நகர், சென்னை-600 040. ☎ 91-44-4862 9977, 4204 3273

**சங்கர் பிரிண்டர்ஸ், சென்னை-600 042-இல்** அச்சடிக்கப்பட்டு,
**சுரா காலேஜ் ஆஃப் காம்படிஷன்,**
1620, 'ஜே' பிளாக், 16–ஆவது பிரதான சாலை, அண்ணா நகர், சென்னை – 600 040 இல்
**திரு. வீ.வீ.கே. சுப்புராசு** அவர்களால் வெளியிடப்பட்டது.
தொலைபேசி எண்கள்: 91–44–4862 9977.
email: suracollege@gmail.com; enquiry@surabooks.com; website: www.surabooks.com

# பொருளடக்கம்

பக்கம்

## TNPSC தேர்வுகளின் ஒரிஜினல் வினாத்தாள்கள் விளக்கங்களுடன்


இந்திய வரலாறு மற்றும் பண்பாடு & இந்திய தேசிய இயக்கம் ................ 1 – 144

இந்திய அரசியலமைப்பு ................ 1 – 128

இந்தியப் பொருளாதாரம் மற்றும் தமிழ்நாட்டில் வளர்ச்சி நிர்வாகம் ........ 1 – 112

புவியியல் ................ 1 – 80

அறிவியல் ................ 1 – 128

தமிழ்நாட்டின் வரலாறு, பண்பாடு, மரபு மற்றும்
சமூக அரசியல் இயக்கங்கள் ................ 1 – 64

திறனறிவுத் தேர்வு ................ 1 – 160

## TNPSC ஒரிஜினல் வினாத்தாள்கள் விளக்கமான விடைகளுடன்

# TNPSC குரூப்-IV 2024 தேர்வு

**1. அகத்தின் இருளைப் போக்கும் விளக்காக வள்ளுவர் எதனைக் கூறுகின்றார் ?**

A) தவ விளக்கு B) அருள் விளக்கு
C) குடும்ப விளக்கு D) பொய்யா விளக்கு

விளக்கம் : விடை : (D)

**திருக்குறள் – அறத்துப்பால் – வாய்மை**

**எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்குப்**
**பொய்யா விளக்கே விளக்கு.** – குறள் எண் : 299

**பொருளுரை :** புறத்தின் இருளைப் போக்கும் விளக்குகள் எல்லாம் விளக்குகள் அல்ல, அகத்தின் இருளைப் போக்கும் பொய்யாமை என்னும் விளக்கே ஒருவரைச் சான்றோராகக் காட்டும் உண்மையான விளக்காகும்.

**2. ரோம் நாட்டைச் சேர்ந்த மூத்த பிளினி தன்னுடைய இயற்கை வரலாறு எனும் நூலில்............. இந்தியாவின் முதல் பேரங்காடி எனக் குறிப்பிட்டுள்ளார்.**

A) காவிரிபூம்பட்டிணம் B) நாகப்பட்டினம்
C) முசிறி D) கொற்கை

விளக்கம் : விடை : (C)

ரோம் நாட்டைச் சேர்ந்த மூத்த பிளினி தன்னுடைய இயற்கை வரலாறு என்ற நூலில் முசிறியை இந்தியாவின் முதல் பேரங்காடி எனக் குறிப்பிட்டுள்ளார்.

முசிறியில் ரோமானியர் இருந்த குடியிருப்புப் பகுதியில், அகஸ்டஸ் கடவுளுக்காகக் கோயில் ஒன்று கட்டப்பட்டிருந்தது. முசிறி சேரமன்னர்களுக்கு உரிய துறைமுகம் ஆகும். யவனர்கள் இங்கு வந்து பொன்னைக் கொடுத்து மிளகை வாங்கிச் சென்றனர்.

**3. வள்ளுவன் செய்த திருக்குறளை நன்கு கற்றுணர்ந்தோர் உள்ளுவரோ மனுவாதி நூல்களை என்று திருக்குறளைப் புகழ்ந்துரைத்தவர் யார் ?**

A) ஔவையார் B) பேரா. சுந்தரம் பிள்ளை
C) பாரதியார் D) சுத்தானந்த பாரதியார்

விளக்கம் : விடை : (B)

**வள்ளுவர்செய் திருக்குறளை**
**மறுவறநன்கு உணர்ந்தோர்கள்**
**உள்ளுவரோ மனுவாதி**
**ஒரு குலத்திற்கு ஒரு நீதி ?** – மனோன்மணீயம் பேரா. சுந்தரனார்

**4. "ஞாலம் கருதினும் கை கூடும்"**
**மேற்கூறிய திருக்குறளின்படி ஒருவர் உலகம் முழுவதையும் கைப்பற்றக் கருதினாலும் அவர் எந்த இரண்டை அறிந்து செயல்பட வேண்டும் ?**

A) செல்வமும், வீரமும்
B) காலமும், இடமும்
C) சகோதர – சகோதரி உதவி
D) தாய், தந்தை உதவி

விளக்கம் : விடை : (B)

**திருக்குறள் – பொருட்பால் – காலம் அறிதல்**

**ஞாலம் கருதினுங் கைகூடும் காலம்**
**கருதி இடத்தாற் செயின்.** – குறள் எண் : 484

**பொருளுரை :** ஏற்ற காலத்தையும் இடத்தையும் அறிந்து ஒரு செயலைச் செய்தால், பூவுலகம் முழுமையும் வேண்டும் எனக் கருதினாலும் அது கைகூடும்.

**5. தேவதாசி முறை ஒழிப்பு சட்டம் கொண்டு வர டாக்டர். முத்துலட்சுமி அம்மையாருக்கு ஆணிவேராக இருந்த பெண் சீர்திருத்தவாதி**

A) மூவலூர் இராமாமிர்தம் அம்மையார்
B) அன்னிபெசண்ட் அம்மையார்
C) டாக்டர். தர்மாம்பாள்அம்மையார்
D) நாகம்மையார்

விளக்கம் : விடை : (A)

டாக்டர். முத்துலட்சுமி ரெட்டி அவர்கள், 1929 –ஆம் ஆண்டு சட்டமன்ற மேலவைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். தமிழ்நாட்டில் காணப்பட்ட கொடிய பழக்கமான தேவதாசி முறையை ஒழிப்பதற்கு பாடுபட்டார். இவரைப் போலவே தமிழகத்தின் அன்னிபெசண்ட் அம்மையார் என்று அழைக்கப்பட்ட மூவலூர் இராமாமிர்தம் அம்மையாரும் தேவதாசி முறையை ஒழிப்பதற்கு, பல எதிர்ப்புகளையும் மீறி போராடினார். டாக்டர். முத்துலட்சுமி அம்மையார் சட்டமன்றத்தில், தேவதாசி முறை ஒழிப்புச் சட்டம் கொண்டு வருவதற்காக பாடுபட்ட போது, இராமாமிர்தம் அம்மையார் அவருக்காக ஆதரவு திரட்டினார். முத்துலட்சுமி அவர்களின் பெரும் முயற்சியால் 1929 –ஆம் ஆண்டு தேவதாசி முறை ஒழிப்புச் சட்டம் கொண்டு வரப்பட்டது. தேவதாசி முறையிலிருந்து மீட்டுக் கொண்டு வந்த பெண்களுக்கு மறுவாழ்வு அளிப்பதற்காக, முத்துலெட்சுமி அம்மையார், 1930–ஆம் ஆண்டு சென்னை அடையாற்றில், அவ்வை இல்லம் என்ற அமைப்பை நிறுவினார்.

**6. "நெய்யால் எரிநுதுப்பேம் என்றற்றால் கௌவையால்**
**காமம் நுதுப்பேம் எனல்"**
**என்னும் குறளில் நுதுப்பேம் என்பதன் பொருள் என்ன?**

A) அவித்தல் B) முறைமை
C) ஆயுள் D) பயில்வுடைமை

விளக்கம் : விடை : (*)

**திருக்குறள் – காமத்துப்பால் – அலர் அறிவுறுத்தல்**

**நெய்யால் எரிநுதுப்பேம் என்றற்றால் கௌவையால்**
**காமம் நுதுப்பேம் எனல்.** –குறள் எண்: 1148

அருஞ்சொற்பொருள் : எரி – நெருப்பு, நுதத்தல் – அவித்தல், நுதுப்பேம் – தணிப்பேன், அற்று – அத்தன்மையது, கௌவை – பழிச்சொல், எனல் – என்றது.

**பொருளுரை :** இந்த ஊரார் தங்கள் அலரால் (பழிச்சொல்லால்) எங்கள் காதலை அழித்து விடுவோம் என்று எண்ணுவது, நெய்யை ஊற்றி நெருப்பை அவிப்போம் (அணைப்போம்) என்பது போலாகும்.

**விளக்கம் :** தலைவன், தலைவியிடையே உள்ள காதலை அழிக்க எண்ணும் ஊரார், அவர்களைப் பற்றிய பழிச்சொற்களைக் கூறி எள்ளி நகையாடுவது, அவர்களின் காதலை வளர்க்குமே தவிர அழிக்காது. எரிந்து கொண்டிருக்கும் நெருப்பில் நெய்யினை ஊற்றினால், செந்தழல் நெய்யினைப் பருகி வளருமே தவிர அணைந்து விடாது.

குறிப்பு : நுதத்தல் – அவித்தல். இது தொழிற்பெயர் ஆகும். நுதுப்பேம் என்பது தன்மை வினைமுற்று. நுதுப்பேம் என்பதற்கு சரியான பொருள் தணிப்பேன் ஆகும்.

**7. பிறப்பினால் எல்லா உயிர்களும் சமம் எனக் கருதும் வள்ளுவர் எதன் வழி அவற்றை வேறுபடுத்துகிறார் ?**

A) தொழில் B) உணவு
C) உடை D) இடம்

விளக்கம் : விடை : (A)

**திருக்குறள் – பொருட்பால் – பெருமை**

**பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா**
**செய்தொழில் வேற்றுமை யான்.** – குறள் எண் : 972

**பொருளுரை :** அனைத்து மக்களும் பிறப்பினால் சமமானவர்களே ஆவர். அவரவர் செய்கின்ற தொழில்களால் (செயல்களால்) பெருமை, சிறுமை என்ற இயல்புகள் மட்டுமே ஒத்திருப்பதில்லை.

**விளக்கம் :** பிறப்பினால் அனைவரும் சமமானவர்கள்தாம். ஆனால் நம்முடைய செயல்கள் மற்றும் செய்யும் விதம் ஆகியவற்றால் வேறுபடுகிறோம். நேர்மை, உழைப்பு, தரம் ஆகியவற்றால் பெருமையும், களவு, பொய்ம்மை, தீங்கான செயல்களால் சிறுமையும் அடைந்து மனிதர்களிடையே வேறுபாடு உண்டாகிறதே தவிர பிறக்கும் குலத்தைப் பொருத்து வேறுபாடுகள் உண்டாகாது.

# TNPSC குரூப்-II 2024 தேர்வு

1. **"வானாளும் செல்வமும் மண்ணரசும் யான்வேண்டேன்" – என்று பாடியவர்.**

   **A)** இராமலிங்க அடிகளார் **B)** சுந்தரர்
   **C)** நம்மாழ்வார் **D)** குலசேகரர்

**விளக்கம் :** **விடை: (D)**

**நாலாயிரத் திவ்ய பிரபந்தம் – பெருமாள் திருமொழி**

**ஆனாத செல்வத் தரம்பையர்கள் தற்சூழ**
**வானாளும் செல்வமும் மண்ணரசும் யான்வேண்டேன்**
**தேனார்பூஞ் சோலைத் திருவேங் கடச்சுனையில்**
**மீனாய்ப் பிறக்கும் விதியுடையே னாவேனே.**

– குலசேகர ஆழ்வார்.

**பொருளுரை :** குறைவற்ற அழகு வாய்ந்த வானுலக நடன மாதர்களாகிய அரம்பையர்கள் என்னைச் சூழ்ந்திருக்க, இந்திர உலகை ஆளும் வாய்ப்பும், இந்த மண்ணுலகை ஆளும் வாய்ப்பும் எனக்குக் கிட்டினாலும் அவற்றை நான் விரும்பமாட்டேன். தேன் நிரம்பிய மலர்ச் சோலைகளைக் கொண்ட திருவேங்கடம் என்னும் திருமலையிலுள்ள மலை ஊற்றில் வாழும் மீனாய்ப் பிறக்கின்ற நற்கதியினையே விரும்புகின்றேன்.

**ஆசிரியர் குறிப்பு :** பன்னிரு ஆழ்வார்களுள் ஒருவரான குலசேகர ஆழ்வார், சேரர் குலத்தில் திருவஞ்சைக்களத்தில், மன்னர் மரபில் பிறந்தவர். இவர் தமிழ் மற்றும் வடமொழி ஆகிய இரண்டிலும் புலமை மிக்கவராக விளங்கினார். திருமலையில் வெங்கடேசப் பெருமாள் கோயிலின் வாசற்படி குலசேகரப்படி என்று வழங்கப்படுகிறது.

2. **கொடுக்கப்பட்டுள்ள செய்தித்தாளையும் அதனை நிறுவியவர்களின் பெயர்களையும் பொருத்துக.**

   **a.** ரிச்சர்டு ஜான்சன் **1.** மதராஸ் கூரியர்
   **b.** G. P. பிள்ளை **2.** மதராஸ் மெயில்
   **c.** சார்லஸ் லாசன் மற்றும் ஹென்றி கார்னிஷ் **3.** மதராஸ் ஸ்டான்டர்டு
   **d.** G. சுப்பிரமணிய ஐயர் **4.** தி ஹிந்து

   **குறியீடுகள் :**

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| A) | 1 | 3 | 2 | 4 |
| B) | 1 | 2 | 3 | 4 |
| C) | 2 | 3 | 4 | 1 |
| D) | 3 | 2 | 1 | 4 |

**விளக்கம் :** **விடை : A**

**மதராஸ் கூரியர் :** 1785 ஆம் ஆண்டு அக்டோபர் 12 இல் மதராஸ் கூரியர் என்ற ஆங்கில வார இதழை வெளியிட்டவர் ரிச்சர்டு ஜான்சன் ஆவார்.

**மதராஸ் மெயில் :** 1868 ஆம் ஆண்டு டிசம்பர் 14 இல், சார்லஸ் லாசன் மற்றும் ஹென்றி கார்னிஷ் ஆகியோர் மதராஸ் மெயில் என்ற மாலை நாளிதழை முதன்முதலாக தமிழ்நாட்டில் வெளியிட்டனர். தமிழ்நாட்டிலும் இந்திய அளவிலும் வெளிவந்த முதல் மாலை நாளிதழ் ஆகும்.

**மதராஸ் ஸ்டான்டர்டு :** 1877 ஆம் ஆண்டு கோவிந்தன் பரமேஸ்வரன் பிள்ளை என்பவரால் மதராஸ் ஸ்டான்டர்டு என்ற பத்திரிகை தொடங்கப்பட்டது. இவர் இங்கிலாந்தில் பாரீஸ்டர் பட்டம் பெற்றவர். சுதந்திரப் போராட்ட வீரர். திருவனந்தபுரத்தைச் சேர்ந்த இவர் மதராஸ் மகாணத்தில் இந்தப் பத்திரிகையைத் தொடங்கினார். வாரத்தில் மூன்று நாள்கள் (Tri – Weekly) இந்த ஆங்கிலப் பத்திரிகை வெளிவந்தது. 1914 ஆம் ஆண்டு இந்தப் பத்திரிகையை அன்னிபெசண்ட் அம்மையார் வாங்கி, அதற்கு நியூ இந்தியா எனப் பெயரிட்டு நடத்தினார்.

**தி ஹிந்து :** G. சுப்பிரமணிய ஐயர் அவர்களால் 1878–ஆம் ஆண்டு இந்தப் பத்திரிகை வார இதழாகத் தொடங்கப்பட்டது. 1889–இல் இருந்து நாளிதழாக வெளிவந்து கொண்டிருக்கிறது.

3. **"நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி" என்ற பழமொழியில் 'இரண்டு' எதனைக் குறிக்கின்றது ?**

   **A)** பழமொழி **B)** திருக்குறள்
   **C)** நாலடியார் **D)** ஆத்திச்சூடி

**விளக்கம் :** **விடை : (B)**

''நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி'' என்ற பழமொழியில் குறிப்பிடப்பட்டுள்ள நாலும் என்ற சொல் நாலடியார் என்ற நூலையும், இரண்டு என்ற சொல் திருக்குறளையும் குறிக்கின்றன. நாலடியாரும் திருக்குறளும் வாழ்க்கைக்கு உறுதி தருகின்ற உயர்ந்த இலக்கியங்கள் என்ற பொருளில் மேற்கண்ட பழமொழி அமைந்துள்ளது.

4. **எதனை 'பனையளவு நன்றியாகக் கொள்வர்' என வள்ளுவர் குறிப்பிடுகிறார் ?**

   **A)** மூங்கில் அளவு நன்றி **B)** தினை அளவு நன்றி
   **C)** கடல் அளவு நன்றி **D)** மலை அளவு நன்றி

**விளக்கம் :** **விடை : (B)**

**திருக்குறள்**

**தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக்**
**கொள்வர் பயன்தெரி வார்.**

**பிரிவு :** அறத்துப்பால்
**இயல் :** இல்லறவியல்
**அதிகாரம் :** செய்ந்நன்றி அறிதல்
**அதிகாரம் எண் :** 11
**குறள் எண் :** 104

**பொருளுரை :** ஒருவன் தினையளவாகிய உதவியைச் செய்த போதிலும், அதன் பயனை நன்கு உணர்ந்தவர்கள். அதனைப் பனையளவு மிகப்பெரிய உதவியாகக் கருதிப் போற்றுவர்.

5. **"கல்லாரைக் காணுங்கால் கல்வி நல்காக்**
   **கசடர்க்குத் தூக்குமரம் அங்கே உண்டாம்" –**
   **இக்கவிதை வரிகளுக்கு உரியவர் யார் ?**

   **A)** பாரதிதாசன் **B)** கண்ணதாசன்
   **C)** வண்ணதாசன் **D)** வாணிதாசன்

**விளக்கம் :** **விடை : (A)**

**எல்லார்க்கும் எல்லாம் என்று இருப்பதான**
**இடம் நோக்கி நடக்கின்றது இந்த வையம்**
**கல்லாரைக் காணுங்கால் கல்வி நல்காக்**
**கசடர்க்குத் தூக்குமரம் அங்கே உண்டாம்**
**இல்லாரும் அங்கில்லை ; பிறன் நலத்தை**
**எனதென்று தனியொருவன் சொல்லான் அங்கே!**
**நல்லாரே எல்லாரும் அவ்வை யத்தில்**
**நமக்கென்ன கிழியட்டும் பழம்பஞ் சாங்கம்!**

– பாரதிதாசன்

பாரதிதாசன் இயற்றிய **பாண்டியன் பரிசு** என்ற நூலில் மேற்கண்ட பாடலடிகள் இடம்பெற்றுள்ளன. வருங்கால உலகைக் கற்பனை செய்து பாவேந்தர் பாடிய பாடல் இது.

6. **இலக்கியம், இசை, நாடகம் ஆகியவற்றில் தேர்ச்சி பெற்ற தமிழ்ப் பெண்கள் ––– என்று அழைக்கப்பட்டனர்.**

   **A)** முதுக்குரவை **B)** மூதின்மகளிர்
   **C)** விறலியர் **D)** கணிகையர்

**விளக்கம் :** **விடை : A**

✦ சங்ககாலத்தில் பெண்கள் கல்வியில் சிறந்து விளங்கினர். பெண்களுக்கு இலக்கியம் (இயல்) , இசை, நாடகம் ஆகிய முத்தமிழும் கற்பிக்கப்பட்டது, முத்தமிழிலும் தேர்ச்சி பெற்ற பெண்கள் முதுக்குரவை என்று அழைக்கப்பட்டனர்.

SURA'S

**பொருள் :** எவ்வளவு சிறியதாயினும் எக்காலத்திலும் எவரிடத்திலும் சரி, மனத்தால் கூடத் தீமையைச் செய்யாதிருத்தலே முதன்மையான சிறப்பாகும்.

**19. "............. தன்நீர்மை குன்றும் தடிந்து எழிலி தான் நல்காதாகி விடின்" – என்ற குறளில் எது குன்றும் என்றும் திருவள்ளுவர் கூறுகிறார் ?**

A) ஏரின் உழாஅர் B) தானம்
C) நெடுங்கடல் D) பூசனை

**விளக்கம் :** **விடை: (C)**

**திருக்குறள்**

**நெடுங்கடலும் தன்நீர்மை குன்றும் தடிந்தெழிலி**
**தான்நல்கா தாகி விடின்**

பிரிவு : அறத்துப்பால், இயல் : பாயிரவியல்
அதிகாரம் : வான் சிறப்பு (2), குறள் எண் : 17

**பொருள் :** கடலிலிருந்து நீரை முகர்ந்து கொண்டு செல்லும் மேகமானது, அதனிடத்திலே பெய்யாமல் விடுமானால், பெரிய கடலும் தன் வளம் குன்றி விடும்.

**விளக்கம் :** ஆவியான கடல் நீர் மேகமாகி, அந்தக் கடலில் மழையாகப் பெய்தால்தான் கடல் கூட வற்றாமல் இருக்கும். கடல் நீரை ஆவியாக்கி ஆகாயத்திற்குக் கொண்டு செல்கின்ற மேகங்கள் (தடிந்தொழிலி) ஒன்றாகச் சேர்ந்து இடியிடித்து பெருமழையாகப் பெய்தால்தான் அது கடலுக்குப் போய்ச்சேரும். சிறிய மேகங்களால் கிடைக்கும் சிறிய அளவிலான மழை நிலத்தோடு நின்று விடும். உலகில் மூன்றில் ஒரு பாகமானது கடல் என்பதால்தான் நெடுங்கடலும் என்றார் வள்ளுவர்.

**20. "....... இவ்விரண்டும்**
**கண்ணென்ப வாழு முயிர்க்கு"**
**மேற்காணும் திருக்குறளில் எவை இரண்டைத் திருவள்ளுவர் கண்களுக்கு ஒப்பாகக் கூறுகிறார் ?**

A) அறமும் பொருளும்
B) நடுவு நிலைமையும் அடக்கமுடைமையும்
C) பொருளும் இன்பமும்
D) எண்ணும் எழுத்தும்

**விளக்கம் :** **விடை: (D)**

**திருக்குறள்**

**எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்**
**கண்ணென்ப வாழும் உயிர்க்கு.**

பிரிவு : பொருட்பால் இயல் : அரசியல்
அதிகாரம் : கல்வி (40) குறள் எண் : 392

**பொருள் :** எண்களை அடிப்படையாகக் கொண்ட கணித அறிவியலும் எழுத்துகளை அடிப்படையாகக் கொண்ட கலையியலும் மனிதர்களுக்கு இரு கண்கள் போன்றவை.

**விளக்கம் :** அனைத்துக் கலைகளும் எண்ணூல் மற்றும் இலக்கியம் என இரு பிரிவுகளாகப் பகுக்கப்படும். எண் என்பதற்கு கணிதம் என்று ஒரு பொருள் உள்ளது; எண்ணம் என்று ஒரு பொருளும் உள்ளது. எனவே எண் என்பது கணிதம் மற்றும் எண்ணங்களால் உருவாகும் தர்க்க அறிவு ஆகியவற்றைக் குறிக்கிறது. இலக்கியம் என்பது மற்ற அனைத்து அறிவுத் துறைகளும் ஆகும். சிற்பம், ஓவியம், கட்டடக் கலை, நாட்டிய மேடை அமைப்பு, இசை, வணிகம் என எந்தத் துறையாக இருந்தாலும் அதற்கு கணிதமே அடிப்படையாகும். எழுத்தினால் பெறும் கல்வி ஒருவனைச் சான்றோனாக்குவதுடன், வாழ்வியல் நெறிகளைக் கற்றுக் கொடுக்கிறது. எனவே எண், எழுத்து ஆகிய இரண்டும், இரு கண்கள் போன்றவை என வள்ளுவர் வலியுறுத்தியுள்ளார்.

**21. இன்ப துன்பத்தை ஒன்றாக ஏற்றுக் கொள்ளும் மனப் பக்குவத்தை எந்த மலருக்குக் கம்பர் ஒப்புமை செய்கிறார் ?**

A) மல்லிகை B) தாமரை
C) லில்லி D) முல்லை

**விளக்கம் :** **விடை: (B)**

**கம்பராமாயணம்**

**இப்பொழு தெம்ம னோரால்**
**இயம்புதற் கெளிதோ ? யாரும்**
**செப்பருங் குணத்து ராமன்**
**திருமுகச் செவ்வி நோக்கின்,**
**ஒப்பதே முன்பு பின்பு அவ்**
**வாசகம் உணரக் கேட்ட**
**அப்பொழு தலர்ந்த செந்தா**
**மரையினை வென்ற தம்மா !**

பிரிவு : அயோத்தியா காண்டம்
படலம் : கைகேயி சூழ்ச்சிப் படலம்
பாடல் எண் : 112

**பொருள் :** எப்படிப்பட்டவர்களாலும் சொல்ல முடியாத குணத்தை உடைய இராமனின் திருமுகத்தின் அழகை இப்பொழுது பார்த்தால், என் போன்றவர்களால் சொல்வதற்கு எளிதாகுமோ ? இராமனுடைய முகம் முன்பு, அன்றலர்ந்த செந்தாமரையைப் போல இருந்தது. இப்போது கைகேயியின் சொற்களைக் கேட்ட பின்பு, அந்த மலரை வென்று விட்டது.

**விளக்கம் :** இராமனுடைய திருமுகத்தின் அழகை என் போன்றவர்களால் விவரிக்க இயலாது என்ற முன்னுரையுடன் இந்தப் பாடலைத் தொடங்கியுள்ளார். இராமனுடைய திருமுகத்தின் அழகை மூன்று காலங்களிலும் பார்க்கிறார் கம்பர், கைகேயியின் கடுஞ்சொல்லைக் கேட்பதற்கு முன் ஒரு நிலை ; கேட்ட பொழுது ஒரு நிலை ; கேட்ட பின்பு ஒரு நிலை. கேட்கும் முன்பு அன்றலர்ந்த செந்தாமரை மலர் போல இருந்த முகம், கேட்ட பின்பு வாடி விடாமல் முன்பிருந்ததை விட மகிழ்ச்சியாகத் தென்பட்டது என்பதை விளக்குவதற்காக, செந்தாமரையினை வென்றது என்று கூறியுள்ளார்.

**குறிப்பு :** இன்பத்தையும் துன்பத்தையும் ஒன்றாக ஏற்றுக்கொள்ளும் மனப்பக்குவத்தை உடைய இராமனின் முகத்திற்குத்தான், செந்தாமரையை கம்பர் உவமைப்படுத்தியுள்ளார். இராமனின் மனப்பக்குவத்திற்கு இல்லை.

**22. "மருதநில நந்தா விளக்கம்" எனச் சிறப்பிக்கப் பெறும் சிற்றிலக்கிய வகை**

A) உலா B) பள்ளு
C) பரணி D) பிள்ளைத் தமிழ்

**விளக்கம் :** **விடை: (B)**

பள்ளு என்பது 96 சிற்றிலக்கிய வகைகளுள் ஒன்றாகும். இந்த இலக்கியம் மருத நிலத்தை அடிப்படையாகக் கொண்டது. பள் என்பது பயிர்த் தொழில் செய்வதற்கு ஏற்றவாறு நீர் தேங்கும் பள்ளமான நன்செய் நிலத்தையும் அங்கு நடைபெறும் உழவினையும் குறிக்கிறது. பாமர மக்களுக்கு முதன்மை கொடுத்து உருவாக்கப்பட்ட இலக்கிய வகைகளுள் இது முதன்மையானதாகும். ஏனையவை குறவஞ்சி, நொண்டி நாடகம் முதலியனவாகும். இது உழத்திப்பாட்டு என்ற பெயரிலும் குறிக்கப்படுகிறது.

**23. யாருடைய சொற்றொடர் என்பதைச் சரியாக அறிந்திடுக. "பழங்களை அதிகம் கொண்டுள்ள மரங்களைச் சுற்றிலும் பறவைகள் பறந்து வருவது போல நான் மிகவும் பெரிய கரிகாலனின் அரண்மனை அவைக்குச் சென்றேன்"**

A) கபிலர் B) முடத்தாமக்கண்ணியார்
C) நெடுங்கிள்ளியார் D) ஆளவந்தார்

**விளக்கம் :** **விடை: (B)**

**பொருநராற்றுப்படை**

**பழுமரம் உள்ளிய பறவையின், யானுமவன்**
**இழுமென் சும்மை இடனுடை வரைப்பின்**
**நசையுநர்த் தடையா நன்பெரு வாயில்**
**இசையேன் புக்கு, என்இடும்பை தீர**

**ஆசிரியர் :** முடத்தாமக்கண்ணியார் (பெண்பாற் புலவர்)

**பாடலடிகள் :** 64 68

கூற்றிற்கு உரியோர் : கரிகாலனிடம் பரிசு பெற்ற பொருநன், பரிசில் பெறுவதற்குச் செல்லும் பொருநன் ஒருவனிடம் கூறுவது.

**பொருள் :** நானும் முன்பு உன்னைப் போல வறுமையுற்றிருந்த போது, பழுத்த பழ மரங்களை விரும்பித் தேடிச் செல்லும் பறவை போல, இழுமென்னும் ஓசையுடன் பல்வேறு வகையான இசைக் கருவிகளிலிருந்து ஒலித்துக் கொண்டிருக்கும், மிகப்பெரிய இடப்பரப்பை உடைய, கரிகாற் பெருவளத்தானின் அரண்மனைக்குச் சென்றேன் என்று பரிசில் பெற்ற பொருநன் கூறினான்.

**24. 'நெஞ்சாற்றுப்படை' என்னும் வேறு பெயர் கொண்ட பத்துப்பாட்டு நூல் எது ?**

**A)** குறுந்தொகை **B)** முல்லைப்பாட்டு
**C)** சிறுபாணாற்றுப்படை **D)** திருமுருகாற்றுப்படை

**விளக்கம் :** **விடை: (B)**

பத்துப்பாட்டு நூல்களுள் ஒன்றான முல்லைப்பாட்டு என்ற நூலின் ஆசிரியர் நம்பூதனார் ஆவார். இஃது அகத்திணை நூலாகும். போர் பாசறையில் இருக்கும் அரசன் மற்றும் அரண்மனையில் இருக்கும் அரசி ஆகியோரின் பிரிவுத் துயர் குறித்து இந்நூலில் பாடப்பட்டுள்ளது. இந்நூலின் தலைவி , நெஞ்சை ஆற்றுப்படுத்தி இருக்கும் நிலையைக் குறிப்பதால் இந்நூல் நெஞ்சாற்றுப்படை எனவும் வழங்கப்படுகிறது.

**25. அரிக்கமேடு தொல்லியல் ஆய்வுகளின் கூற்றுகளில் கீழ்க்கண்டவைகளில் சரியானது எது ?**

**A)** அரிக்கமேடு தஞ்சாவூர் மாவட்டத்தில் அமைந்துள்ளது
**B)** இது ஒரு சோழர்களின் துறைமுகம்
**C)** இத்துறைமுகம் ரோம் நாட்டுடன் வாணிப உறவு கொண்டிருந்தது.
**D)** அரிக்கமேடு துறைமுகம் காவேரிப்பட்டணம், அழகன்குளம் மற்றும் முசிறி துறைமுகங்களுடன் நெருங்கிய வணிகத் தொடர்பு கொண்டிருந்தது.

**சரியான விடையளி :**

**A)** (1), (2) சரியானது (3), (4) தவறானது
**B)** (1), (2), (3) சரியானது (4) தவறானது
**C)** (2), (3), (4) சரியானது (1) மட்டும் தவறானது
**D)** (1), (3), (4) சரியானது (2) மட்டும் தவறானது

**விளக்கம் :** **விடை: (C)**

அரிக்கமேடு தொல்லியல் ஆய்வுக் களம் புதுச்சேரியில் அமைந்துள்ளது. இது சோழ மன்னர்களின் ஆட்சிக்குட்பட்ட பண்டைய துறைமுக நகரங்களுள் ஒன்றாகும். இங்கு மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளில் சோழர் காலத்து நாணயங்கள், உரோமாபுரியைச் சேர்ந்த நாணயங்கள், மட்கலன்களான அரிட்டைன், ஆம்போரா மதுக் குடுவைகள், ரௌலட்டட் எனப்படும் தட்டு வகைகள், டைபிரியன் தினாரிஸ் நாணயங்கள், கான்ஸ்டான்டைன் மன்னரின் செப்பு நாணயங்கள் மற்றும் பலவகையான அணிகலன்களும் கிடைத்துள்ளன. உரோமாபுரியுடன் நேரடி கடல் வணிகத்தை மேற்கொண்ட துறைமுகங்களுள் அரிக்கமேடு மிக முக்கியமான ஆய்வுக் களமாகும்.

**26. 'கண்ணகி'க்கு .................. ஆல் கோயில் கட்டப்பட்டது.**

**A)** கரிகாலன் **B)** செங்குட்டுவன்
**C)** உக்ரபெருவழுதி **D)** நெடியோன்

**விளக்கம் :** **விடை: (B)**

சிலப்பதிகாரத்தை இயற்றிய இளங்கோவடிகளின் மூத்த சகோதரன் சேர மன்னன் செங்குட்டுவன் ஆவான். சேரன் செங்குட்டுவன், துறவியாக இருந்த இளங்கோவடிகளைக் காணச் சென்ற போது சீத்தலைச் சாத்தனார் மூலம் கண்ணகியின் வரலாற்றை அறிந்து கொண்டான். கண்ணகிக்கு கோயில் கட்ட வேண்டும் என்று விரும்பிய செங்குட்டுவன் இமயமலையிலிருந்து கற்களை எடுத்து வந்து கோயில் கட்டினான். வட நாட்டில் தன்னை எதிர்த்துப் போரிட்டு தோல்வியுற்ற கனக – விஜயர் என்ற மன்னர்களின் தலை மீது கண்ணகி சிலை செய்வதற்கான கற்களைச் சுமக்க வைத்து கொண்டு வந்தான். அந்தக் கோயில் தமிழக – கேரள எல்லையில் இருந்தாலும், அதன் பராமரிப்பை கேரளா அரசே மேற்கொண்டு வருகிறது. இக்கோயிலின் திறப்பு விழாவிற்கு இலங்கை மன்னன் கயவாகு வந்ததாக சிலப்பதிகாரத்திலும், சிங்கள வரலாற்று நூலான மகாவம்சத்திலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

**27. 1857 புரட்சியின் போது ராணி லட்சுமி பாய் பற்றி "கிளர்ச்சியாளர்களில் ஒரே ஆணாக இருந்த பெண் இங்கே கிடத்தப்பட்டு இருக்கிறார்" என்று யார் குறிப்பிட்டார் ?**

**A)** ஜெனரல் ஹக் ரோஸ் **B)** ஜான் லாரன்ஸ்
**C)** கர்னல் ஸ்மித் **D)** கர்னல் வீலர்

**விளக்கம் :** **விடை: (A)**

1857 பெருங்கிளர்ச்சியின் போது ஜான்ஸியில் இருந்து, ஆங்கிலேயர்களுக்கு எதிராகப் போராடியவர் இராணி லட்சுமிபாய் ஆவார். ஆங்கிலேயப் படைகளைத் துணிவுடன் எதிர்த்துப் போரிட்ட லட்சுமி பாய் ஆங்கிலேயர்களிடமிருந்து ஜான்ஸியைக் காப்பாற்றினார். பின்னர் அடுத்தடுத்து நடைபெற்ற போர்களில் துணிவுடன் போராடினாலும் ஆங்கிலேய ராணுவத்தை எதிர்க்க முடியாமல், தாந்தியாதோப், ராவ் சாஹிப் ஆகியோருடன் இணைந்து ஜான்ஸியை விட்டு வெளியேறி, கல்பியை அடைந்தார். அங்கும் ஆங்கிலேயர்களுடன் போர் நடைபெற்றது. அங்கிருந்து குவாலியருக்குத் தப்பிச் சென்றனர். ஆங்கிலேயப் படைகள் குவாலியர் மீது படையெடுத்துச் சென்றன. படைகளைக் கண்டதும் ஆங்கிலேய அரசுக்கு ஆதரவாக இருந்த குவாலியர் அரசர் சிந்தியா தப்பியோடிவிட்டார். முதலில் நடைபெற்ற போரில் ஜான்ஸி ராணி ஆங்கிலேயருடன் போரிட்டு குவாலியரைக் கைப்பற்றினார். ஜூன் 8, 1858 ஆம் ஆண்டு நடைபெற்ற குவாலியர் போரில், ஆங்கிலேயப் படைத்தளபதி, ஹக் ரோஸ் (General Hugh Rose) தன்னுடைய படைகளுடன் ராணி லட்சுமி பாயுடன் போரிட்டார். தன் உயிர் பிரியும் வரை துணிச்சலுடன் போரிட்ட ராணி லட்சுமி பாய் போரின் இறுதியில் வீரமரணமடைந்தார். ராணி லட்சுமி பாய் வீரமரணமடைந்த போது அவரின் வயது 23 ஆகும். ஆங்கிலேயப் படைத்தளபதி ஹக் ரோஸ், கிளர்ச்சியாளர்களில் ஒரே ஆணாக இருந்த பெண் இங்கே கிடத்தப்பட்டு இருக்கிறார் என்று ராணி லட்சுமி பாயின் வீரத்தைப் பாராட்டும் விதமாகக் கூறினார்.

# உதவி ஜெயிலர் தேர்வு 2023

**1. நாடகம் பற்றிய செய்தியில் மிகச் சரியான கூற்றைத் தேர்ந்தெடுக்கவும்.**

**A)** நடிப்பதற்கு மட்டுமே உரியது நாடகம்
**B)** படிப்பதற்கு மட்டுமே உரியது நாடகம்
**C)** பார்ப்பதற்கு மட்டுமே உரியது நாடகம்
**D)** நடிப்பதற்கு மட்டுமே உரிய நாடகம், படிப்பதற்கு மட்டுமே உரிய நாடகம், நடிப்பதற்கும் மற்றும் படிப்பதற்கும் உரிய நாடகம் என நாடகத்தை மூவகையாக M. வரதராசன் வகைப்படுத்துகிறார்.

**விளக்கம் :** **விடை : (D)**

**நாடகம்:**

படைப்பிலக்கிய வகைகளில் கல்வி அறிவு இல்லாதவர்களும் அறிந்து கொள்ளும் இலக்கிய வகை நாடக இலக்கியமாகும். படித்து மகிழும் இலக்கியமாக இதனைப் பார்ப்பதைவிட,பார்த்து மகிழும் இலக்கிய வகையாக இதனைக் கொள்ளலாம். நாடக இலக்கிய வகையைப் பொறுத்தவரை தமிழில் சங்க காலத்தை அடுத்து எழுதப்பட்ட சிலப்பதிகாரமே முதல் நாடக இலக்கியம் என்று கூறுவர்.

தமிழில் இடைக்காலத்தில் தோன்றிய பள்ளு, குறவஞ்சி, நொண்டி நாடகம் போன்ற இலக்கிய வகைகளும் நாடக இலக்கிய வகையைச் சார்ந்தவையே.

பிற்காலத்தில் சீர்காழி அருணாசலக் கவிராயரின் இராம நாடகமும், கோபால கிருஷ்ண பாரதியாரின் நந்தனார் சரித்திர கீர்த்தனையும் நாடக இலக்கிய வளர்ச்சிக்கு வித்திட்டன.நடிப்பதற்கு மட்டுமே உரிய நாடகம், படிப்பதற்கு மட்டுமே உரிய நாடகம் நடிப்பதற்கும் மற்றும் படிப்பதற்கும் உரிய நாடகம் என நாடகத்தை மூவகையாக ஆ.வரதராசன் வகைப்படுத்துகிறார்.

SURA'S

**2. "இன்பத் தமிழ்க் கல்வி யாவரும் கற்றவர் என்றுரைக்கும் நிலை எய்திவிட்டால் துன்பங்கள் நீங்கும், சுகம் வரும் நெஞ்சினில் தூய்மை யுண்டாகிடும், வீரம் வரும்" – எனப் பாடியவர் யார்?**

**A)** பாரதியார்
**B)** பாரதிதாசன்
**C)** பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம்
**D)** சுரதா

**விளக்கம் :** **விடை : (B)**

தமிழ்ப்பேறு

**இன்னலிலே தமிழ் நாட்டினிலேயுள்ள**
**என்தமிழ் மக்கள் துயின்றிருந்தார்**
**அன்னதோர் காட்சி இரக்கமுண்டாக்கியென்**
**ஆவியில் வந்து கலந்ததுவே**
**இன்பத் தமிழ்க் கல்வி யாவரும் கற்றவர்**
**என்றுரைக்கும் நிலை எய்தி விட்டால்**
**துன்பங்கள் நீங்கும் சுகம் வரும் நெஞ்சினில்**
**தூய்மை உண்டாகிடும் வீரம் வரும் !**

இப்பாடலை பாடியவர் பாவேந்தர் பாரதிதாசன் ஆவார்.இப்பாடல் வரிகள் பாரதிதாசன் கவிதைகள் என்னும் தொகுப்பில் தமிழ்ப்பேறு என்னும் தலைப்பில் இடம்பெற்றுள்ளது. பாண்டியன் பரிசு, அழகின் சிரிப்பு, இசையமுது, இருண்ட வீடு, குடும்ப விளக்கு, கண்ணகி புரட்சிக் காப்பியம் உள்ளிட்ட பல நூல்களையும் பாரதிதாசன் எழுதியுள்ளார்.

**3. நிலம் அளப்பதற்கு ஏர், நிவர்த்தனம், பட்டிகை என்ற முறைகள் யாருடைய காலத்தில் கையாளப்பட்டன ?**

**A)** சோழர் காலம் **B)** சேரர் காலம்
**C)** பாண்டியர் காலம் **D)** பல்லவர் காலம்

**விளக்கம் :** **விடை : (D)**

**பல்லவ நிர்வாகம்**

நிலவுடைமை உரிமை அனைத்தும் அரசரிடமே இருந்தது. அவர் அதிகாரிகளுக்கு வருவாய் மானியங்களையும் பிராமணர்களுக்கு நில மானியங்களையும் வழங்கினார்.

அரசருக்குச் சொந்தமான நிலங்கள் குடியானவர்களுக்குக் குத்தகைக்கு விடப்பட்டன. குத்தகைக்கான கால அளவைப் பொருத்து கிராமங்களின் தகுதி நிர்ணயிக்கப்பட்டது.

பல்வேறு சாதிகளைக் கொண்ட கிராமங்கள் நிலவரி செலுத்தின. பிராமணர்களுக்குக் கொடையாக வழங்கப்பட்ட பிரம்மதேய கிராமங்களுக்கு வரி இல்லை.

கோயில்களுக்குக் கொடையாக வழங்கப்பட்டவை தேவதான கிராமங்கள் எனப்பட்டன.இவற்றின் வருவாயை கோயில் நிர்வாகிகள் பெற்றுக் கொண்டனர். அரசுக்கு செலுத்த வேண்டியதில்லை.

நிலம் அளப்பதற்கு ஏர், நிவர்த்தனம், பட்டிகை என்ற முறைகள் பல்லவர் காலத்தில் கையாளப்பட்டன

**4. 2021–ஆம் ஆண்டிற்காக 'பேரறிஞர் அண்ணா விருது' யாருக்கு வழங்கப்பட்டது ?**

**A)** நாஞ்சில் சம்பத் **B)** பாரதி கிருஷ்ணன் குமார்
**C)** டாக்டர் மு. ராஜேந்திரன் **D)** சுகி சிவம்

**விளக்கம் :** **விடை : (A)**

**பேரறிஞர் அண்ணா விருது**

தமிழ் சமுதாயம் முன்னேற்றம் காண அயராது பாடுபடும் ஒருவருக்கு தமிழ்நாடு அரசின் தமிழ் வளர்ச்சித் துறையின் மூலம் ஆண்டுதோறும் அளிக்கப்படும் விருதுகளில் பேரறிஞர் அண்ணா விருது ஒன்றாகும். இந்த விருது 2006 ஆம் ஆண்டு முதல் வழங்கப்படுகிறது. அதன்படி 2021–ம் ஆண்டிற்காக 'பேரறிஞர் அண்ணா விருது' தமிழ்ப் பேச்சாளர் நாஞ்சில் சம்பத்துக்கு வழங்கப்பட்டது.

**5. கள்ளுண்பாரைத் திருவள்ளுவர் எதனை உண்பாருக்கு நிகராகக் கூறுகிறார் ?**

**A)** பாலுண்பார் **B)** தேனுண்பார்
**C)** நஞ்சுண்பார் **D)** அமுதுண்பார்

**விளக்கம் :** **விடை : (C)**

**திருக்குறள் :**

**துஞ்சினார் செத்தாரின் வேறல்லர் எஞ்ஞான்றும்**
**நஞ்சுண்பார் கள்ளுண் பவர்.**

**பொருள் :** உறங்கினவர் இறந்தவரை விட வேறுபட்டவர் அல்லர், அவ்வாறே கள்ளுண்பவரும் அறிவு மயங்குதலால் நஞ்சு உண்பவரே ஆவர். எனவே, கள்ளுண்பாரைத் திருவள்ளுவர் நஞ்சுண்பவருக்கு நிகராகக் கூறுகிறார்.

**6. 'தெளிவு குருவின் திருமேனி காண்டல்' என்று உரைக்கும் பாடல் எது ?**

**A)** திருக்குறள் **B)** திருமந்திரம்
**C)** ஆசாரக்கோவை **D)** பழமொழி நானூறு

**விளக்கம் :** **விடை : (B)**

திருமந்திரம்

**தெளிவு குருவின் திருமேனி காண்டல்**
**தெளிவு குருவின் திருநாமம் செப்பல்**
**தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல்**
**தெளிவு குருவுரு சிந்தித்தல் தானே**

**பொருள்:** கடமை, கட்டுப்பாடு, கீழ்ப்படிதல் எனும் முச்சொல்லின் முகிழ்ப்பே சீடன் என்னும் மாணவன் ஆவான். ஆசிரியாகள், மாணவர்கள் இடையே மதிப்பும், நம்பிக்கையும் இழையோட வேண்டும் என திருமூலரின் திருமந்திரப் பாடல் குருவின் பெருமையை பற்றி கூறுகின்றன.

**7. "மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன் ஆகுல நீர பிற" – இக்குறளின் அடிப்படையில்**

**கூற்று (A) :** **மனம் தூய்மையாயிருப்பின் அதன் வழிப்பட்ட முக்கரண வினைகளும் தூய்மையாயிருக்கும் ஆதலின், மாசிலா மனமே அறத்திற்கு அடிப்படை.**

**காரணம் (R) :** **மனம் தூயதாயிருப்பின் வெளிக்கோலம் வேண்டாதது ஆகிவிடும். மனம் தீய–தாக இருப்பின் வெளிக்கோலம் பிறரை ஏமாற்றுவதாக ஆகிவிடும். இருவழிகளினாலும் பயனின்மை நோக்கி வெளிக்கோலத்தை வீண் ஆரவாரமென்றார்.**

**சரியான விடையளி :**

**A)** கூற்று (A), காரணம் (R) இரண்டும் தவறு. இவை குறளை விளக்குவன அல்ல.
**B)** கூற்று (A) சரி, காரணம் (R) தவறு.
**C)** கூற்று (A) தவறு ; காரணம் (R) சரி.
**D)** கூற்று (A), காரணம் (R) இரண்டும் சரி. இவை குறளின் பொருளை சரியாக விளக்குகின்றன.

**விளக்கம் :** **விடை : (D)**

**திருக்குறள்**
**மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்**
**ஆகுல நீர பிற.**

**பொருள் :** ஒருவன் தன்மனதில் குற்றம் இல்லாதவானாக இருக்க வேண்டும். அறம் அவ்வளவே; மனத்தூய்மை இல்லாத மற்றவை ஆரவாரத் தன்மை உடையவை.

மனம் தூய்மையாயிருப்பின் அதன் வழிப்பட்ட முக்கரண வினைகளும் தூய்மையாயிருக்கும் ஆதலின், மாசிலா மனமே அறத்திற்கு அடிப்படை.

மனம் தூயதாயிருப்பின் வெளிக்கோலம் வேண்டாதது ஆகிவிடும். மனம் தீயதாக இருப்பின் வெளிக்கோலம் பிறரை ஏமாற்றுவதாக ஆகிவிடும். இருவழிகளினாலும் பயனின்மை நோக்கி வெளிக்கோலத்தை வீண் ஆரவாரமென்றார்.

**8. புதுக்கவிதைகளில் பழங்கதையைத் துணையாகக் கொண்டு ஒரு கருத்தை விளக்குவதற்குப் பயன்படுத்தப்படும் உத்திமுறை**

**A)** படிமம் **B)** தொன்மம்
**C)** குறியீடு **D)** இவற்றில் ஏதுமில்லை

**விளக்கம் :** **விடை : (B)**

தொன்மம் (myth) என்றால் பழங்கதை, புராணம் என்றெல்லாம் பொருள் உள்ளது. தொல்காப்பியர் குறிப்பிடும் வனப்புகளுள் 'தொன்மை' என்பதுவும் ஒன்றாகும். காலம்காலமாக உருவாக்கப்பட்டு இறுகிவிட்ட கருத்து வடிவங்களும் தொன்மங்களே. தொன்மம் என்னும் சொல் இவை அனைத்தையும் குறிக்கும். ஆனால், கவிதையில் அது பழங்கதையைத் (புராணத்தை) துணையாகக் கொண்டு ஒரு கருத்தை விளக்குவதையே குறிக்கிறது.புதுக்கவிதைகளில் பழங்கதையைத் துணையாகக் கொண்டு விளக்குவதற்குப் பயன்படுத்தப்படும் உத்திமுறை தொன்மம் எனப்படும்.

9. **சரியான விடையைத் தேர்க.**

1) பொய்கையாழ்வார் 'வையந் தகளியா வார்கடலே நெய்யாக' என்னும் பாடலைப் பாடினார்.
2) பூதத்தாழ்வார் 'திருக்கண்டேன் பொன்மேனிக் கண்டேன்' என்னும் பாடலைப் பாடினார்.
3) பேயாழ்வார் 'அன்பே தகளியா ஆர்வமே நெய்யாக' என்னும் பாடலைப் பாடினார்.
4) பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார் ஆகிய இம்மூவரும் ஒரு காலத்தவர்.

**சரியான விடையளி :**

**A)** (1), (3) சரி, (2), (4) தவறு
**B)** (1), (4) சரி, (2), (3) தவறு
**C)** (1), (2) சரி, (3), (4) தவறு
**D)** (1), (2) தவறு, (3), (4) சரி

**விளக்கம் :** **விடை : (B)**

**1. பொய்கையாழ்வார் பாடல்**

**வையம் தகளியா வார்கடலே நெய்யாக**
**வெய்ய கதிரோன் விளக்காகச் - செய்ய**
**சுடர் ஆழியான் அடிக்கே சூட்டினேன் சொல்மாலை**
**இடர்ஆழி நீங்குகவே என்று**

**2. பேயாழ்வார் பாடல்**

**திருக்கண்டேன்; பொன்மேனி கண்டேன் திகழும்**
**அருக்கன் அணிநிறமும் கண்டேன் - செருக்கிளரும்**
**பொன்னாழி கண்டேன்; புரிசங்கம் கைக்கண்டேன்**
**என்னாழி வண்ணன்பால் இன்று**

**3. பூதத்தாழ்வார் பாடல்**

**அன்பே தகளியா ஆர்வமே நெய்யாக**
**இன்புருகு சிந்தை இடுதிரியா - நன்புருகி**
**ஞானச் சுடர் விளக்கு ஏற்றினேன் நாரணற்கு**
**ஞானத் தமிழ் புரிந்த நான்**

4. பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார் ஆகிய இம்மூவரும் 6–ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவர்கள் ஆவர்.

10. **தமிழ்ச் சமூகத்தில் மகளிர்க்குக் கற்பின் குறியீடாக அமையும் மலர் எது ?**

**A)** மல்லிகை **B)** ரோஜா
**C)** முல்லை **D)** அல்லி

**விளக்கம் :** **விடை : (C)**

**குறிஞ்சிப்பாட்டு**

குறிஞ்சித்திணை பற்றிக் கூறுவதால் இதற்குக் குறிஞ்சிப்பாட்டு என்னும் பெயர் அமைந்தது. இது ஆரிய அரசன் பிரகத்தனைத் தமிழ் அறிவித்தற்குக் கபிலர் பாடியது. இதனை உரையாசிரியர்கள் பெருகுறிஞ்சி என்றும் வழங்கியுள்ளனர். இது 261 அடிகளைக் கொண்டது.

இது தோழி செவிலிக்கு அறத்தொடு நிற்கும் துறையில் அமைந்தது. தலைமகள் தினைப்புனம் காத்த வகையும் புனலாடியதும் பூக்கொய்தலும் ஓவியமாகத் தீட்டப்பட்டுள்ளன. இதில் செங்காந்தள் தொடங்கி மலை எருக்கம் பூ வரை 99 பூக்களின் பெயர்கள் இடம் பெற்றுள்ளன. முல்லை மலர் தமிழ்ச் சமூகத்தில் மகளிர்க்குக் கற்பின் குறியீடாக அமைந்துள்ளது.

11. **பின்வரும் சங்க இலக்கிய நூல்களில், சங்க காலத்து சேரர்களைப் பற்றிக் குறிப்பிடும் நூல் எது ?**

**A)** பரிபாடல் **B)** பதிற்றுப்பத்து
**C)** கலித்தொகை **D)** புறநானூறு

**விளக்கம் :** **விடை : (B)**

**பதிற்றுப்பத்து**

எட்டு சேர அரசர்கள் குறித்தும் அவர்கள் ஆண்ட பகுதிகள், அவர்களது சாதனைகள் குறித்தும் பதிற்றுப்பத்து கூறுகிறது. இது சேர மன்னர் பதின்மர் பற்றிய நூல், பத்துப் புலவர்கள் பாடியது.ஒரு மன்னருக்குப் பத்துப் பாடல்கள் என்னும் முறையில் நூறு பாடல்கள் கொண்டது. முதற் பத்தும் இறுதிப் பத்தும் மறைந்தன. ஒவ்வொரு பத்தின் இறுதியிலும் ஒரு பதிகம் உள்ளது. அதில் பாடியவர் பெயர், செய்யுட்களின் பெயர், புலவர்கள் பெற்ற பரிசில், அவ்வரசரின் ஆட்சிக்கால அளவு முதலிய செய்திகள் இடம் பெற்றுள்ளன.

# TNPSC குரூப்-I 2022 தேர்வு

1. **எந்தக் காலகட்டத்தில் நான்கு கைகளுடன் கூடிய நடராஜரின் வெண்கலச் சின்னங்கள் வார்க்கப்பட்டன ?**

**A)** சேரர் காலம் **B)** சோழர் காலம்
**C)** பாண்டிர் காலம் **D)** சுங்க காலம்

**விளக்கம் :** **விடை: (B)**

நடராஜரின் புகழ்பெற்ற வெண்கல உருவம் சோழர்களின் கலைக்கு மிகச் சிறந்த எடுத்துக்காட்டாகும். நான்கு கைகளுடன் கூடிய நடராஜர் சிலைகள் வெண்கலம், செம்பு, ஐம்பொன் ஆகிய உலோகங்களால் சோழர் காலத்தில் வார்க்கப்பட்டன. நான்கு கைகளுடன் கூடிய நடராஜர் சிலையின் உருவம் 'ஆனந்தத் தாண்டவம்' எனப்படுகிறது. சைவ ஆகமங்களிலும் சிற்ப நூல்களிலும் கூறப்பட்டுள்ள நடராஜரின் தோற்றத்தை வெளிப்படுத்தும் விதமாக நான்கு கைகளுடன் கூடிய சிலை வடிக்கப்பட்டுள்ளது. முதல் வலக்கையில் உள்ள உடுக்கை ஆக்கல் தொழிலையும் இரண்டாவது வலக்கையில் உள்ள வாழ்த்துகின்ற தோற்றம் காத்தல் தொழிலையும் மேல் இடக்கையிலுள்ள சுடர் அழித்தல் தொழிலையும் கீழ் இடக்கை மறைத்தல் தொழிலையும் உணர்த்துகின்றன. சோழர்கள் காலத்திற்கு முன்பே நான்கு கைகளுடன் கூடிய சிலை வடிக்கப்பட்டிருந்தாலும் சோழர் காலத்தில்தான் அதிகளவில், நான்கு கைகளுடன் கூடிய நடராஜர் சிலை உலோகத்தால் வார்க்கப்பட்டன.

2. **டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டியைப் பொருத்தவரை பின்வரும் கூற்றுகளில் எது உண்மையானது ?**

**A)** இந்தியப் மருத்துவத்தில் பட்டம் பெற்ற முதல் பெண் ஆவார்.
**B)** பிரிட்டிஷ் இந்தியாவின் முதல் சட்டமன்ற உறுப்பினராவார்.
**C)** மகாராஜ கல்லூரியில் சேர்ந்த முதல் பெண் மாணவியாவார்.
**D)** சட்டசபையின் முதல் பெண் தலைவராவார்.

**சரியான விடையளி :**

**A)** 1, 2 மற்றும் 3 **B)** 2, 3 மற்றும் 4
**C)** 1, 3 மற்றும் 4 **D)** 1, 2, 3 மற்றும் 4

**விளக்கம் :** **விடை: (B)**

**டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி**

- இவர் தமிழகத்தின் முதல் பெண் மருத்துவர் ஆவார். மதராஸ் மாகாணத்தின் சட்டமன்ற மேலவை உறுப்பினராக 1929–ஆம் ஆண்டு நியமனம் செய்யப்பட்டார். சட்டமேலவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் பெண்மணி ஆவார். மதராஸ் மாநகராட்சியின் முதல் துணை மேயராகப் பதவி வகித்தவர் ஆவார். இந்தியப் பெண்கள் சங்கத்தின் முதல் தலைவர் ஆவார்.
- இவர் புதுக்கோட்டை மகாராஜா கல்லூரியில் படித்த முதல் பெண்மணி ஆவார். மகாராஜா கல்லூரியில் இவர் படிக்க விரும்பிய போது முதலில் கல்லூரியில் இடம் கிடைக்கவில்லை.
- இவர் பெண் என்பதாலும் இவரது தாயார் பிராமணர் அல்லாதவர் என்பதாலும் இவருக்கு அங்கு கல்வி பயில அனுமதி மறுக்கப்பட்டது. ஆனால் மகாராஜாவின் உதவியுடன் அக்கல்லூரியில் சேர்ந்து பயின்றார்.

SURA'S

**7. எந்த அகழ்வாராய்ச்சி பகுதியில் சர். மோர்டிமர் வீலர் அறிவியல் மற்றும் மண் அடுக்கு முறையைப் பயன்படுத்தினார்?**

A) பல்லாவரம் B) அத்திரம்பாக்கம்

C) அரிக்கமேடு D) காயல்

**விளக்கம் :** **விடை : (C)**

**அரிக்கமேடு :** புதுச்சேரிக்கு அருகிலுள்ள **'அரிக்கமேடு'** என்ற இடம் சங்ககாலத் **'துறைமுகப்பட்டினம்'** ஆகும். **அரிக்கமேடு அகழ்வாராய்ச்சி** பகுதியில் மோர்டிமர் வீலர் அறிவியல் மற்றும் மண் அடுக்கு முறையைப் பயன்படுத்தினார். இந்தியாவில் இவரது கண்டுபிடிப்புகளுக்காகவும் தொல்லியல் துறையில் அறிவியல் முறையின் முன்னேற்றத்திற்காகவும் குறிப்பிடப்பட்டவர்.

அரிக்கமேட்டில் அகழாய்வுப் பணியை மேற்கொண்ட தொல்லியல் அறிஞர்கள்:

- ✤ சர் இராபர்ட் எரிக் மாட்டிமர் வீலர் (பிரிட்டன்)
- ✤ ஜே.எம். கசால் (பிரான்ஸ்)
- ✤ ஏ.கோஷ். கிருஷ்ண தேவா (இந்தியா)

**கண்டறியப்பட்டவை :** சரக்குக் கிடங்கு, தொட்டிகள், உறை கிணறுகள், திட்டமிடப்பட்டு உருவாக்கப்பட்ட தெருக்கள். அரிக்கமேடு தொல்லியல் களத்தில் அகழாய்வு மேற்கொண்டதன் மூலம் ரோம பேரரசில் இருந்து பொருட்கள் வர்த்தகம் செய்த கி.பி. முதல் நூற்றாண்டில் ஒரு துறைமுகத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

**8. பொருத்துக.**

A) செஞ்சி 1. ஸ்தல துர்கா

B) ஆனைமலை 2. வன துர்கா

C) வேலூர் 3. கிரி துர்கா

D) பாஞ்சாலங்குறிச்சி 4. ஜல துர்கா

**குறியீடுகள் :**

| | a) | b) | c) | d) |
|---|---|---|---|---|
| A) | 2 | 3 | 4 | 1 |
| B) | 3 | 2 | 1 | 4 |
| C) | 3 | 2 | 4 | 1 |
| D) | 4 | 3 | 2 | 1 |

**விளக்கம் :** **விடை : (C)**

எதிரிகளிடமிருந்து மக்களைக் காப்பாற்ற பெரும் மதிற்சுவர்களைத் தமிழர்கள் கட்டி வைத்தனர். இவை கோட்டைகள் எனப்படும். கோட்டைகளைத் 'துர்க்கங்கள்' என்று அழைத்தனர். தமிழரின் கோட்டைகள் 4 வகைப்படும்.

1. தரையில் கட்டப்பட்டவை (ஸ்தல துர்கா)
2. தண்ணீரால் சூழப்பட்டவை (ஜல துர்கா)
3. மலைமீது கட்டப்பட்டவை (கிரி துர்கா)
4. காடுகளுக்கு இடையில் கட்டப்பட்டவை (வன துர்கா)

**தரையில் கட்டப்பட்டது :** பாஞ்சாலங்குறிச்சி கோட்டை தரைக் கோட்டையாகும். வீரபாண்டிய கட்டபொம்மனால் கட்டப்பட்டதாகும்.

தண்ணீரால் சூழப்பட்டது : கி.பி. 16–ஆம் நூற்றாண்டில் பொம்மி நாயக்கரால் வேலூர் கோட்டை கட்டப்பட்டது. 191 அடி அகலமும் 29 அடி ஆழமும் கொண்ட அகழி இக்கோட்டையைச் சுற்றிலும் அமைந்துள்ளதால் இது 'ஜலதுர்கா' எனப்படுகிறது. 'ஜலம்' என்றால் நீர் என்பது பொருளாகும்.

மலை மீது கட்டப்பட்டது : செஞ்சிக் கோட்டையை முதன்முதலில் கட்டியவர் ஆனந்தகோன் என்பவர் ஆவார். இவரைத் தொடர்ந்து இவரது பரம்பரையினர் 300 ஆண்டுகள் செஞ்சிக் கோட்டையை ஆட்சி செய்தனர். 'கிரி' என்றால் மலை என்பது பொருளாகும். மலைமீது ஆனந்தகோன் ஆனந்தகிரி கோட்டையைக் கட்டினார். இதன் வேறொரு பெயர் இராஜகிரி கோட்டை ஆகும். இவரின் மகன் கிருஷ்ணகோன் செஞ்சிக் கோட்டையை விரிவுபடுத்தி கிருஷ்ணகிரி கோட்டையைக் கட்டினார்.

காடுகளுக்கு இடையில் கட்டப்பட்டது : ஆனைமலையிலுள்ள ஆழியார் கோட்டை காடுகளுக்கு இடையில் கட்டப்பட்டதாகும். சங்க காலத்தில் வாழ்ந்த நன்னன் என்ற குறுநில மன்னன் கட்டியதாகும்.

**9. "ஞாலம் கருதினும் கைகூடும்" மேற்கூறிய திருக்குறளின்படி ஒருவர் உலகம் முழுவதையும் கைப்பற்றக் கருதினால் அவர் எந்த இரண்டை அறிந்து செயல்பட வேண்டும் ?**

**i)** செல்வமும் வீரமும் **ii)** காலமும் இடமும்

**சரியான விடையளி :**

A) (i) மட்டும்

B) (ii) மட்டும்

C) (i) மற்றும் (ii)

D) மேற்காணும் எவையும் அல்ல

**விளக்கம் :** **விடை : (B)**

**ஞாலம் கருதினும் கைகூடும் காலம்**
**கருதி இடத்தாற் செயின்** - குறள் - 484

**விளக்கம் :** உரிய காலத்தில், பொருத்தமான இடத்தில், ஒரு செயலைச் செய்தால் உலகத்தையே பெறக் கருதினாலும் கிடைத்துவிடும்.

**10. உலகினில் நாகரிகம் முற்றும் அழிந்துவிட்டாலும் திருக்குறளும், கம்பன் காவியமும் இருந்தால் போதும். மீண்டும் அதனைப் புதுப்பித்துவிடலாம் – என்று கூறியவர்.**

A) கால்டுவெல் B) ஜி.யூ. போப்

C) வீரமாமுனிவர் D) எல்லீஸ்

**விளக்கம் :** **விடை : (A)**

- ✤ உலகினில் நாகரிகம் முற்றும் அழிந்துவிட்டாலும் திருக்குறளும், கம்பன் காவியமும் இருந்தால் போதும் என்று கூறியவர் கால்டுவெல்.
- ✤ கி.பி. 1841–இல் அயர்லாந்திலிருந்து திருநெல்வேலிக்கு வந்து சமயப்பணியுடன் தமிழ்ப் பணியையும் ஆற்றினார். 'திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்' என்ற நூலை எழுதியுள்ளார். 'ஒப்பிலக்கணத்தின் தந்தை' என்று போற்றப்பட்டார்.

**11. பிற்காலச் சோழர் காலத்தில் 'இறையிலி' என்பது ............... தொடர்புடையது.**

A) வரி இல்லாத நிலம்

B) வரி வசூலிக்கப்பட்ட நிலம்

C) கோயில் நிலத்திற்கு விதிக்கப்பட்ட வரி

D) குத்தகைக்கு விடப்பட்ட நிலத்திற்கான வரி

**விளக்கம் :** **விடை : (A)**

இறையிலி = இறை +இல்

இறை – வரி. இல் – வரி இல்லாத என்று பொருள். வரி விதிக்கப் பெறாமல் ஒதுக்கப்பட்ட நிலம் இறையிலி எனப்படும்.

நான்கு வேதங்களையும் கற்றுத் தேர்ந்த அந்தணர்களுக்கு, அரசன் கொடையாக வழங்கும் நிலம் பிரம்மதேயம் எனப்படும். இந்நிலங்கள் இறையிலி நிலங்களாக வழங்கப்படுவதால், அந்தணர்கள் இந்நிலத்திற்கு வரி செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்பட்டனர்.

# குரூப்-IV 2022 தேர்வு

**1. காலவரிசைப்படி மதராஸ் மாகாணத்தின் முதலமைச்சர்களை வரிசைப்படுத்துக.**

1. பி.டி. ராஜன் 2. ஏ. சுப்பராயுலு ரெட்டியார்

3. பி. முனுசாமி நாயுடு 4. சி. ராஜாஜி

5. பி. சுப்பராயன்

**சரியான விடையளி :**

A) 2, 4, 3, 5, 1 B) 2, 5, 3, 1, 4

C) 5, 3, 1, 2, 4 D) 3, 1, 5, 2, 4

**விளக்கம்** **விடை : (B)**

**தமிழகத்தின் முதலமைச்சர்கள் (1920 முதல் 1939 வரை)**

| வ. எண் | சென்னை மாகாண முதலமைச்சர்கள் | ஆண்டு |
|---|---|---|
| 1. | ஏ. சுப்பராயுலு | 1920 - 1921 |
| 2. | பனகல் ராஜா | 1921 - 1926 |
| 3. | பி. சுப்பராயன் | 1926 - 1930 |
| 4. | பி. முனுசாமி | 1930 - 1932 |

| வ. எண் | சென்னை மாகாண முதலமைச்சர்கள் | ஆண்டு |
|---|---|---|
| 5. | பொப்பிலி ராஜா | 1932 - 1936 |
| 6. | பி.டி. இராஜன் | 1936 |
| 7. | கே.வி. ரெட்டி | 1937 |
| 8. | சி. இராஜாஜி | 1937 - 1939 |

**2. பொருந்தாததைக் கண்டுபிடி.**

**A)** இளஞ்சேட்சென்னி **B)** கோச்செங்கணான்

**C)** பெருஞ்சேரல் இரும்பொறை **D)** பெருநற்கிள்ளி

**விளக்கம்** **விடை : (C)**

பெருஞ்சேரல் இரும்பொறை சங்ககாலத்தைச் சேர்ந்த சேர மன்னர். ஏனைய மூவரும் சங்ககாலத்தைச் சேர்ந்த சோழ மன்னர்கள் (முற்காலச் சோழர்கள்) ஆவர்.

**3. கீழ்க்கண்ட வாக்கியங்களில் சங்க மருவிய காலத்தின் சரியான கூற்று எது?**

**I.** பதினெட்டு நூல்களை உள்ளடக்கிய பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் பெரும்பாலும் ஒழுக்க நெறிமுறைகளைப் பற்றி கூறுகிறது.

**II.** அவற்றுள் திருக்குறளும், நாலடியாரும் முதன்மையானதாகும்.

**III.** சிலப்பதிகாரமும், மணிமேகலையும் பண்பாடு மற்றும் சமயத்தை பற்றி கூறுகின்றன.

**சரியான விடையளி :**

**A)** I மட்டும் சரி **B)** II மட்டும் சரி

**C)** I, II மட்டும் சரி **D)** I, III மட்டும் சரி

**விளக்கம்** **விடை : (C)**

✦ பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் 11 நூல்கள் ஒழுக்க நெறிமுறைகளைப் பற்றி கூறும் நீதி நூல்கள் ஆகும்.

| | | |
|---|---|---|
| 1. திருக்குறள் | 2. நாலடியார் | 3. நான்மணிக்கடிகை |
| 4. இன்னா நாற்பது | 5. இனியவை நாற்பது | 6. திரிகடுகம் |
| 7. ஆசாரக்கோவை | 8. பழமொழி நானூறு | 9. சிறுபஞ்சமூலம் |
| 10. ஏலாதி | 11. முதுமொழிக்காஞ்சி | |

✦ பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் முதன்மையானவை திருக்குறள் மற்றும் நாலடியார்.

✦ சிலப்பதிகாரத்தின் மூலமாக தமிழகத்தை ஆட்சி செய்த மூவேந்தர்களின் பெருமைகள், பண்டைத்தமிழரின் அரசியல் நிர்வாகம், பழக்க வழக்கங்கள், நாகரிகங்கள், பண்பாடு ஆகியவற்றை அறிந்து கொள்ள முடியும். சிலப்பதிகாரத்தை இயற்றிய இளங்கோவடிகள் சமண சமயத்தை தழுவியவர் எனினும் எந்த சமயத்தைக் குறித்தும் உயர்வாகவோ தாழ்வாகவோ அவர் கூறவில்லை.

✦ மணிமேகலையை இயற்றிய சீத்தலைச் சாத்தனார் பௌத்த சமயத்தைச் சார்ந்தவர். இந்நூலில் பௌத்தமதக் கருத்துகள் அதிகமாக இடம் பெற்றுள்ளன.

**4. கீழே கொடுக்கப்பட்டுள்ள நிகழ்வுகளை காலவரிசைப்படுத்துக.**

**1.** பூலித்தேவரின் இறப்பு **2.** குயிலியின் இறப்பு

**3.** கட்டப்பொம்மனின் இறப்பு **4.** மருதுசகோதரர்களின் இறப்பு

**சரியான விடையளி :**

**A)** 2, 3, 1, 4 **B)** 1, 2, 3, 4

**C)** 1, 3, 2, 4 **D)** 3, 1, 4, 2

**விளக்கம்** **விடை : (B)**

**பூலித்தேவர்**

✦ மேற்குப் பகுதியில் இருந்த பாளையக்காரர்களிடம் மிகுந்த செல்வாக்கு பெற்றிருந்த பூலித்தேவர், நெற்கட்டும்செவல் பகுதியை ஆட்சி செய்தவர். கிழக்கிந்தியக் கம்பெனிக்கு கீழ்ப்படிய மறுத்தவர்.

✦ கிழக்கிந்தியக் கம்பெனியரால் அனுப்பப்பட்ட யூசுப்கான் பீரங்கிப் படைகளைக் கொண்டு பூலித்தேவருடன் போர் புரிந்தார். இப்போரில் நெற்கட்டும்செவல், வாசுதேவநல்லூர் மற்றும் பனையூர் ஆகிய பூலித்தேவரின் மூன்று கோட்டைகளும் 1761 மே 16–இல் யூசுப்கானின் வசம் வந்தன.

✦ தமிழகத்தைச் சேர்ந்த மருதநாயகம் என்ற புகழ் பெற்ற வீரரே மதமாற்றத்திற்குப் பின் யூசுப்கான் என்றும் கான்சாகிப் என்றும் அழைக்கப்பட்டார். இவர் மீது கிழக்கிந்தியக் கம்பெனியினர் நம்பிக்கைத் துரோக குற்றச்சாட்டினை சுமத்தி 1764–இல் இவரைத் தூக்கிலிட்டனர்.

✦ யூசுப்கான் மரணத்திற்குப் பின் நாடிழந்து சுற்றி வந்த பூலித்தேவர் திரும்பிவந்து 1764–இல் மீண்டும் நெற்கட்டும் செவலைக் கைப்பற்றினார். பின்னர் 1767–இல் **கேப்டன் கேம்பெல்** என்பவரால் தோற்கடிக்கப்பட்டார்.

**குயிலி**

இவர் வேலுநாச்சியாரின் பெண்கள் படைப்பிரிவைத் (உடையாள் பிரிவு) தலைமையேற்று நடத்தியவர். தன் உடலில் நெருப்பை வைத்துக்கொண்டு பிரிட்டிஷாரின் ஆயுதக்கிடங்கில் குதித்தார் (1780). தன் உயிர் அழிவதையும் பொருட்படுத்தாமல் எதிரியின் ஆயுதங்களை அழித்த வீரப்பெண்மணி.

**வீரபாண்டிய கட்டபொம்மன்**

✦ தனது தந்தை ஜெகவீரபாண்டிய கட்டபொம்மனின் மறைவுக்குப் பிறகு பாஞ்சாலங்குறிச்சியின் ஆட்சிப் பொறுப்பை இவர் தனது முப்பதாவது வயதில் ஏற்றுக்கொண்டார். ஆங்கிலேயருக்கு வரி கொடுக்க மறுத்ததால் இவருக்கும் கிழக்கிந்தியக் கம்பெனியாருக்கும் பகை ஏற்பட்டது. ஜாக்ஸன் என்ற ஆட்சியர் இவரை பல முறை சந்திக்க மறுத்து அவமானப்படுத்தினார். இறுதியாக 1798–இல் இராமநாதபுரத்தில் சந்திக்க அனுமதி கொடுத்தார். அங்கு தனது அமைச்சர் சிவசுப்பிரமணியனுடன் சென்ற கட்டபொம்மனை கைது செய்ய ஆங்கிலேயர் முயன்றனர். அங்கு நடந்த மோதலில் கட்டபொம்மனால் லெப்டினென்ட் க்ளார்க் உள்ளிட்ட சிலர் கொல்லப்பட்டனர். கட்டபொம்மன் தப்பிவிட்டார். சிவசுப்பிரமணியனார் கைது செய்யப்பட்டார்.

✦ 1799 செப்டம்பர் 1 அன்று கட்டபொம்மனை சரணடையக் கோரி நிபந்தனை ஒன்று அனுப்பப்பட்டது. கட்டபொம்மன் மறுத்ததால், செப்டம்பர் 5 அன்று பாஞ்சாலங்குறிச்சி கோட்டையின் அருகே படைகளைக் கொண்டு வந்து நிறுத்திய பானெர்மென் கட்டபொம்மனை சரணடையும்படி கூறி **இராமலிங்கனாரை** தூது அனுப்பினார். கோட்டைக்குள் தூதுவராகச் சென்ற இராமலிங்கனார் கோட்டையின் இரகசியங்கள் அனைத்தையும் சேகரித்து வந்து பானெர்மெனிடம் கூறினார்.

✦ புதுக்கோட்டைக்குத் தப்பிச் சென்ற கட்டபொம்மன் எட்டையபுரம் மற்றும் புதுக்கோட்டை அரசர்களின் துரோகத்தால் காட்டிக் கொடுக்கப்பட்டார். சிவசுப்பிரமணியனார் செப்டம்பர் 13 அன்று நாகலாபுரத்தில் தூக்கிலிடப்பட்டார். பானெர்மென் விசாரணை என்ற பெயரில் ஒரு கண்துடைப்பு நாடகத்தை அரங்கேற்றி கட்டபொம்மனுக்கு தூக்குத்தண்டனை விதித்தார். அக்டோபர் 16 அன்று திருநெல்வேலிக்கு அருகேயுள்ள கயத்தாறில் பழைய கோட்டைக்கு முன்பாக இருந்த புளியமரத்தில் சகப்பாளையக்காரர்கள் முன் கட்டபொம்மன் தூக்கிலிடப்பட்டார்.

**மருது சகோதரர்கள்**

✦ பெரிய மருது என்ற வெள்ள மருது (1748 - 1801) மற்றும் அவரது தம்பியான சின்னமருது (1753 - 1801) ஆகியோர் சிவகங்கை மன்னர் முத்துவடுகநாதரின் திறமையான தளபதிகள் ஆவர். முத்துவடுக நாதரின் மறைவுக்குப் பின் வேலுநாச்சியார் சிவகங்கையை மீட்பதற்கு அவருடன் உறுதுணையாய் இருந்தனர். ஜூன் 1801–இல் நாட்டின் விடுதலையை முன்னிறுத்தி பிரிட்டிஷாருக்கு எதிராக மண்டல, சாதி, சமய, இன வேறுபாடுகளைக் கடந்து நிற்பதற்காக மருது சகோதரர்கள்

SURA'S

ஒரு பிரகடனத்தை வெளியிட்டனர். இது '**திருச்சிராப்பள்ளி பேரறிக்கை**' எனப்பட்டது.

✦ ஆங்கிலேயர் நடத்திய போரில் சிவகங்கை வீழ்ச்சியடைந்தது. 1801 அக்டோபர் 24 அன்று திருப்பத்தூர் கோட்டையில் மருது சகோதரர்கள் தூக்கிலிடப்பட்டனர்.

**5. தமிழ்நாட்டின் முதல் பெண் மருத்துவர் யார்?**

**A)** மூவலூர் ராமாமிர்தம் **B)** முத்துலெட்சுமி ரெட்டி
**C)** தர்மாம்பாள் **D)** பண்டிதர் ராமாபாய்

**விளக்கம்** **விடை : (B)**

தமிழ்நாட்டின் முதல் பெண் மருத்துவரான டாக்டர் முத்துலெட்சுமி அம்மையார் தேவதாசி முறையை ஒழிப்பதற்காக பெரும் முயற்சி எடுத்தார். அவரது போராட்டத்தை பாராட்டும் வகையில் 1929–இல் அவர் சென்னை சட்டமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். பெரியார் ஈ.வெ.ரா. அவர்களின் முயற்சியால் தேவதாசி ஒழிப்பு மசோதா நிறைவேற்றப்பட்டது. 1930–இல் இம்மசோதாவை சென்னை சட்டமன்றத்தில் டாக்டர் முத்துலெட்சுமி அம்மையார் முன்மொழிந்தார்.

**6. "<u>தந்தை மகற்காற்றும்</u> நன்றி"**
**என்னும் திருக்குறளின் படி தந்தை மகனுக்குச் செய்யும் நன்றி எது ?**

**A)** அவையில் முந்தியிருக்கச் செய்தல்
**B)** செல்வத்தில் முந்தியிருக்கச் செய்தல்
**C)** குடிப்பெருமையில் முந்தியிருக்கச் செய்தல்
**D)** நேர்மையில் முந்தியிருக்கச் செய்தல்

**விளக்கம்** **விடை : (A)**

**திருக்குறள்**

**தந்தை மகற்கு ஆற்றும் நன்றி அவையத்து**
**முந்தி யிருப்பச் செயல்**

பிரிவு – அறத்துப்பால்
இயல் – இல்லறவியல்
அதிகாரம் – மக்கட்பேறு
குறள் எண் – 67

**பொருள் :** ஒரு தந்தை தன் மகனுக்குச் செய்ய வேண்டிய நல்லுதவியானது, கற்றோர் அவையில் அவன் முதன்மையானவனாக இருப்பதற்குத் தேவையான தகுதிகளுடன் அவனை வளர்த்து ஆளாக்குவதாகும்.

**7. இந்தியத் தொல்லியல் ஆய்வுத் துறையின் முதல் ஆய்வாளர்**

**A)** சார்லஸ் மேசன்
**B)** அலெக்சாண்டர் பர்ன்ஸ்
**C)** அலெக்சாண்டர் கன்னிங்ஹாம்
**D)** சர் ஜான் மார்ஷல்

**விளக்கம்** **விடை : (C)**

**இந்திய தொல்லியல் துறை – (ASI - Archaelogical Survey of India)**

1861–ஆம் ஆண்டு அலெக்ஸாண்டர் கன்னிங்ஹாம் என்ற நில அளவையாளர் உதவியுடன் நிறுவப்பட்டது. இதன் தலைமையகம் புதுதில்லியில் உள்ளது.

**புதையுண்ட நகரத்தைக் கண்டுபிடிக்கும் முறை:**

✤ அகழ்வாராய்ச்சியாளர்கள் செங்கற்கள், கற்கள், உடைந்த பானை ஓடுகள் போன்றவற்றை ஆராய்ந்து அவை பயன்படுத்தப்பட்ட காலத்தை அறிந்து கொள்கிறார்கள்.
✤ வான்வழி புகைப்படங்கள் மூலம் புதையுண்ட நகரங்கள் மற்றும் இடங்களின் மேற்பரப்பைக் கண்டறிந்து கொள்கிறார்கள்.
✤ நிலத்தடியை ஆய்வு செய்ய காந்தப்புல வருடியை (Magnetic Scanner) பயன்படுத்துகின்றனர்.
✤ எஞ்சிய தொல்பொருட்கள் புதையுண்டு இருக்கின்றனவா இல்லையா என்பதை ரேடார் கருவி மூலம் அறிய முடியும் (தொலை நுண்ணுணர்வு முறை).
✤ **அலெக்ஸாண்டர் கன்னிங்ஹாம் :** இந்தியத் தொல்லியல் அளவீட்டுத் துறையின் முதல் அளவையரான இவர் 1853, 1856 மற்றும் 1875– ஆகிய ஆண்டுகளில் ஹரப்பாவைப் பார்வையிட்டார்.

**8. சரியான இணைகளைத் தேர்வு செய்க.**

| | | |
|---|---|---|
| **1.** | ஒண்டிவீரன் | – மருது சகோதரர்கள் |
| **2.** | கோபால நாயக்கர் | – திண்டுக்கல் கூட்டமைப்பு |
| **3.** | குயிலி | – புலித்தேவர் |
| **4.** | முத்துவடுகநாதர் | – காளையார் கோயில் போர் |

**சரியான விடையளி:**

**A)** 1 மற்றும் 3 சரி **B)** 1 மற்றும் 2 சரி
**C)** 2 மற்றும் 3 சரி **D)** 2 மற்றும் 4 சரி

**விளக்கம்** **விடை : (D)**

வினா எண் 10–ஐப் பார்க்கவும்.

**ஒண்டிவீரன்**

இவர் பூலித்தேவரின் படைப் பிரிவுகளுள் ஒன்றிற்கு தலைமையேற்றிருந்தார். பூலித்தேவருடன் இணைந்து போரிட்ட இவர் கம்பெனி படைகளுக்கு பெரும் சேதங்களை ஏற்படுத்தினார். போரில் இவரது ஒரு கை துண்டிக்கப்பட்டது.

**வேலுநாச்சியார் (1730 - 1796)**

இவர், இராமநாதபுரத்தின் அரசர் செல்லமுத்து சேதுபதியின் மகளாவார். இவர் வளரி, சிலம்பம் போன்ற தற்காப்புக் கலைகளிலும், போர்கருவிகளைக் கையாளுவதிலும், குதிரையேற்றம், வில்வித்தை போன்றவற்றிலும் திறமையானவர். ஆங்கிலம், பிரெஞ்சு, உருது போன்ற மொழிகளில் வல்லமை பெற்றிருந்தார். தனது 16–ஆவது வயதில் சிவகங்கை மன்னரான முத்துவடுகநாதரை மணந்து கொண்டார். இவர்களுக்குப் பிறந்த பெண் வெள்ளச்சி நாச்சியார் ஆவார்.

1772–இல் ஆற்காடு நவாப் மற்றும் லெப்டினன்ட் கர்னல் பான் ஜோர் தலைமையிலான கம்பெனி படைகளும் இணைந்து காளையார் கோயிலில் நடத்திய போரில் முத்துவடுகநாதர் கொல்லப்பட்டார். தன் மகளுடன் தப்பிச்சென்ற வேலுநாச்சியார் விருபாட்சி பாளையக்காரர் கோபால நாயக்கரின் உதவியுடன் திண்டுக்கல் அருகேயுள்ள விருபாட்சியில் எட்டு ஆண்டுகள் மறைந்து வாழ்ந்தார்.

மறைந்து வாழ்ந்த காலத்தில் வேலுநாச்சியார் தன் தளபதிகளான மருது சகோதரர்கள், கோபாலநாயக்கர் உதவியுடன் ஒரு பெரும்படையை உருவாக்கினார். இதற்கு ஹைதர் அலியின் உதவியை நாடிய வேலுநாச்சியார் அவருடன் உருது மொழியிலேயே தொடர்பு கொண்டார். ஹைதர் அலி இவருக்கு இராணுவ உதவிகளைச் செய்தார். பெரும் படையுடன் சென்று ஆங்கிலேயருடன் போர் புரிந்த வேலுநாச்சியார் மீண்டும் சிவகங்கையைக் கைப்பற்றி அரசியானார். இவர், பிரிட்டிஷ் காலனியாதிக்கத்தை எதிர்த்த முதல் பெண் ஆட்சியாளர் ஆவார்.

**கோபால நாயக்கர்**

இவர், ஆங்கிலேயரை எதிர்ப்பதற்காக உருவான திண்டுக்கல் கூட்டமைப்பின் தலைவராக இருந்தார். இவர் விருபாட்சி பாளையக்காரர் ஆவார். இவருடைய கூட்டமைப்பில் லெட்சுமி நாயக்கரும், தேவதானப்பட்டியின் பூஜை நாயக்கரும் இடம் பெற்றிருந்தனர். திப்புசுல்தானிடம் நட்புறவு கொண்டிருந்தார். கோயம்புத்தூரை மையமாகக் கொண்டு பிரிட்டிஷாரை எதிர்த்த இவர் கட்டபொம்மனின் சகோதரர் ஊமைத்துரையுடன் இணைந்து ஆங்கிலேயரை எதிர்த்தார். இவர் விவசாயிகளின் ஆதரவுடன் ஆனைமலையில் பிரிட்டிஷாரை எதிர்த்து கடும் போர் புரிந்தார். 1801–இல் பிரிட்டிஷ் படைகளால் கொல்லப்பட்டார்.

**9. ஒருவருடைய செல்வம் சமுதாயத்திற்குப் பயன்படுவதை வள்ளுவர் எதனோடு ஒப்பிடுகிறார்?**

**A)** ஊருணி **B)** கடல்
**C)** ஆறு **D)** ஏரி

**விளக்கம்** **விடை : (A)**

**ஊருணி நீர்நிறைந் தற்றே உலகுஅவாம்**
**பேரறி வாளன் திரு**

பிரிவு – அறத்துப்பால்
இயல் – இல்லறவியல்

அதிகாரம் – ஒப்புரவறிதல்
குறள் எண் – 215

**பொருள் :** ஊருணியில் உள்ள நீரினால் ஊர் மக்கள் அனைவரும் பயனடைவது போல், சான்றோர்களிடம் உள்ள செல்வமானது சமுதாய நன்மைகள் அனைத்திற்கும் பயனுள்ளதாக இருக்கும்.

**10. பொருத்துக.**

| | | | |
|---|---|---|---|
| a) | சிவசுப்ரமணியனார் | 1. | கயத்தாறு கோட்டை |
| b) | கட்டபொம்மன் | 2. | சங்ககிரி கோட்டை |
| c) | மருது சகோதரர்கள் | 3. | நாகலாபுரம் |
| d) | தீரன் சின்னமலை | 4. | திருப்பத்தூர் கோட்டை |

**குறியீடுகள் :**

| | a) | b) | c) | d) |
|---|---|---|---|---|
| A) | 3 | 1 | 4 | 2 |
| B) | 3 | 4 | 1 | 2 |
| C) | 3 | 1 | 2 | 4 |
| D) | 4 | 1 | 3 | 2 |

**விளக்கம்** **விடை : (A)**

வினா எண் 10–ஐப் பார்க்கவும்.

**தீரன் சின்னமலை**

கொங்குப்பகுதியில் **பழையக்கோட்டை மன்றாடியார்** பட்டம் பெற்ற மதிப்புமிகு குடும்பத்தில் பிறந்தவர் தீரன் என்ற தீர்த்தகிரியார். வில்வித்தை, சிலம்பு, குதிரையேற்றம், நவீன போர் முறைகளில் இவர் வல்லவராக இருந்தார். இவர் வாழ்ந்த கொங்குப் பகுதி மைசூர் சுல்தானின் கட்டுப்பாட்டில் இருந்தது. ஒருமுறை வரிவசூல் செய்த பணத்துடன் மைசூருக்குத் திரும்பிக் கொண்டிருந்த முகமது அலி என்பவரை தீர்த்தகிரி வழிமறித்து வரிப்பணம் முழுவதையும் பறித்துக் கொண்டார். "சிவமலைக்கும் சென்னிமலைக்கும் இடையே இருந்த **'சின்னமலை'** வரிப்பணத்தைப் பிடுங்கிக் கொண்டதாக சுல்தானிடம் போய்ச் சொல்" என்றார். அதன்பிறகு தீரன் சின்னமலை என்றே அழைக்கப்பட்டு வந்தார்.

சுல்தானின் படைகளும் இவருடைய படைகளும் நொய்யல் ஆற்றங்கரையில் மோதிக்கொண்டன. அதில் தீரன் சின்னமலையே வெற்றிபெற்றார். பிரெஞ்சுக்காரர்களால் பயிற்சியளிக்கப்பட்ட இவர் கொங்கு மண்டலத்தைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான இளைஞர்கள் மற்றும் திப்புவுடன் இணைந்து ஆங்கிலேயருக்கு எதிராகப் போராடினார். இவர் திப்புவின் இறப்பிற்குப் பிறகு கோட்டை ஒன்றைக் கட்டி, அதன் உள்ளிருந்தே போராட்டத்தைத் தொடர்ந்தார். எனவே அந்த இடம் **'ஓடாநிலை'** என்று அழைக்கப்படுகிறது. கொரில்லா போர் முறையை இவர் கையாண்டார். இறுதியில் இவரது சமையல்காரரால் இவரும் இவரது சகோதரர்களும் ஆங்கிலேயரிடம் காட்டிக் கொடுக்கப்பட்டனர். 1805 ஜூலை 31 அன்று சங்ககிரிகோட்டையின் உச்சியில் அவர்கள் தூக்கிலிடப்பட்டனர்.

**11. கீழ்க்கண்டவற்றுள் தவறான கூற்றைக் கண்டறிக.**

**A)** சிவாஜியின் பாதுகாவலர் தாதாஜி கொண்டதேவ்
**B)** சிவாஜி ராஜ்கோஷ் கோட்டையில் முடிசூட்டிக் கொண்டார்.
**C)** சிவாஜியின் படை வீரர்கள் சூரத்தை 1665–இல் சூறையாடினார்
**D)** 1674–இல் சத்ரபதி எனும் பெயரில் முடிசூடினார்

**விளக்கம்** **விடை : (*)**

**சிவாஜி (கி.பி. 1627 – 1680)**

✦ சிவாஜி 1627–இல் ஜுன்னார் என்ற இடத்திற்கு அருகே ஷிவ்னார் என்ற பகுதியில் பிறந்தார். அவரது தாயார் **ஜீஜாபாய்,** இராமாயணம், மகாபாரதக் கதைகளை சிவாஜியிடம் கூறுவார். அவற்றால் ஏற்பட்ட தாக்கம் சிவாஜியிடம் வீர உணர்வைத் தூண்டியது. சிவாஜியின் ஆசிரியரும் பாதுகாவலருமான **தாதாஜி கொண்டதேவ்** சிவாஜிக்கு குதிரையேற்றம், போர்க்கலை, அரசு நிர்வாகம் ஆகியவற்றில் பயிற்சியளித்தார்.

✦ மதத் துறவிகளாக விளங்கிய **ராம்தாஸ் துக்காராம்** ஆகியோர் சிவாஜியிடம் தாக்கத்தை ஏற்படுத்தினார்கள். துறவி ராம்தாஸ் அவர்களை சிவாஜி தனது குருவாக ஏற்று மரியாதை செலுத்தினார்.

✦ அரபிக்கடல் பகுதியில் முகலாயரின் முக்கியத் துறைமுகமாக விளங்கிய சூரத் நகரை குறிவைத்து 1664–இல் சிவாஜி தாக்குதல் நடத்தினார். கி.பி. 1674 ஜூன் 6–ஆம் தேதி சிவாஜி **ராய்கர் கோட்டையில்** வேத முறைப்படி அரியணை ஏறினார். **'சத்ரபதி'** என்ற பட்டத்தைச் சூட்டிக் கொண்டார்.

**12. சரியான கூற்றுக்களைக் கண்டறிக.**

**1.** பாரதியின் 'இந்தியா' வார இதழ் மிதவாத தேசியவாதிகளின் குரலாகத் திகழ்ந்தது.
**2.** 1907–இல் சூரத் காங்கிரஸ் மாநாட்டில் பாரதி கலந்து கொண்டார்.
**3.** சக்ரவர்த்தினி, சுதேசமித்ரன் போன்ற பத்திரிகைகளில் பாரதி பணியாற்றினார்.
**4.** தி இந்து பத்திரிக்கையை வெளியிட்டவர் G. சுப்ரமணிய ஐயர்.

**சரியான விடையளி :**

**A)** 1 மற்றும் 2 மட்டும் சரி **B)** 1, 2 மற்றும் 3 மட்டும் சரி
**C)** 2 மற்றும் 3 மட்டும் சரி **D)** 2, 3 மற்றும் 4 மட்டும் சரி

**விளக்கம்** **விடை : (D)**

**சுப்பிரமணிய பாரதியார்**

✦ சுப்பிரமணிய பாரதியார் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள எட்டயபுரத்தில் டிசம்பர் 11, 1882–ஆம் ஆண்டு பிறந்தார்.

✦ சுதேசமித்ரன் பத்திரிகையின் உதவி ஆசிரியராக பணியாற்றினார்.

✦ 1907–ஆம் ஆண்டு சூரத்தில் நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டில் கலந்து கொண்டார்.

✦ பாலகங்காதர திலகர் மற்றும் அரவிந்தகோஷுடன் சேர்ந்து சுயராஜ்ஜியத்திற்கு ஆதரவாக செயல்பட்டார்.

✦ ஜி. சுப்ரமணியர் 'தி இந்து' பத்திரிக்கையை தொடங்கினார். பாரதியார் 1907–ஆம் ஆண்டு தமிழ் வாரப் பத்திரிகையான இந்தியா பத்திரிகையின் ஆசிரியரானார். அதே சமயத்தில் வெளிவந்த பாலபாரதம் என்ற ஆங்கிலப் பத்திரிகையிலும் பணியாற்றினார்.

✦ 1908–ஆம் ஆண்டு சென்னையில் மாபெரும் கூட்டத்தை நடத்தி சுயராஜ்ஜிய நாளை கொண்டாடினார்.

✦ அவரது பாடல்களான வந்தேமாதரம், அச்சமில்லை அச்சமில்லை, எந்தையும் தாயும், ஜெயபாரதம் போன்றவை அச்சிடப்பட்டு தமிழ் மக்களுக்கு இலவசமாக வழங்கப்பட்டது.

✦ 1908–ஆம் ஆண்டு வ.உ.சிக்கு எதிராக ஆங்கில அரசு தொடர்ந்த வழக்கில் வ.உ.சி.க்கு ஆதரவாக சாட்சி வழங்கினார். இதனால் இவரை கைது செய்ய ஆணை பிறப்பித்தது. எனவே பாரதியார் பிரெஞ்சுக்காரர்களின் கட்டுப்பாட்டிலிருந்த பாண்டிச்சேரிக்கு தப்பி ஓடினார்.

✦ ஆங்கில அரசு 1909–ஆம் ஆண்டு பாரதியின் படைப்புகளுக்கு தடை விதித்தது. நவம்பர் 1918–ஆம் ஆண்டு பாரதியார் சென்னையிலிருந்து சுதேசமித்ரன் பத்திரிகையின் ஆசிரியராக மீண்டும் பணியாற்றினார். செப்டம்பர் 11, 1921–ஆம் ஆண்டு காலமானார்.

**13. சரியான கூற்றைத் தேர்வு செய்யவும்.**

**I.** பாளையக்காரார் முறை காகதியப் பேரரசின் நடைமுறையில் இருந்தது.
**II.** கான் சாகிப்பின் இறப்பிற்குப்பின் பூலித்தேவர் நெற்கட்டும் செவலை 1764–இல் மீண்டும் கைப்பற்றினார்.
**III.** கம்பெனி நிர்வாகத்திற்குத் தகவல் அளிக்காமல் பாளையக்காரர்களே பேச்சுவார்த்தையில் ஈடுபட்டதால் யூசுப்கான் துரோகி என்று குற்றம் சுமத்தப்பட்டு 1764–இல் தூக்கிலிடப்பட்டார்.
**IV.** ஒண்டிவீரன் கட்டபொம்மனின் படைப்பிரிவுகளில் ஒன்றைத் தலைமையேற்று வழிநடத்தினார்.

16. சென்னை மாகாணத்தின் முதல் காங்கிரஸ் அமைச்சரவையை அமைத்தவர் ................ ஆவார்.

A) T. பிரகாசம் B) ராஜாஜி
C) காமராசர் D) சுப்பிரமணிய சிவா

**விளக்கம் :** **விடை : (B)**

**காங்கிரஸின் முதல் அமைச்சரவை :**

1935, இந்திய அரசு சட்டம், மாநில சுயாட்சிக்கு வழிவகுத்தது. சட்டமன்றத்திற்குப் பொறுப்பான அமைச்சர்கள் குழு மாகாண அதிகாரங்களை நிர்வகித்தாலும் அரசின் ஆலோசனைகளைப் புறக்கணிக்கும் அதிகாரம் ஆளுநருக்கு இருந்தது. 1937 தேர்தலில் காங்கிரஸ் வெற்றி பெற்றது. சென்னை மாகாணத்தின் முதல் காங்கிரஸ் அமைச்சரவையை இராஜாஜி அமைத்தார்.

இந்திய அமைச்சரவையைக் கலந்து ஆலோசிக்காமல் ஆங்கில அரசு இந்தியாவை இரண்டாம் உலகப்போரில் ஈடுபடுத்தியதற்கு எதிர்ப்பு தெரிவித்து காங்கிரஸ் அமைச்சரவை 1939 அக்டோபரில் இராஜினாமா செய்தது.

17. நீதிநெறியுடன் மக்களைக் காப்பாற்றும் ஆட்சியாளரை வள்ளுவர் எவ்வாறு அழைக்கிறார் ?

A) மக்கட்கு உயிர் B) மக்கட்கு அமிழ்து
C) மக்கட்கு இறை D) மக்கட்கு உடல்

**விளக்கம் :** **விடை : (C)**

**திருக்குறள் (அதிகாரம் : இறைமாட்சி )**

**முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு**
**இறையென்று வைக்கப் படும். – குறள் 388**

**பொருள் :** முறைமையோடு ஆட்சிபுரிந்து மக்களைக் காப்பாற்றும் மன்னவன் அம்மக்களுக்குத் தெய்வம் என்று மதிக்கப்படும் உயர் நிலையில் வைத்துப் போற்றப்படுவான்.

18. ஒருவரின் நகைக்கும் உவகைக்கும் பகையாக இருப்பது எது என்று வள்ளுவர் குறிப்பிடுகின்றார் ?

A) அச்சம் B) அழுக்காறு
C) அழுகை D) சினம்

**விளக்கம் :** **விடை : (D)**

**திருக்குறள் (அதிகாரம் : வெகுளாமை )**

**நகையும் உவகையும் கொல்லும் சினத்தின்**
**பகையும் உளவோ பிற. – குறள் 304**

**பொருள் :** முக மலர்ச்சியையும் அக மலர்ச்சியையும் கொல்லுகின்ற சினத்தைவிட ஒருவனுக்கு வேறு பகை இல்லை.

19. பிறனில் விழைவானிடத்து எவை நான்கு நீங்காது இருக்கும்?

A) இன்பம், துன்பம், மகிழ்ச்சி, பொருள்
B) பகை, பாவம், அச்சம், பழி
C) பொருள், பெருமை, சிறப்பு, மேன்மை
D) வறுமை, துன்பம், பாவம், நோய்

**விளக்கம் :** **விடை : (B)**

**திருக்குறள் (அதிகாரம் : பிறனில் விழையாமை )**

**பகைபாவம் அச்சம் பழியென நான்கும்**
**இகவாவாம் இல்லிறப்பான் கண். – குறள் 146**

**பொருள் :** பிறன் மனைவியை விரும்பி நெறிதவறி நடப்பவனிடத்தில் பகை, பாவம், அச்சம், பழி என்ற நான்கு குற்றங்களும் நீங்காமல் நிலைத்து நிற்கும்.

20. பிறரால் விரும்பப்படாதவன் செல்வத்தைத் திருவள்ளுவர் எதற்கு ஒப்பாகக் கூறுகின்றார் ?

A) ஊர் நடுவில் இனிய மரம் பழுத்தது போன்றது
B) யாருக்கும் பயன்படாது புதைத்து வைக்கும் செல்வத்துக்கு ஒப்பாகும்
C) களைகளைப் போன்று பயனற்றதாம்
D) ஊர்நடுவில் நச்சுமரம் பழுத்தது போன்றது

**விளக்கம் :** **விடை : (D)**

**திருக்குறள் (அதிகாரம் : நன்றியில் செல்வம்)**

**நச்சப் படாதவன் செல்வம் நடுவூருள்**
**நச்சு மரம்பழுத் தற்று. – குறள் 1008**

**பொருள்:** பிறர்க்கு உதவாத காரணத்தால் ஒருவராலும் விரும்பப்படாதவனுடைய செல்வம், ஊர் நடுவில் நச்சு மரம் பழுத்தாற் போன்றது.

# குரூப்-I 2021 தேர்வு

1. கீழ்க்கண்டவற்றை பொருத்துக:

| ஆசிரியர் | படைப்பு/புத்தகம் |
|---|---|
| a) வண்ணதாசன் | 1. சஞ்சாரம் |
| b) இன்குலாப் | 2. சூல் |
| c) ராமகிருஷ்ணன் | 3. காந்தள் நாட்கள் |
| d) சோ.தர்மன் | 4. ஒரு சிறு இசை |

குறியீடுகள்:

| | a) | b) | c) | d) |
|---|---|---|---|---|
| A) | 1 | 2 | 3 | 4 |
| B) | 3 | 2 | 4 | 1 |
| C) | 4 | 3 | 1 | 2 |
| D) | 2 | 3 | 4 | 1 |

**விளக்கம் :** **விடை (C)**

**வண்ணதாசன்** என்ற புனைப்பெயரில் சிறுகதைகளும், கல்யாண்ஜி என்ற புனைப்பெயரில் கவிதைகளும் எழுதுபவரின் இயற்பெயர், சி.கல்யாணசுந்தரம். நவீன தமிழ்ச் சிறுகதை உலகில் மிகுந்த கவனம் பெற்ற எழுத்தாளரான வண்ணதாசன், தீபம் இதழில் எழுதத் துவங்கியவர். 1962–ஆம் ஆண்டில் இருந்து இன்று வரை தொடர்ந்து சிறுகதைகள் எழுதி வருகிறார். இவரது 'ஒரு சிறு இசை' என்ற சிறுகதை நூலுக்காக இந்திய அரசின் 2016–ஆம் ஆண்டுக்கான சாகித்திய அகாதமி விருது கிடைத்தது.

**இன்குலாப்** என்பவர் தமிழ்க் கவிஞர், பேராசிரியர், சொற்பொழிவாளர், நாடக ஆசிரியர், சிறுகதை எழுத்தாளர், பத்திரிகையாளர், பத்தி எழுத்தாளர், பொதுவுடைமைச் சிந்தனையாளர் எனப் பன்முக ஆளுமையாளர் ஆவார். சமூகச் சிக்கல்கள், ஒடுக்குமுறைகள் போராட்டங்கள் ஆகியவற்றை மையப்படுத்தியே இவருடைய படைப்புகள் அமைந்திருந்தன. இன்குலாப் என்பதற்குப் புரட்சி என்று பொருள்படும். 2017–ஆம் ஆண்டில் தமிழுக்கான சாகித்ய அகாதமி விருது இவர் எழுதிய காந்தள் நாட்கள் என்னும் நூலுக்கு அவரின் மறைவிற்குப் பின்னர் வழங்கப்பட்டது. ஆனால், அதனை அவர் குடும்பத்தினர் ஏற்க மறுத்துவிட்டனர்.

**எஸ். ராமகிருஷ்ணன்** என்பவர் தற்காலத் தமிழ்ப் படைப்புலக எழுத்தாளர் ஆவார். புதினங்கள், சிறுகதைகள், கட்டுரைகள், நாடகங்கள், குழந்தைகளுக்கான ஆக்கங்கள், திரைக்கதை, திரைப்பட உரையாடல்கள் உள்ளிட்ட படைப்புச் செயற்பாடுகளில் ஈடுபட்டு வருவதோடு, தனது உரைகள், பத்திகள் மூலமாகச் சிறந்த இலக்கியங்கள், திரைப்படங்கள் ஆகியவற்றை அறிமுகப்படுத்தியும் வருகிறார். சஞ்சாரம் என்னும் இவருடைய படைப்புக்கு 2018 சாகித்திய அகதெமி விருது இவருக்கு வழங்கப்பெற்றது.

**சோ. தர்மன்** என்பவர் தமிழகத்தைச் சேர்ந்த புதின, சிறுகதை எழுத்தாளர். கரிசல் மண் சார்ந்த வேளாண் மக்களின் வாழ்க்கையை பதிவு செய்யும் படைப்பாளிகளில் முக்கியமானவர். சூல் என்னும் புதினத்திற்காக 2016–ஆம் ஆண்டிற்கான சுஜாதா விருதைப் பெற்றார். சூல் என்னும் புதினத்திற்காக 2019–ஆம் ஆண்டில் சாகித்ய அகாதெமி விருதை பெற்றார்.

2. 'ஏதிலாளன் கவலை கவற்ற
ஒரு முலை அறுத்த திருமா உண்ணி' –
கண்ணகியின் வரலாற்றைக் குறிப்பது போல காணப்படும் இவ்வரிகள் இடம்பெற்ற சங்க இலக்கியம்

A) குறுந்தொகை B) நற்றிணை
C) புறநானூறு D) அகநானூறு

**விளக்கம் :** **விடை : (B)**

நற்றிணை 216–ஆவது பாடல்

**துனிதீர் கூட்டமொடு துன்னர் ஆயினும்**
**இனிமத, காணுநர்க் காண்புழி வாழ்தல்**
**கண்ணுறு விழுமம் கை போல் உதவி**
**நம்உறு துயரம் களையார் ஆயினும்,**
**இன்னாது அன்றே, அவர்இல் ஊரே ;**
**எரிமருள் வேங்கைக் கடவுள் காக்கும்**
**குருகு ஆர் கழனியின் இதணத்து ஆங்கண்**
**ஏதிலாளன் கவலை கவற்ற**
**ஒருமுலை அறுத்த திருமாவுண்ணிக்**
**கேட்டோர் அனையராயினும்**
**வேட்டோர் அல்லது, பிறர் இன்னாரே**

– மதுரை மருதன் இளநாகனார்

**3. கீழ்க்கண்ட காரணிகளில் தென்னிந்திய கிளர்ச்சிக்கு காரணமாக அமைந்தது எது?**

I. பாளையங்களில் கம்பெனியின் சீர்த்திருத்தங்கள்
II. கம்பெனி பொருளாதார சுரண்டல் மற்றும் அதிகபடியான வரி விதிப்பு
III. 1798–இல் ஏற்பட்ட பஞ்சம்
IV. கம்பெனி நடத்திய அடிக்கடியான போர்கள்

**சரியான விடையளி :**

A) I மட்டும் B) II மட்டும்
C) III மட்டும் D) I, II, III, IV

**விளக்கம் :** **விடை (D)**

ஆங்கிலேயரால் நாட்டின் பல பகுதிகளில் அரசியல் மற்றும் பொருளாதார ஆதிக்கம் ஏற்பட்டதனால் தென்னிந்தியப் புரட்சி உருவானது. கிழக்கிந்தியக் கம்பெனியின் நாடு பிடிக்கும் நோக்கத்திற்கு முதல் எதிர்ப்பு, திருநெல்வேலியின் நெற்கட்டும்செவல் பகுதியை ஆட்சிப் புரிந்த பூலித்தேவரிடமிருந்து வெளிப்பட்டது. இதனைத் தொடர்ந்து வேலுநாச்சியார், வீரபாண்டிய கட்டபொம்மன், மருது சகோதரர்கள், தீரன் சின்னமலை போன்றோர் தங்கள் எதிர்ப்புகளை வெளிக்காட்டினர். இந்த எதிர்ப்புகள் **பாளையக்காரர் போர்** என அறியப்பட்டது.இந்த எதிர்ப்புகள் 1806–இல் நிகழ்ந்த வேலூர் புரட்சிக்கு இட்டுச் சென்றது.

**தென்னிந்திய கிளர்ச்சிக்கு காரணமாக அமைந்த சில காரணங்கள்:**

- பாளையங்களில் கம்பெனி ஏற்படுத்திய சீர்த்திருத்தங்கள்
- கம்பெனியின் பொருளாதார சுரண்டல் மற்றும் அதிகபடியான வரி விதிப்பு
- 1798 –இல் ஏற்பட்ட பஞ்சம்
- கம்பெனி நடத்திய அதிகப்படியான போர்கள்

**4. .......... , .......... , .......... இம்மூன்றும் நீங்கா நிலனாள் பவற்கு.**
**மேற்காணும் திருக்குறளில் இடம்பெறும் 'இம்மூன்றும்' என்னும் சொல் குறிப்பவை**

A) கல்வி, செல்வம், வீரம்
B) அறம், பொருள், இன்பம்
C) தூங்காமை, கல்வி, துணிவு
D) அன்பு, பண்பு, பாசம்

**விளக்கம் :** **விடை (C)**

திருக்குறள் – இறைமாட்சி

**தூங்காமை கல்வி துணிவுடைமை இம்மூன்றும்**
**நீங்கா நிலனாள் பவர்க்கு.** – குறள் எண் 383

**பொருள் :** காலம் தாழ்த்தா தன்மை, கல்வியுடைமை, துணிவுடைமை என்ற மூன்று பண்புகளும் நாடாளும் மன்னருக்கு நீங்காமல் இருத்தல் வேண்டும்.

**5. பலகற்றும் அறிவிலாதார் என வள்ளுவர் யாரைச் சுட்டுகிறார்?**

A) கற்றோர் அவையில் பேச அஞ்சுகின்றவரை
B) உலகத்தோடு ஒத்து நடக்காதவரை
C) போர்க்களத்திற்குச் செல்ல அஞ்சுகின்றவரை
D) செல்வந்தரைக் கண்டு அஞ்சுகின்றவரை

**விளக்கம் :** **விடை (B)**

திருக்குறள் – ஒழுக்கமுடைமை

**உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும்**
**கல்லார் அறிவிலா தார்** – குறள் எண் 140

**பொருள் :** உலகத்தோடு ஒத்து நடக்காதவர் பல நூல்களைக் கற்றவராயினும் அறிவில்லாதவரே ஆவார்.

**6. ".......... நான்கும் உடையானாம் வேந்தர்க்கு ஒளி", என வள்ளுவர் எவற்றை வேந்தனுக்குக் கூறுகிறார்?**

A) இயற்றல், ஈட்டல், காத்தல், காத்தவகுத்தல்
B) அறம், பொருள், இன்பம், வீடு
C) கொடை, கருணை, நீதி, தளர்ந்த குடிகளைக் காத்தல்
D) மேற்கண்ட அனைத்தும்

**விளக்கம் :** **விடை (C)**

திருக்குறள் – இறைமாட்சி

**கொடையளி செங்கோல் குடியோம்பல் நான்கும்**
**உடையானாம் வேந்தர்க்கு ஒளி** – குறள் எண் 390

**பொருள் :** கொடை, கருணை, நீதி (செங்கோல்முறை), தளர்ந்த குடிமக்களைக் காத்தல் ஆகிய நான்கும் உடைய அரசன் அரசர்க்கெல்லாம் விளக்கு போன்றவன்.

**7. வஞ்ச மனத்தான் படிற்றொழுக்கம் பூதங்கள் ஐந்தும் அகத்தே நகும் – இதில் வலியுறுத்தப்படுவது எது?**

A) போலி மரியாதை B) போலி உண்மை
C) போலி ஒழுக்கம் D) போலி நடிப்பு

**விளக்கம் :** **விடை (C)**

திருக்குறள் – கூடா ஒழுக்கம்

**வஞ்ச மனத்தான் படிற்றொழுக்கம் பூதங்கள்**
**ஐந்தும் அகத்தே நகும்** – குறள் எண் 271

**பொருள் :** வஞ்சமனம் உடையவனது பொய்யொழுக்கத்தை பிறர் அறியாவிட்டாலும், அவனுடைய உடம்பில் கலந்திருக்கும் ஐந்து பூதங்களும் கண்டு தம்முள் சிரிக்கும்.

**8. துன்பத்தை எவ்வாறு வெல்ல வேண்டும் என்று திருவள்ளுவர் நெறிப்படுத்துகிறார்?**

A) அப்படியே ஏற்றுக்கொள்ளுதல்
B) எதிர்த்துப் போராடுதல்
C) துன்பத்திற்கு துன்பம் கொடுத்தல்
D) துன்பத்தின் போது வருந்துதல்

**விளக்கம் :** **விடை (C)**

திருக்குறள் – இடுக்கண் அழியாமை

**இடும்பைக்கு இடும்பை படுப்பர் இடும்பைக்கு**
**இடும்பை படாஅ தவர்** – குறள் எண் 623

**பொருள் :** துன்பம் வந்தபோது அதற்காக வருந்திக் கலங்காத மனத் தெளிவு உள்ளவர்கள் அத்துன்பத்திற்கே துன்பத்தை உண்டாக்கி அதை வென்று விடுவர்.

**9. ".......... இரண்டும் தங்கா வியனுலகம் வானம் வழங்காது எனின்"**
**மேற்காணும் திருக்குறள் எவ்வினைகள் நடைபெறாது என்று கூறுகிறது?**

A) தர்மம், அன்பு B) தானம், தவம்
C) தவம், இன்பம் D) அறம், பொருள்

**விளக்கம் :** **விடை (B)**

திருக்குறள் – வான்சிறப்பு

**தானம் தவம்இரண்டும் தங்கா வியனுலகம்**
**வானம் வழங்கா தெனின்** – குறள் எண் 19

SURA'S

**பொருள் :** மழை பெய்யாவிட்டால், இப்பரந்த உலகில் பிறர் பொருட்டுச் செய்யப்படும் தானமும், தம்பொருட்டுச் செய்யப்படும் தவமும் இல்லையென்றாகிவிடும்.

**10. "அரம்போலும் கூர்மைய ரேனும் மரம்போல்வர்" மரம் போன்றவர்கள் என்று வள்ளுவரால் குறிப்பிடப்படுபவர் யார்?**

**A)** பயனில் சொல் பேசுபவர்
**B)** மக்கள் பண்பு இல்லாதவர்
**C)** அகத்தில் அன்பு இல்லாதவர்
**D)** பிறரின் பொருளுக்கு ஆசைப்படுபவர்

**விளக்கம் :** **விடை (B)**

**திருக்குறள் – பண்புடைமை**

**அரம்போலும் கூர்மையே ரேனும் மரம்போல்வர்**
**மக்கட்பண்பு இல்லா தவர்** – குறள் எண் 997

**பொருள் :** நன்மக்களுக்கு உரிய பண்பு இல்லாதவர், அரம்போல் கூர்மையான அறிவு உடையவராயினும் ஓரறிவுள்ள மரத்தைப் போன்றவரேயாவர்.

**11. பயல்தொறும் பண்புடையாளர் தொடர்பு எதைப் போன்றது என திருவள்ளுவர் கூறுகிறார்?**

**A)** அகநக நட்பது போன்றது
**B)** நவில்தொறும் நூல் நயம் போன்றது
**C)** கடுத்தது காட்டும் முகம் போன்றது
**D)** கிளைஞரை நீட்டி அளப்பதோர் கோல் போன்றது

**விளக்கம் :** **விடை (B)**

**திருக்குறள் – நட்பு**

**நவில்தொறும் நூல்நயம் போலும் பயில்தொறும்**
**பண்புடை யாளர் தொடர்பு** – குறள் எண் 783

**பொருள் :** நற்பண்பு உடையவரின் நட்பு பழகப் பழக இன்பம் தருவதானது, நூலின் நற்பொருள் கற்கக் கற்க மேன்மேலும் இன்பம் தருதலைப் போன்றது.

**12. 'சமய நடுநிலைப் பண்பு' கொண்டது திருக்குறள் என்பார் இக்கூற்றுக்கு காரணம்**

**I.** எல்லாச் சமயத்தவரும் இது எம் நூல் என்று கூறும் சிறப்புப் பெற்றதால்
**II.** கடவுள் உண்டு என்பவர் மட்டுமன்றி இல்லை என்பவரும் உவந்து ஏற்கும் சிறப்புப் பெற்றதால்
**III.** இனம், சாதி, சமயம், வகுப்பு எல்லாவற்றிற்கும் அப்பாற்பட்டதால்
**IV.** மனித இனத்திற்குப் பொதுவான ஒழுக்கமும், அறிவும் அறிவுறுத்தப்படுவதால்

**சரியான விடையளி :**

**A)** I மட்டும் சரி **B)** II மட்டும் சரி
**C)** III மட்டும் IV மட்டும் சரி **D)** அனைத்தும் சரி

**விளக்கம் :** **விடை : (D)**

திருக்குறளை நாம் படிக்க ஆரம்பித்த உடனேயே அது ஒரு மதச்சார்பற்ற நூல் என்ற உண்மையை அறியலாம். திருவள்ளுவர் வாழ்ந்த காலத்தில் பௌத்த மதம், சீக்கிய மதம், ஜைன மதம், மற்றும் இந்து மதம் போன்ற பல மதங்கள் இருந்தன. அதைப்போலவே இறை மறுப்பாளர்களும் இருந்துள்ளனர். ஆனால் மதச்சார்பற்ற தன்மை எனும் கருத்தாக்கத்தை யாரும் அறிந்திருக்கவில்லை. வள்ளுவரே மத நம்பிக்கை உடையவர்தான். கடவுளைப் புகழ்ந்தே பத்து குறள்களை கொண்ட ஒரு அதிகாரத்தை படைத்துள்ளார். அவரும் ஒரு மதத்தில் இருந்திருக்கலாம். ஆனால் எந்த ஒரு மதத்துக்கும் ஆதாரமாக இந்நூல் இல்லை. குறிப்பாகச் சொல்வதென்றால் எந்த மதத்தைப் பற்றியும் குறிப்பிடக்கூட இல்லை. அனைத்து மதங்களையும் மதித்து நடப்பதே மதச் சார்பின்மை ஆகும். மதச்சார்ந்த நூல்கள், ஒரு மதத்தின் கடவுளின் பெயரால் மனிதர்களுக்கு நல்லொழுக்கத்தைப் போதிக்கும். ஆனால் திருக்குறள் கடவுளின் பெயரைக் கூறாமல் மனிதனுக்கு நல்லொழுக்கத்தையும் வாழ்வியல் நெறிமுறைகளையும் போதிக்கிறது. இது ஒரு நடுநிலையான நூல்.

**13. 'மணல் வீடு' என்ற நாவலின் ஆசிரியர் யார்?**

**A)** அனுத்தமா **B)** பாமா
**C)** அம்பை **D)** இந்துமதி

**விளக்கம் :** **விடை (A)**

'மணல்வீடு' என்ற நாவலின் ஆசிரியர் அனுத்தமா (1922-2010) ஆவார். இவரது இயற்பெயர் ராஜேஸ்வரி பத்மநாபன். 300 சிறுகதைகள், 22 புதினங்கள், 15–க்கும் மேற்பட்ட வானொலி நாடகங்களை எழுதியுள்ளார். தமிழ்நாட்டின் **'ஜேன் ஆஸ்டென்'** என்று புகழப்படுகிறார். 'மணல் வீடு' என்ற படைப்பிற்காக கலைமகள் நாராயணசாமி ஐயர் விருதினை 1949–இல் பெற்றார்.

**14. மேலாண்மை பொன்னுச்சாமியின் சாகித்ய அகாதெமி பரிசு பெற்ற படைப்பு எது?**

**A)** மின்சாரப்பூ
**B)** கல்மரம்
**C)** ஆகாயத்துக்கு அடுத்த வீடு
**D)** அப்பாவின் சிநேகிதர்

**விளக்கம் :** **விடை (A)**

மேலாண்மை பொன்னுச்சாமி என்பவர் தமிழகத்தை சேர்ந்த சிறுகதை மற்றும் புதின எழுத்தாளர். இவர் எழுதிய மின்சாரப் பூ என்ற சிறுகதைத் தொகுப்பு நூல் 2007–ஆம் ஆண்டிற்கான சாகித்ய அகாதமி விருதினைப் பெற்றது. மேலும் கல்கி சிறுகதை போட்டியில் இரண்டு முறை முதல் பரிசினை பெற்றுள்ளார். மேலும் தமிழ் அரசி சிறுகதை போட்டியில் முதல் பரிசனை பெற்றார். ஆனந்த விகடனின் பவள விழா ஆண்டில் முத்திரை பரிசுகள் என்ற பரிசினைப் பெற்றார்.

**15. 'அன்பு சிவமிரண் டென்ப ரறிவிலார்' – எனத் தொடங்கும் பாடலைப் பாடியவர் யார்?**

**A)** பத்திரகிரியார் **B)** பட்டினத்தார்
**C)** பாரதியார் **D)** திருமூலர்

**விளக்கம் :** **விடை (D)**

**திருமந்திரம் – 270 –ஆவது பாடல்**

**அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்**
**அன்பே சிவமாவது ஆரும் அறிகிலார்**
**அன்பே சிவமாவது ஆரும் அறிந்தபின்**
**அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே** – திருமூலர்

**பொருள் :** அன்பு வேறு சிவம் வேறு, இரண்டு ஒன்றல்ல என்று கூறுபவர்கள் அறிவில்லாத மூடர்கள். அன்பே சிவம் என்பதை யாரும் அறியாதிருக்கிறார்கள். அன்புதான் சிவம் என்பதை எல்லோரும் அறிந்துவிட்டால், பிறகு அவர்களே அன்புருவான சிவமாய் வாழ்ந்திருப்பார்கள்.

**16. தமிழர்களின் இசைச் சிறப்பினை எடுத்துரைக்கும் காப்பியம் எது?**

**A)** சிலப்பதிகாரம் **B)** மணிமேகலை
**C)** நீலகேசி **D)** குண்டலகேசி

**விளக்கம் :** **விடை (A)**

சிலப்பதிகாரத்தில் இயல், இசை, நாடகம் ஆகிய முத்தமிழும் அமைந்துள்ளது. தமிழிசை பற்றிய பல செய்திகள் கூறப்பட்டுள்ளன. தமிழிசையின் தன்னிகரற்ற உயர்வு மற்றும் தமிழகத்தின் கூத்து, குரவை ஆகியவை இந்நூலில் கூறப்பட்டுள்ளன. தமிழிசையின் கூறுகளான பண், திறம், தூக்கு ஆகியவையும், குரல் முதலிய ஏழு சுரங்களும், ஏழு பாலைப் பாடல்களும், பாடலாசிரியன், யாழாசிரியன், குழலாசிரியன், தண்ணும்மை ஆசிரியன் ஆகியோரின் இலக்கணங்கள் அரங்கேற்று காதையில் விளக்கப்பட்டுள்ளன. வேட்டுவவரி, குன்றக் குரவை, ஆய்ச்சியர் குரவை போன்றவற்றில் கூத்துக்கலை விளக்கப்பட்டுள்ளது.

**17. மனத்தால் சிவனுக்குக் கோயில் கட்டிய நாயன்மார் யார்?**

**A)** கண்ணப்பர் **B)** பூசலார்
**C)** வாயிலார் **D)** சம்பந்தர்

SURA'S

**விளக்கம் :** **விடை (B)**

63 நாயன்மார்களுள் ஒருவரான பூசலார் சிவபெருமானுக்கு திருக்கோயில் கட்ட விரும்பினார். ஆனால் அவரிடம் அதற்கான பொருட்செல்வம் இல்லாததினால் மனதிற்குள்ளேயே சிவனுக்கு கோயில் கட்ட ஆரம்பித்தார். கோயிலின் ஒவ்வொரு படிநிலையையும் ஒவ்வொரு நாளும் மனதிற்குள்ளேயே கட்டினார். கோயில் திருப்பணி முடிந்து அதற்கான குடமுழுக்கு நாளையும் முடிவு செய்தார். அதே நாளில் காஞ்சியை ஆட்சிசெய்த பல்லவ மன்னன் இறைவனுக்கு கட்டியிருந்த கற்றளி கோயிலில் குடமுழுக்கு ஏற்பாடு செய்திருந்தான். இறைவன் அரசன் கனவில் தோன்றி, "உன்னுடைய குடமுழுக்கை மற்றொருநாள் வைத்துக் கொள், பூசலார் கட்டியுள்ள கோயிலின் குடமுழுக்கிற்கு செல்கிறேன்" என்று கூறி அருளினார். அரசன் பூசலாரிடம் சென்று "இறைவனே உங்கள் கோயிலுக்கு முதலில் வருவதாகக் கூறினார் என்றால், தாங்கள் எத்துணை பெரிய சிவபக்தராக இருக்க வேண்டும். தாங்கள் கட்டிய கோயில் எங்குள்ளது" என்று வினவினான். பூசலார் இறைவனின் கருணையை எண்ணி நெகிழ்வுடன் தான் மனதில் கட்டிய கோயிலைப் பற்றி மன்னனிடம் கூறினார். மன்னன் அதிசயத்து பூசலாரை தாழ்ந்து வணங்கினான்.

**18. ஒரு செம்மொழியின் பண்புகளாக கீழ்காணும் எதை/எவற்றை குறிப்பிடலாம்?**

I. சுதந்திரமான/ தனித்து விளங்கும் இலக்கிய மரபு

II. பெரும் பண்டைய மற்றும் வாய்மொழியிலான இலக்கிய பாரம்பரியத்தை மட்டுமே கொண்டது

III. பெரும் பண்டைய மற்றும் எழுதப்பட்ட இலக்கிய பாரம்பரியத்தை கொண்டது

**சரியான விடையளி :**

A) I மற்றும் II மட்டும் B) II மட்டும்
C) III மட்டும் D) I மற்றும் III மட்டும்

**விளக்கம் :** **விடை (D)**

**செம்மொழிப் பண்புகள் :**

1. தொன்மை
2. பிறமொழித் தாக்கமின்மை
3. தாய்மை
4. தனித்தன்மை
5. இலக்கிய வளம்
6. பொதுமைப் பண்பு
7. நடுவுநிலைமை, பண்பாடு, கலை, பட்டறிவு வெளிப்பாடு
8. உயர்சிந்தனை
9. கலை, இலக்கியத்தன்மை வெளிப்பாடு
10. மொழிக்கோட்பாடு

ஒரு மொழி செம்மொழியாக இருப்பதற்கு அம்மொழி பழைமை வளமையுடன், பேச்சு மொழியாக, எழுத்து மொழியாக, பயிற்றுமொழியாக நிலை பெற்றிருக்க வேண்டும்.

**19. "மகமுறை மகமுறை நோக்கி முகனமர்ந்து ஆனா விருப்பின் தானின் றூட்டி"**
**– இப்பெரும்பாணாற்றுப்படை பாடலில் எப்பண்பு வெளிப்படுகிறது?**

A) கொடை B) வீரம்
C) தாய்மை D) விருந்தோம்பல்

**விளக்கம் :** **விடை (D)**

**பெரும்பாணாற்றுப்படை சுட்டும் விருந்தோம்பல்**

**கொடுவாள் கதுவிய வடுஆழ் நோன்கை**
**வல்லோன் அட்ட பல்ஊன் கொழுங்குறை**
**அரிசெத்து உணங்கிய பெருஞ்செந் நெல்லின்**
**தெரிகொள் அரிசித் திரள்நெடும், புழுக்கல்,**
**அருங்கடித் தீம்சுவை அமுதொடு பிறவும்,**
**விருப்புடை மரபின கரப்புடை அடிசில்,**
**மீன்பூத் தன்ன வான்கலம் பரப்பி,**
**மகமுறை, மகமறை நோக்கி, முகன் அமர்ந்து**
**ஆனா விருப்பின் தான்நின்று ஊட்டி**
**மங்குல் வானத்துத் திங்கள் ஏய்க்கும்**

– உருத்திரங் கண்ணனார்

மேற்கண்ட பாடலடிகள், ஊன் கலந்த உணவினை பல்வேறு கிண்ணங்களில் பரப்பி, தாய் பிள்ளைகளுக்கு ஊட்டுவது போல இன்பமுடன் உணவு அளித்து விருந்தோம்பல் செய்ததைக் குறிப்பிடுகின்றன.

**20. கல்லாதவர்களை வள்ளுவர் எதனுடன் ஒப்பிடுகிறார் ?**

A) பேய் B) பூதம்
C) கூற்றம் D) விலங்கு

**விளக்கம்** **விடை : (D)**

**திருக்குறள் (அதிகாரம் : கல்லாமை)**

**விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல்**
**கற்றாரோடு ஏனை யவர்.**

**விளக்கம் :** அறிவு விளங்குதற்குக் காரணமான நூல்களைக் கற்றவரோடுக் கல்லாதவர், மக்களோடு விலங்குகளுக்கு உள்ள அவ்வளவு வேற்றுமை உடையவர்.

இவ்வாறாக கல்லாதவர்களை வள்ளுவர் விலங்குடன் ஒப்பிடுகிறார்.

**21. என்பும் உரியர் பிறர்க்கு – என்று வள்ளுவர் யாரைக் குறிப்பிடுகின்றார் ?**

A) மாண்புடையார் B) பண்புடையார்
C) அன்புடையார் D) அறிவுடையார்

**விளக்கம்** **விடை : (C)**

**திருக்குறள்(அதிகாரம்: அன்புடைமை)**

**அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்**
**என்பும் உரியர் பிறர்க்கு.**

**விளக்கம் :** அன்பு இல்லாதவர் எல்லாப்பொருள்களையும் தமக்கே உரிமையாகக் கொண்டு வாழ்வார், அன்பு உடையவர் தம் உடமையும் பிறர்க்கு உரிமையாக்கி வாழ்வர்.

**22. 'பலகற்றும் கல்லா ரறிவிலாதார்' என வள்ளுவர் யாரைக் குறிப்பிடுகின்றார் ?**

A) பொருளோடு வாழாதார் B) அருளோடு வாழாதார்
C) புகழோடு வாழாதார் D) உலகியலோடு வாழாதார்

**விளக்கம்** **விடை : (D)**

**திருக்குறள் (அதிகாரம் : ஒழுக்கமுடைமை)**

**உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும்**
**கல்லார் அறிவிலா தார்.**

**விளக்கம் :** உலகத்து உயர்ந்தவரோடு பொருந்த ஒழுகும் முறையைக் கற்காதவர், பல நூல்களைக் கற்றிருந்த போதிலும் அறிவில்லாதவரே ஆவர்.

**23. புத்தேன் உலக வாழ்க்கையை யார் உறுதியாக வாழ்வர் என்று வள்ளுவர் குறிப்பிடுகிறார் ?**

A) திருடாதார் B) பொய் சொல்லாதார்
C) புறங்கூறாதார் D) சினங் கொள்ளாதார்

**விளக்கம்** **விடை : (A)**

**திருக்குறள் (அதிகாரம் : புகழ்)**

**நிலவரை நீள்புகழ் ஆற்றின் புலவரைப்**
**போற்றாது புத்தேள் உலகு**

**விளக்கம் :** உலகத்தின் எல்லைவரை பரவி நிற்கும் புகழுக்குரிய செயலை ஒருவன் செய்தால், வானுலகமும் தேவரைப் போற்றாது; அப்புகழாளனையே விரும்பிப் போற்றும். இவ்வாறாக புத்தேள் உலக வாழ்க்கையை திருடாதார் உறுதியாக வாழ்வார் என வள்ளுவர் குறிப்பிடுகின்றார்.

SURA'S

**குறிப்பு:** தன்னோடு பயின்றாரைக் கண்டால் அவர் கூறின மறுக்க மாட்டாமை என்று வினாவில் தவறாகக் கொடுக்கப்பட்டுள்ளது.

**2. "ஒழுக்காறாக் கொள்க ஒருவன்தன் நெஞ்சத்து அழுக்காறு இலாத இயல்பு"**

**எனும் குறளில் வரும் 'அழுக்காறு' என்பதன் பொருள் யாது?**

**A)** அன்பு **B)** அடக்கம்
**C)** பொறாமை **D)** பண்பு

**விளக்கம் :** **விடை: (C)**

**அழுக்காறாமை**

**''ஒழுக்காறாக் கொள்க ஒருவன்தன் நெஞ்சத்து
அழுக்காறு இலாத இயல்பு'' – குறள் : 161**

**பொருள் :** ஒருவன் தன் நெஞ்சில் அழுக்காறு (பொறாமை) இல்லாமல் வாழும் இயல்பைத் தனக்கு உரிய ஒழுக்க நெரியாகக் கொண்டு போற்றவேண்டும்.

**3. பின்வருவனவற்றிலிருந்து தவறாக இணைக்கப்பட்டுள்ளதைத் தேர்ந்தெடுக்கவும்.**

1) 1962 – சென்னை மாநில (பெயர் மாற்றம்) சட்டம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.
2) 1967 – தமிழக முதலமைச்சராகப் பேரறிஞர் அண்ணா பதவியேற்றார்
3) 1968 – பேரறிஞர் அண்ணா ராஜ்யசபாவிற்கு தேர்ந்தெடுக்கப்பட்டார்
4) 1969 – சென்னை மாநில (பெயர் மாற்றம்) சட்டம் அமலுக்கு வந்தது.

**சரியான விடையளி :**

**A)** (1) மட்டும் தவறு **B)** (1) மற்றும் (2) தவறு
**C)** (1) மற்றும் (3) தவறு **D)** (1) மற்றும் (4) தவறு

**விளக்கம் :** **விடை: (C)**

**அறிஞர் அண்ணா**

பிறப்பு : 1909 , செப்டம்பர் 15
ஊர் : காஞ்சிபுரம்
பெற்றோர் : நடராசன் / பங்காரு
படிப்பு : பச்சையப்பன் கல்லூரியில் பொருளாதாரத்தில் இளங்கலை பட்டம்
இறப்பு : 1969, பிப்ரவரி 3

✦ இவர் நீதிக்கட்சியின் வாயிலாக அரசியலில் நுழைந்தார். சாதி சமய மற்றும் ஏற்ற தாழ்வு இல்லாத சமுதாயத்தை உருவாக்க வேண்டும் என்ற கொள்கையுடன் வாழ்ந்தார்.

✦ தமிழ்ப்பற்று மிகுந்த இவர் இந்தி எதிர்ப்பு மாநாட்டில் கலந்து கொண்டு இந்திமொழிக்கு எதிராகக் குரல் கொடுத்தார்.

✦ 1937–இல் நீதிகட்சி மாநாடான துறையூர் மாநாட்டிற்கு தலைமை வகித்தார். அண்ணாதுரையின் திருப்பூர் பேச்சும், துறையூர் பேச்சும் தமிழ்நாட்டு மக்களிடையே அவரது செல்வாக்கு பெருகப் பெரிதும் காரணமாக இருந்தன. 1938-இல் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் பெரியாரும், அண்ணாதுரையும் பங்கேற்று கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர்

✦ துணை ஆசிரியராக – குடியரசு, விடுதலை ஆகிய இதழ்களை நடத்தினார். அண்ணா "தென்னகத்துப் பெர்னாட்ஷா" என்று அழைக்கப்பட்டார்.

✦ 1943, திருச்சியில் கூட்டப்பட்ட 14–வது நீதிக்கட்சி மாநாட்டிற்கு அண்ணாதுரை தலைமை தாங்கினார். 1944, சேலத்தில் கூட்டப்பட்ட நீதிக்கட்சி மாநாடு தமிழ்நாட்டு வரலாற்றின் முக்கிய நிகழ்ச்சிகளில் ஒன்றாகும். காங்கிரஸ் தலைவராக இருந்த டாக்டர் வரதராஜு நாயுடு அண்ணாதுரையை நீதிக்கட்சியின் மூளை என்று வர்ணித்தார்.

✦ 1949 ஆம் ஆண்டு செப்டம்பர் 17ஆம் நாள் 'திராவிட முன்னேற்றக் கழகம்' என்னும் புதிய கட்சியைத் தொடங்கினார்.

✦ 1957–ஆம் ஆண்டில் நடைபெற்ற இரண்டாவது பொதுத் தேர்தலில் அண்ணா, தனது சொந்த தொகுதியான காஞ்சிபுரத்திலிருந்து மதராஸ் சட்டச்சபைக்கு முதன்முறையாக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

✦ **1962**–இல் நடைபெற்ற சட்டச்சபை தேர்தலில் 50 இடங்களில் வெற்றிப்பெற்ற திமுக, காங்கிரஸை தவர்த்த மிகப்பெரிய அரசியல் கட்சியாக உருவெடுத்தது. அண்ணா இத்தேர்தலில் தோல்வி அடைந்தாலும் **அவர் நாடாளுமன்ற மாநிலங்களவை உறுப்பினராக** தேர்ந்தெடுக்கப்பட்டார்.

✦ இவர் 1967–ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் வெற்றி பெற்று, அண்ணா தமிழக முதலமைச்சராகப் பொறுப்பேற்றார்.

**தமிழ்நாடு எனப் பெயர் மாற்றப் போராட்டம்**

✦ தமிழர்கள் தங்கள் மாநிலத்திற்கு சென்னை மாநிலம் என்றிருக்கும் பெயரை "தமிழ்நாடு" என்று மாற்ற விரும்பினர். இந்த பெயர் மாற்றத்திற்கான போராட்டம் பத்தாண்டுகளாக நடைபெற்றது. மாநில மறுசீரமைப்பு ஆணையம் இந்த பெயர் மாற்றத்திற்கு பரிந்துரைக்கவில்லை. மா.பொ.சி. (மா.பொ. சிவஞானம்) அவர்களின் இடைவிடாத முயற்சியின் விளைவாக அனைத்து கட்சிகளின் மாநாடு ஜனவரி 27, 1956 அன்று ஒரு பொது வேலை நிறுத்தத்திற்கு அறைகூவல் விடுத்தது.

✦ ஏராளமான ஆர்ப்பாட்டங்கள், முற்றுகை போராட்டங்கள் சென்னை மாநிலத்தில் நடத்தப்பட்டன. மகாத்மா காந்தியின் சீடரும், சுதந்திர போராட்ட வீரருமான விருதுநகர் சங்கரலிங்கனார் இந்த பெயர் மாற்றக் கோரிக்கைக்காக சாகும் வரை உண்ணாநோன்பினை ஜூலை 27, 1956 அன்று ஆரம்பித்தார்.

✦ அக்டோபர் 13, 1956 அன்று 76–ஆவது நாள் காலமானார். சங்கரலிங்கனாரின் தியாகம் சென்னை மாநிலத்தின் பல பகுதிகளில் பெரும் எழுச்சியை உருவாக்கியது.

✦ அண்ணா முதலமைச்சராக பதவியேற்றப்பின் **மெட்ராஸ் மாநில பெயர் மாற்ற சட்டம் 1968**–இல் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. 1969 – ஜனவரி 14, மதராஸ் மாநில (பெயர் மாற்றம்) சட்டம் நடைமுறைக்கு வந்தது.

✦ அண்ணா 1969–ஆம் ஆண்டு பிப்ரவரி 3 ஆன்று தனது 59–ஆவது வயதில் இயற்கை எய்தினார்.

**4. கீழே கொடுக்கப்பட்டுள்ளனவற்றிலிருந்து சரியாகப் பொருந்திய இணைகளைக் கண்டுபிடித்து, கொடுக்கப்பட்ட குறியீட்டிலிருந்து சரியானப் பதிலைத் தேர்ந்தெடுக்கவும்.**

**A)** 1925 – பெரியார் ஈ.வெ.ரா 'குடியரசு' என்ற பருவ இதழைத் தொடங்கினார்
**B)** 1928 – ஆங்கில பருவ இதழ் 'ரிவோல்ட்' தொடங்கப்பட்டது
**C)** 1934 – பெரியார் 'விடுதலை' யைத் தமிழ் நாளிதழாக வெளியிட்டார்.
**D)** 1937 – பெரியார் 'பகுத்தறிவு' என்ற தமிழ்வார இதழை வெளியிட்டார்.

**சரியான விடையளி :**

**A)** (1) மற்றும் (2) மட்டும் சரியானவை
**B)** (1) மற்றும் (3) மட்டும் சரியானவை
**C)** (1) மற்றும் (4) மட்டும் சரியானவை
**D)** (1), (2) மற்றும் (4) மட்டும் சரியானவை

**விளக்கம் :** **விடை: (A)**

**பத்திரிகைகள் மற்றும் புத்தகங்கள் – பெரியார்**

✦ பெரியார் 1925–ஆம் ஆண்டு, சுய மரியாதை கொள்கைகளைப் பரப்புவதற்காக **'குடியரசு'** என்ற வார இதழைத் தொடங்கினார். இதன் பதிப்பாசிரியராக இவரே பணியாற்றினார்.

SURA'S

- 1928–ல் '**ரிவால்ட்**' (Revolt) என்ற ஆங்கிலப் பத்திரிக்கையை ஆரம்பித்தார்.
- பெரியார் '**குடும்ப கட்டுப்பாடு**' எனும் புத்தகத்தை 1930–ல் வெளியிட்டார். குழந்தைகளின் எண்ணிக்கையை கட்டுப்படுத்துதல் தொடர்பான பிரச்சாரத்தை பெரியார் மேற்கொண்டார்.
- 1933–ஆம் ஆண்டில் மற்றொரு பத்திரிக்கையான '**புரட்சி**' (Revolution) பெரியாரால் தொடங்கப்பட்டது.
- 1934–ல் பெரியார் '**பகுத்தறிவு**' (Rationalism) என்ற தமிழ் வார இதழைத் தொடங்கினார்.
- பெரியார் **"பெண் ஏன் அடிமையானாள்?"** என்ற புத்தகத்தை எழுதி வெளியிட்டார்.
- 1935–ல் நீதிக்கட்சி தமிழ் வார இதழான '**விடுதலை**' என்ற இதழைத் தொடங்கியது. பின்னர் பெரியார் இந்த இதழுக்கு பொறுப்பேற்று **1937–ல்** அது தமிழ் நாளிதழாக வெளிவர காரணமாக இருந்தார்.
- 1950–ல் பெரியார் தனது புத்தகமான 'பொன்மொழிகள்' (Golden Sayings) என்ற புத்தகத்தை வெளியிட்டதற்காக சிறை தண்டனை பெற்றார்.
- 1970–ஆம் ஆண்டில் திருச்சியில் மாதத்திற்கு இருமுறை வெளிவரும் '**உண்மை**' (Unmai) என்ற இதழ் பெரியாரால் தொடங்கப்பட்டது.
- 1930–ஆம் ஆண்டு லாகூரில் இந்திய தீவிர தேசியவாதியான பகத் சிங் "Why I am a natheist" (நான் ஏன் நாத்திகவாதி) என்ற புத்தகத்தை எழுதினார். பெரியாரின் வேண்டுகோளுக்கு இணங்க ஞ. ஜீவானந்தம் இந்த புத்தகத்தை தமிழில் மொழிபெயர்த்தார்.
- 1935 ஆம் ஆண்டு ஜனவரி 13 ஆம் தேதி பெரியார் தமிழ் மொழி சீர்திருத்தத்தை அறிமுகப்படுத்தினார். இத்தமிழ் மொழி சீர்திருத்தம் பின்னாளில் 1978 ஆம் ஆண்டு முதலமைச்சராக இருந்த எம்ஜிஆர் தலைமையிலான தமிழக அரசாங்கத்தால் செயல்படுத்தப்பட்டது

**5. பொருத்துக.**

| | | |
|---|---|---|
| 1. கிருஷ்ணாபாய் நிம்கர் | – | மதராஸ் இளைஞர் சங்கம் |
| 2. ருக்மினி லக்ஷ்மிபதி | – | மதராஸ் மகளிர் மாணவர் அமைப்பின் தலைவர் |
| 3. அந்தோனி அம்மாள் | – | பங்கஜா ஜவுளி ஆலை |
| 4. மஞ்ஜுபாஷினி | – | தமிழ்நாடு காங்கிரஸ் குழுவின் தலைவர் (பொறுப்பு) வெள்ளையனே வெளியேறு இயக்கத்தின் போது |

**சரியான விடையளி :**

**A)** (1) மற்றும் (3) சரியானவை
**B)** (1) மற்றும் (2) சரியானவை
**C)** (2) மற்றும் (3) சரியானவை
**D)** (3) மற்றும் (4) சரியானவை

**விளக்கம் :** **விடை: (D)**

**கிருஷ்ணாபாய் நிம்பகர் :**

இவர் ஒரு சுதந்திரப் போராட்ட பெண்மணி, மருத்துவர் மற்றும் கிராமப்புற மேம்பாட்டு ஆர்வலர் ஆவார். ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில், அவர் இந்திய சுதந்திரப் போராட்டத்தில் தீவிரமாகப் பங்கேற்றார். வெள்ளையனே வெளியேறு இயக்கத்தில் ஈடுபட்டதற்காக கைது செய்யப்பட்டார். மேலும், கிராமப்புற பெண்களின் மேம்பாட்டிற்காக அவர் குறிப்பிடத்தக்க பங்களிப்பைச் செய்துள்ளார்.

கிருஷ்ணாபாய் நிம்பகர் மெட்ராஸ் இளைஞர் லீக்குடன் தொடர்புடையவர் அல்ல. எனவே இப்பொருத்தம் தவறானவை.

**ருக்மணி லட்சுமிபதி :**

இவர் டிசம்பர்–6, 1892–ஆம் ஆண்டு சென்னையில் ஒரு விவசாயக் குடும்பத்தில் பிறந்தார். தமிழகத்தின் பெண் தலைவர்களில் முக்கியமானவர். 1923–இல் காங்கிரஸ் பேரியக்கத்தில் இணைந்தார். 1926–இல் பாரீஸில் நடந்த சர்வதேச பெண்கள் வாக்குரிமைப் பேராயத்தில் இந்தியப் பிரதிநிதியாகக் கலந்து கொண்டார். காந்தியடிகள் தலைமையில் 1930–இல் நாடு முழுவதும் உப்பு சத்தியாக்கிரகப் போராட்டம் நடைபெற்றபோது, வேதாரண்யத்தில் நடந்த உப்பு சத்தியாக்கிரகத்தில் பங்கேற்றதற்காக கைது செய்யப்பட்டு, ஓராண்டு சிறைத்தண்டனை பெற்றார். உப்பு சத்தியாக்கிரக இயக்கத்தில் சிறை சென்ற முதல் பெண் என்ற பெருமையைப் பெற்றார். 1934–இல் சென்னை மாகாண சட்டப்பேரவை இடைத்தேர்தலில் போட்டியிட்டு வெற்றிபெற்றார். தொடர்ந்து, 1937–இல் நடந்த சென்னை மாகாண சட்டப்பேரவைத் தேர்தலிலும் வெற்றி பெற்று, சட்டப்பேரவையின் துணை சபாநாயகராகத் தேர்வு செய்யப்பட்டார்.

பின்னர், அன்றைய முதலமைச்சர் T. பிரகாசத்தின் அமைச்சரவையில் 1946 முதல் 1947 வரை சுகாதாரத் துறை அமைச்சராகவும் பதவி வகித்தார். இதன்மூலம் தமிழகத்தில் அமைச்சர் பதவி வகித்த முதல் பெண் மற்றும் சுதந்திரத்துக்கு முன்பு அமைச்சர் பதவி வகித்த ஒரே பெண் என்ற பெருமையை பெற்றார். மதராஸ் மகளிர் மாணவர் அமைப்பின் தலைவர் என்ற தகவல்கள் இல்லை. எனவே இப்பொருத்தம் தவறானவை.

**அந்தோனி அம்மாள் :**

இவர் பங்கஜா ஜவுளி ஆலையில் பணிபுரியும் பெண் தொழிலாளர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதில் குறிப்பிடத்தக்க பங்கைக் கொண்டிருந்த ஒரு முக்கிய தொழிலாளர் ஆர்வலர் அந்தோணி அம்மாள் ஆவார். தொழில்துறை தொழிலாளர்கள், குறிப்பாக பெண் தொழிலாளர்கள் பெரும்பாலும் கடுமையான மற்றும் சுரண்டல் சூழல்களுக்கு ஆளான நேரத்தில், தொழிலாளர் நலன், நியாயமான ஊதியம் போன்றவற்றிற்காக அவர் அச்சமின்றி வாதிட்டார்.

**மஞ்சுபாஷினி :**

மஞ்சுபாஷினி 1906 ஆம் ஆண்டில் பிறந்தார். அவர் எழும்பூரில் உள்ள பிரசிடென்சி பெண்கள் பள்ளியில் எட்டாம் வகுப்பு வரை படித்தார். அவர் தனது 12வது வயதில் சுப்பிரமணியம் என்பவரை மணந்தார். காந்திஜியின் சுதந்திர போராட்டத்தால் ஈர்க்கப்பட்ட அவர், 1942 ஆம் ஆண்டில் வெள்ளையனே வெளியேறு இயக்கத்தில் தீவிரமாக ஈடுபட்டார். வெள்ளையனே வெளியேறு இயக்கத்தின் போது தமிழ்நாடு காங்கிரஸ் குழுவின் பெண் தலைவர் பொறுப்பில் இருந்தார். தம்பு செட்டி தெருவில் மேற்கொள்ளப் பட்ட வெளிநாட்டுப் பொருட்கள் எரிப்பு மற்றும் ராஜாஜி ஏற்பாடு செய்த வேதாரண்யம் உப்புச் சத்தியாக்கிரக ஊர்வலத்தில் பங்கேற்றார்.

அம்மு சுவாமிநாதனுடன் சேர்ந்து ஒன்றரை ஆண்டுகள் வேலூர் சிறையில் கழித்த அவர், 1941-42 ஆம் ஆண்டில் பர்மிய அகதிகளுக்கு மறுவாழ்வு அளிக்க சென்னையில் ஒரு முகாமை ஏற்பாடு செய்தார்.

**6.** **கூற்று (A)** : ஆங்கிலேய கம்பெனியாளர்கள் வீரபாண்டியக் கட்டபொம்மனை இராமநாதபுரத்து ஆட்சியாளரின் அலுவலகத்தில் ஆஜராகுமாறு கேட்டுக்கொண்டார்

**காரணம் (R)**: ஆங்கிலேய கம்பெனியாருக்கு கட்ட வேண்டிய கப்பம் நிலுவையில் இருப்பதால் ஆட்சியாளரை சந்திக்குமாறு கட்டபொம்மன் கேட்டுக்கொள்ளப்பட்டார்.

**சரியான விடையளி :**

**A)** **(A)** சரி **(R)** தவறு.
**B)** **(A)** மற்றும் **(R)** தவறு.
**C)** **(A)**–ம் சரி **(R)**ம் சரி ; ஆனால் **(R)** என்பது **(A)**–க்கு சரியான விளக்கமாகும்.
**D)** **(A)**–ம் சரி **(R)**ம் சரி ; மேலும் **(R)** என்பது **(A)**–க்கு சரியான விளக்கமாகாது.

**விளக்கம் :** **விடை: (C)**

**வீரபாண்டிய கட்டபொம்மனின் புரட்சி (1790 - 1799)**

தனது தந்தை ஜெகவீரபாண்டிய கட்டபொம்மனின் மறைவுக்குப் பிறகு பாஞ்சாலங்குறிச்சியின் ஆட்சிப் பொறுப்பை இவர் தனது முப்பதாவது வயதில் ஏற்றுக்கொண்டார். ஆங்கிலேயருக்கு வரி கொடுக்க மறுத்ததால் இவருக்கும் கிழக்கிந்தியக் கம்பெனியாருக்கும் பகை ஏற்பட்டது. ஜாக்ஸன் என்ற ஆட்சியர் இவரை பல முறை சந்திக்க மறுத்து அவமானப்படுத்தினார். இறுதியாக 1798–இல் இராமநாதபுரத்தில் சந்திக்க அனுமதி கொடுத்தார். அங்கு தனது அமைச்சர் சிவசுப்பிரமணியனுடன் சென்ற கட்டபொம்மனை கைது செய்ய ஆங்கிலேயர் முயன்றனர். அங்கு நடந்த மோதலில் கட்டபொம்மனால் லெப்டினென்ட் க்ளார்க் உள்ளிட்ட சிலர் கொல்லப்பட்டனர். கட்டபொம்மன் தப்பிவிட்டார். சிவசுப்பிரமணியனார் கைது செய்யப்பட்டார்.

பாஞ்சாலங்குறிச்சிக்குத் திரும்பிய கட்டபொம்மன் ஆட்சியர் ஜாக்சன் தன்னை எவ்வாறெல்லாம் அவமானப்படுத்தினார் என்பதை மதராஸ் ஆட்சிக்குழுவிற்குத் தெரியப்படுத்தினார். வில்லியம் ப்ரௌன், வில்லியம் ஓரம், ஜான் காஸாமேஜர் அடங்கிய குழுவின் முன் 1798 டிசம்பர் 15 அன்று கட்டபொம்மன் ஆஜராகி இராமநாதபுரத்தில் தனக்கு நிகழ்ந்த அவமானங்களை விளக்கிக் கூறினார். அக்குழு வீரபாண்டிய கட்டபொம்மன் குற்றவாளி அல்லர் எனத் தீர்ப்பு வழங்கியதுடன் ஜாக்ஸனை பணி இடைநீக்கம் செய்து புதிய ஆட்சியராக எஸ்.ஆர் லூஷிங்டன் என்பவரை நியமித்தது. அமைச்சர் சிவசுப்பிரமணியனார் விடுதலை செய்யப்பட்டார். கூற்று (A)–ம் காரணம் (R)ம் சரி ; மேலும் (R) என்பது (A)–க்கு சரியான விளக்கமாகும்.

**7. மனித வளர்ச்சியில் பின்வரும் வெவ்வேறு நிலைகளை ஒழுங்கமைக்கவும் :**

**1)** நாடோடி நிலை **2)** ஆயர் நிலை
**3)** வேடன் நிலை **4)** விவசாய நிலை

**சரியான விடையளி :**

**A)** 2, 3, 1, 4 **B)** 1, 4, 3, 2
**C)** 3, 1, 2, 4 **D)** 4, 1, 2, 3

**விளக்கம் :** **விடை: (C)**

மனித வளர்ச்சியின் வெவ்வேறு நிலைகளின் காலவரிசை ஒழுங்கமைத்தல்

**1. வேடன் நிலை (Hunting Stage)**

இது மனித வளர்ச்சியின் ஆரம்ப கட்டமாகும். இதில் மனிதர்கள் வேட்டையாடி உணவைச் சேகரித்து வாழந்தனர்.

**2. நாடோடி நிலை (Nomadic Stage)**

வேட்டையாடி சேகரித்த பிறகு, மனிதர்கள் உணவு மற்றும் நீருக்காக ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு நகர்ந்தனர்.

**3. ஆயர் நிலை (Pastoral Stage)**

மனிதர்கள் விலங்குகளை வளர்க்கத் தொடங்கி, அவை உணவு மற்றும் பிற தேவைகளுக்காகப் பயன்படுத்தப்பட்டன.

**4. விவசாய நிலை (Agricultural Stage)**

மனிதர்கள் பயிர்களை பயிரடத் தொடங்கி, நிரந்தர குடியேற்றங்களை உருவாக்கினர். இது சமூக வளர்ச்சிக்கு வழிவகுத்தது.

**8. பிறவிப் பெருங்கடல் நீந்துவார் நீந்தார்**
**இறைவனடி சேரா தார்**
**– இக்குறள் உணர்த்தும் தத்துவம் என்ன ?**

**A)** சிவ தத்துவம் **B)** வித்யா தத்துவம்
**C)** சரணாகதி தத்துவம் **D)** ஆன்ம தத்துவம்

**விளக்கம் :** **விடை: (C)**

**பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்**
**இறைவன் அடிசேரா தார்.**

**பிரிவு** – அறத்துப்பால்
**இயல்** – பாயிரவியல்
**அதிகாரம்** – கடவுள் வாழ்த்து
**குறள் எண்** – 10

**பொருள் :** பிறவித் துன்பம் என்னும் பெருங்கடலைக் கடக்க நினைப்பவர்கள் இறைவனின் திருவடிகளில் முழுவதுமாக **சரணடைந்து விடுவார்கள்.** அவ்வாறு செய்யாதவர்களால், பிறவித் துன்பம் என்னும் பெருங்கடலில் இருந்து கரையேற இயலாது.

**விரிவான விளக்கம்:** பிறவி என்ற பெருந்துன்பத்திற்கு, ஐவகை நிலங்களுள் பிறவற்றைக் கூறாமல், கடலை மட்டும் உவமையாக வள்ளுவர் கூறியதன் காரணம் பிறவகை நிலங்களைக் கடப்பதை விட கடலை நீந்திக் கடப்பது கடினம் என்பதால்தான். கரையை அடையும் வரை இடைவிடாமல் நீந்திக்கொண்டே இருக்க வேண்டும். நீந்துவதை நிறுத்தினால் கடலில் மூழ்கிவிடுவோம். இடைவிடாமல் நீந்துவது போல்தான் தொடர் இறை சிந்தனை. முழுமையாக இறைவனை சரணடைந்து விட்டால், பிறவித் துன்பத்திலிருந்து நீங்கிவிடலாம்.

**9. திருக்குறள் உரையாசிரியர்கள்**

**i)** பரிப்பெருமாள் **ii)** தருமர்
**iii)** கி.வ.ஜா **iv)** தண்டபாணி தேசிகர்

**சரியான விடையளி :**

**A)** (i) மட்டும் **B)** (i,), (ii) மட்டும்
**C)** (iii) மற்றும் (iv) மட்டும் **D)** (iv) மட்டும்

**விளக்கம் :** **விடை: (*)**

**தருமர் மணக்குடவர் தாமதத்தர் நச்சர்**
**பரிதி பரிமே லழகர் - திருமலையர்**
**மல்லர் பரிப்பெருமாள் காலிங்கர்**
**வள்ளுவர்நூற்கு எல்லையுரை செய்தார் இவர்**

என்ற பாடலின் மூலம் திருக்குறளுக்கு உரையெழுதியவர் பதின்மர் என்று அறிய முடிகிறது. இவர்களுள் பரிமேலழகர், மணக்குடவர், பரிதி, பரிப்பெருமாள், காலிங்கர் ஆகிய ஐவரின் உரைகள் கிடைத்து, அச்சில் வெளிவந்துள்ளன. கடவுள் வாழ்த்தில் 5 மற்றும் 6 ஆகிய இரண்டிற்கு மட்டும் நச்சர், தருமர், தாமதத்தர் ஆகிய மூவரின் உரைகள் கிடைத்துள்ளன.

பிற்கால உரையாசிரியர்கள் இத்தனை பேர் என்று உறுதியாகக் கூற முடியாத அளவில் திருக்குறளுக்கு உரையெழுதிய சான்றோர் பலராவர். **திருக்குறள் ஆராய்ச்சிப் பதிப்பு (தொகுப்பு நூல்) திருக்குறள் விளக்கு (நாடக பாணி உரை நூல்)** ஆகிய நூல்களின் ஆசிரியர் கி.வா.ஜகந்நாதன் ஆவார். **திருக்குறள் உரைக்களஞ்சியம், திருக்குறள் உரைவளம்** ஆகிய நூல்களின் ஆசிரியர் தண்டபாணி தேசிகர் ஆவார்.

**10. கூற்று (A)** : "உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும்
சேரா தியல்வது நாடு"

**காரணம் (R):** நாட்டை வாழ்த்துவதையும், நாட்டு மக்களின் மேம்பாட்டை விரும்புவதையும் புலவர்கள் தலையாய கடமையாகக் கருதுகின்றனர். தன் நாடு மட்டுமன்றி என்னாடும் சிறப்புற்றிருக்க விரும்புகின்றனர்.

**சரியான விடையளி :**

**A)** **(A)** சரி **(R)** தவறு.
**B)** **(A)** தவறு, ஆனால் **(R)** சரி
**C)** **(A)**–மற்றும் **(R)** இரண்டும் சரி ; மற்றும் **(R)** என்பது **(A)**–க்கு சரியான விளக்கமாகும்.
**D)** **(A)**–மற்றும் **(R)** இரண்டும் சரி ; மற்றும் **(R)** என்பது **(A)**–க்கு சரியான விளக்கமல்ல.

**விளக்கம் :** **விடை: (D)**

**நாட்டின் இயல்பு :**

**உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும்**
**சேராது இயல்வது நாடு.**

**பிரிவு** – பொருட்பால்
**இயல்** – அரணியல்
**அதிகாரம்** – நாடு
**குறள் எண்** – 734

**பொருள் :** நீங்காத பசித்துன்பமும், தீராத நோய்களும், அழிக்க நினைக்கும் பகைவர்களும் தன்னைச் சேராமல் வலிமையோடும், வளமோடும் விளங்குவதே ஒரு நல்ல நாட்டின் இயல்பாகும்.

**புலவர்களின் இயல்புகள் :**

1. பகைவர் இவர், நட்பினர் இவர் என்னும் வேற்றுமை இல்லாதவர்கள்.
2. தம்முள் பகை கொண்ட தமிழ் வேந்தரிடையே ஒருபக்கச் சார்பு இன்றி நடுநிலையில் பழகுந்திறம் அவர்களிடம் இருந்தது.
3. தன்னாடு எவ்வாறு செழிப்புடன் விளங்க வேண்டும் என்று எண்ணியது போல் பிறநாடுகளும் விளங்க வேண்டும் என எண்ணினர்.
4. பழுத்த மரங்களை நாடிச் செல்லும் பறவைகள் போல், பல நாடுகளுக்கும் சென்று, மன்னரை வாழ்த்துதல், நாட்டு வளங்களை வாழ்த்துதல், நாட்டு மக்களை வாழ்த்துதல் புலவர்களின் உயரிய பண்புகளாகும்.
5. சங்கத்தொகை நூல்களில் இதற்கானச் சான்றுகள் உள்ளன.

**கூற்றில் நாட்டின் இயல்பும், காரணத்தில் புலவர்களின் இயல்புகளும் கொடுக்கப்பட்டுள்ளன. எனவே கூற்று, காரணம் இரண்டும் சரியானவை. ஆனால் காரணம், கூற்றிற்கான விளக்கமன்று.**

**11. சரியான தொடரை கண்டறிக.**

1. வெவ்வேறு சமயத்தைச் சார்ந்தவர்களும் திருக்குறளைப் போற்றினாரில்லை.
2. திருவள்ளுவரின் கருத்துகளை அனைத்து மதத்தினரும் ஏற்றுக்கொண்டனர்.
3. அறநெறியில் அழுத்தமான நம்பிக்கையற்றவர்.
4. உயர்ந்த குறிக்கோள் கொண்டு மனிதன் வாழவேண்டுமென்றார்.

**சரியான விடையளி :**

**A)** 1 மற்றும் 2 மட்டும் சரி **B)** 2 மற்றும் 3 மட்டும் சரி
**C)** 2 மற்றும் 4 மட்டும் சரி **D)** 3 மற்றும் 4 மட்டும் சரி

**விளக்கம் :** **விடை: (C)**

**திருக்குறள் மதச்சார்பற்ற ஒரு நூல்**

திருக்குறளை நாம் படிக்க ஆரம்பித்த உடனேயே அது ஒரு மதச்சார்பற்ற நூல் என்ற உண்மையை அறியலாம். திருவள்ளுவர் வாழ்ந்த காலத்தில் பௌத்த மதம், சீக்கிய மதம், ஜைன மதம், மற்றும் இந்து மதம் போன்ற பல மதங்கள் இருந்தன. அதைப்போலவே இறை மறுப்பாளர்களும் இருந்துள்ளனர். ஆனால் மதச்சார்பற்ற தன்மை எனும் கருத்தாக்கத்தை யாரும் அறிந்திருக்கவில்லை.

வள்ளுவரே மத நம்பிக்கை உடையவர்தான். கடவுளைப் புகழ்ந்தே பத்து குறள்களை கொண்ட ஓர் அதிகாரத்தை படைத்துள்ளார். அவரும் ஒரு மதத்தில் இருந்திருக்கலாம். ஆனால் எந்த ஒரு மதத்துக்கும் ஆதாரமாக இந்நூல் இல்லை. குறிப்பாகச் சொல்வதென்றால் எந்த மதத்தைப் பற்றியும் குறிப்பிடக்கூட இல்லை.

அனைத்து மதங்களையும் மதித்து நடப்பதே மதச் சார்பின்மை ஆகும். மதச்சார்ந்த நூல்கள், ஒரு மதத்தின் கடவுளின் பெயரால் மனிதர்களுக்கு நல்லொழுக்கத்தைப் போதிக்கும். ஆனால் திருக்குறள் கடவுளின் பெயரைக் கூறாமல் மனிதனுக்கு நல்லொழுக்கத்தையும் வாழ்வியல் நெறிமுறைகளையும் போதிக்கிறது. இது ஒரு நடுநிலையான நூல். திருக்குறளின் முதல் குறளான,

*அகர முதல எழுத்தெல்லாம் ஆதி*
*பகவன் முதற்றே உலகு*

**பொருள் :** எழுத்துகளுக்கெல்லாம் 'அ' கரம் முதலாக இருப்பது போல், உலகிலுள்ள அனைத்தும் கடவுளை முதன்மையாகக் கொண்டுள்ளன. ஆதி பகவன் என்பதை தாய் தந்தை என ஒரு சாராரும், இந்த உலகிற்கு ஒளியை வழங்கி வாழ வைக்கும் சூரியன் என ஒரு சாராரும் குறிப்பிடுகின்றனர்.

திருவள்ளுவர், குறிப்பிட்ட பெயர்கள் அனைத்தும் ஆறு, மலை, குன்று, வேந்தன், கடவுள் ஆகிய பொதுபெயர்களே ஆகும். பொதுமையைக் கடைபிடித்து எழுதப்பட்ட இந்நூலில் 'தமிழ்' என்ற சொல் கூட இல்லை. ஒரு நூலானது காலங்களைக் கடந்து நிலைத்து நிற்க வேண்டுமாயின் அதில் வலுவான ஒரு கதாபாத்திரம் இருக்க வேண்டும். அப்படி எதுவும் திருக்குறளில் இல்லை.

மனிதன் முதலில் செய்ய வேண்டியது **அறம்**. அந்த அறத்தின் வழியே சேர்த்த **பொருளைக்** கொண்டு **இல்வாழ்க்கை** நடத்த வேண்டும். இதனையே வள்ளுவர் அறத்துப்பால், பொருட்பால், இன்பத்துப் பால் எனத் தனித்தனியே வகைப்படுத்தியுள்ளார். எந்த மதத்தையும் சாராமல் அறம், பொருள், இன்பம் ஆகிய தத்துவங்களைக் கூறுவதே திருக்குறளின் தனிச்சிறப்பு ஆகும்.

காலந்தோறும் புதிய கருத்தாக்கங்களைத் தந்து இனம், மதம், நாடு, மொழி என்ற எல்லைகளைக் கடந்து மனித வாழ்க்கையை வளப்படுத்தும் திருக்குறள் மனிதன் மனிதனாக வாழ்வதற்குத் தேவையான கருத்துகளைக் கூறியுள்ள மதசார்பற்ற இலக்கியம் ஆகும். திருக்குறள் குறித்து திரு.வி.க. அவர்களின் கூற்று, "ஒரு வகுப்பாருக்கோ, ஒரு நிறத்தாருக்கோ, ஒரு மொழியாருக்கோ, ஒரு நாட்டாருக்கோ உரியதன்று திருக்குறள். அஃது உலகுக்குப் பொது."

திருக்குறளின் முதல் அதிகாரமான கடவுள் வாழ்த்தில்கூட 'கடவுள்' என்ற சொல் இடம் பெறவில்லை. ஆதிபகவன், வாலறிவன், மலர்மிசை ஏகினான், வேண்டுதல் வேண்டாமை இலான், ஐந்தவித்தான், தனக்குவமை இல்லாதான், அறவாழி அந்தணன், எண்குணத்தான் என்ற சொற்களிலேயே கடவுளைக் குறிப்பிட்டுள்ளார்.

தமிழரின் இலக்கியப் பெட்டகமாக விளங்கும் திருக்குறள் மதச்சார்பற்ற இலக்கியம் என்பதை அந்நூலிலுள்ள குறட்பாக்களே உறுதி செய்கின்றன.

**12. வரிசைப்படுத்துக.**

**1.** வாழ்க்கை துணை நலம் **2.** அன்புடைமை
**3.** இல்வாழ்க்கை **4.** புதல்வரைப் பெறுதல்

**சரியான விடையளி :**

**A)** 3, 1, 4, 2 **B)** 2, 3, 1, 4
**C)** 1, 2, 4, 3 **D)** 3, 1, 2, 4

**விளக்கம் :** **விடை: (A)**

| அதிகாரத்தின் பெயர் | அதிகார வரிசை முறை |
|---|---|
| இல்வாழ்க்கை | 5 ஆவது அதிகாரம் |
| வாழ்க்கைத் துணைநலம் | 6 ஆவது அதிகாரம் |
| மக்கட்பேறு (புதல்வரைப் பெறுதல்) | 7 ஆவது அதிகாரம் |
| அன்புடைமை | 8 ஆவது அதிகாரம் |

**13. 'பகைவர் புல் ஆர்க' எனும் தொடர் இடம்பெற்றுள்ள நூல்**

**A)** நற்றிணை **B)** கலித்தொகை
**C)** ஐங்குறுநூறு **D)** புறநானூறு

**விளக்கம் :** **விடை: (C)**

**ஐங்குறுநூறு**

**திணை: மருதம் பிரிவு – வேட்கைப்பத்து பாடல் எண் – 4**

**வாழி ஆதன்; வாழி அவினி !**
**பகைவர் புல் ஆர்க, பார்ப்பார் ஓதுக!**
**என வேட்டோளே யாயே யாம்**
**பூத்த கரும்பில் காய்த்த நெல்லில்**
**கழனி ஊரன் மார்பு**
**பழனம் ஆகற்க என வேட்டேமே! – ஓரம்போகியார்.**

**பொருள் :** சேரமன்னன் ஆதனவினி வாழ்க! நாட்டின் பகை வேந்தர்கள் காடுகளிலே போய் ஒளிந்து கொண்டு புல்லரிசி உணவை உண்பாராக! அந்தணர்கள் மறைகளை ஓதுவார்களாக! என்று விரும்பியவள் எம் தலைவி. இதனால் அவள் உனது கொடுமையை மறைத்து நிற்பவளானாள் என்க. ஆனால் தோழியராகிய நாங்களோ வறிதே பூத்துள்ள கரும்பினையும் காய்த்துப் பயன் தரும் நெல்லினையும் ஒருங்கேயுடைய சிறந்த ஊர்த் தலைவனின் மார்பு, ஊர்ப் பொதுநிலமாகிய பழனம் போன்று பலர்க்கும் பொதுவாகாமல், கழனி போன்று,எம் தலைவிக்கே உரித்தாகுக என்று தோழி உரைக்கிறாள்.

பகைவர் புல் ஆர்க என்பது பகை மன்னர்கள் தோற்றோடிக் காடுகளில் மறைந்து வாழ்ந்து அங்கே கிடைக்கும் புல்லிய புல்லரிசியை உண்டு உயிர்த்திருப்பாராக என்ற பொருளுடையதாகும்.

8. **ஆண்டலையடுப்பு – ஆண்தலைப் பறவை போன்ற பொறி, பகைவரது மண்டையைக் கொத்திச் சிதைக்கும் கருவி**
9. கவை – இருபிரிவாக அமைந்துள்ள கவைக்கோல். மதிலேறும் பகைவரை மறித்துத் தள்ளிவிடும்
10. கழு – கூரிய நுனியுடைய கழுக்கோல்
11. புதை – அம்புகளின் தொகுப்பு அடங்கிய இயந்திரம்
12. **ஐயவித்துலாம் – பகைவர் தலையை நெருக்கித் திருகும் மர இயந்திரம்**
13. **எறிசிரல் (சென்னெறி சிரல்) – சிக்கிலிப் பறவை வடிவத்தில் அமைந்த, பகைவரைத் தாக்கும் பொறி**
14. கைபெயரூசி – பகைவர் கைகளைப் பெயர்க்கும் ஊசிப் பொறி

29. **பொருத்துக.**

| | | | |
|---|---|---|---|
| **a)** | சென்னை | 1. | மல்லபாடி |
| **b)** | தஞ்சாவூர் | 2. | கம்பர்மேடு |
| **c)** | தர்மபுரி | 3. | கொடுமணல் |
| **d)** | ஈரோடு | 4. | பல்லாவரம் |

**குறியீடுகள் :**

| | a) | b) | c) | d) |
|---|---|---|---|---|
| **A)** | 4 | 2 | 1 | 3 |
| **B)** | 2 | 1 | 3 | 4 |
| **C)** | 3 | 1 | 2 | 4 |
| **D)** | 4 | 1 | 2 | 3 |

**விளக்கம் :** **விடை: (A)**

**சென்னை – பல்லாவரம்**

1. 1863 இல் ராபர்ட் புரூஸ்புட் என்பவர் பல்லாவரத்தில் கற்காலக் கைக் கோடாரிகளைக் கண்டறிந்தார். .
2. 1888 இல் அலெக்ஸாண்டர் ரியா என்பவர் கல்சவப்பெட்டியைக் கண்டறிந்தார்.
3. 2017 இல் இந்தியத் தொல்லியல் துறையால் பழைமை வாய்ந்த பன்னிரண்டு கால்கள் உடைய சவப் பேழைகள் மற்றும் முதுமக்கள் தாழிகள் கண்டறியப்பட்டன.
4. முதுமக்கள் தாழிகள் என்பவை இறந்தவர் உடலை அப்படியே புதைக்கப்பட்டதற்கான ஆதாரங்கள் ஆகும். சவப் பேழைகள் என்பவர் இறந்தவரை எரித்த பின்பு சாம்பலை வைத்து புதைக்கப்பட்டதற்கான ஆதாரங்கள் ஆகும்.
5. 2018 இல் இந்தியத் தொல்லியல் ஆய்வுத் துறையால், பெருங்கற்காலப் பொருள்கள் கண்டறியப்பட்டன.
6. 1946 இல் தொல்லியல் துறை இந்தப் பகுதியை பாதுகாக்கப்பட்ட பகுதியாக அறிவித்தது. இந்தியத் தொல்லியல் துறையால் தற்போது வரை ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**கம்பர்மேடு – மயிலாடுதுறை**

1. 1984 ஆம் ஆண்டு, இந்தியத் தொல்பொருள் துறையினர் கம்பர்மேடு பகுதியை அகழ்வாராய்ச்சிக்கு உட்படுத்தியது.
2. புதிய கற்கால எச்சங்கள் மற்றும் மெகாலிதிக் ஆக்கிரமிப்பிற்கான சான்றுகள் கண்டறியப்பட்டன.
3. கருப்பு மற்றும் சிவப்பு நிற மட்பாண்டங்கள், டெரகோட்டா பொருள்கள், விலையுயர்ந்த கற்களால் ஆன மணிகள், ஷெல் வளையல்கள், இரும்புக் கருவிகள் மற்றும் சோழர் கால நாணயங்கள் கண்டறியப்பட்டுள்ளன.
4. **குறிப்பு:** கம்பர் பிறந்ததாகக் கூறப்படும் தேரெழுந்தூரில், கம்பர்மேடு அமைந்துள்ளது. வினாவில் கம்பர் மேடு **தஞ்சாவூரில் உள்ளதாகத் தவறாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.**

**மல்லபாடி – கிருஷ்ணகிரி**

1. கிருஷ்ணகிரி மாவட்டம் பர்கூருக்கு அருகே மல்லபாடி கிராமம் அமைந்துள்ளது.
2. 1978 ஆம் ஆண்டு இங்கு கண்டறியப்பட்ட பாறை ஓவியங்கள் 2000 ஆண்டுகளுக்கு முற்பட்டவை ஆகும்.
3. குதிரையின் மீது அமர்ந்துள்ள இருவர் நீண்ட மூங்கில்களால் ஆநிரைகளை ஓட்டுதல் போன்ற ஓவியம் கண்டறியப்பட்டுள்ளது.
4. இங்கு வரையப்பட்டுள்ள ஓவியங்கள் வெண்சாந்து ஓவியங்களாகும்.
5. கையில் வாளுடன் காணப்படும் வீரன் உருவம், காளை உருவம் போன்றவையும் கண்டறியப்பட்டுள்ளன.
6. இந்த ஓவியங்கள் பெருங்கற்காலத்தில் சுமார் கி.மு.500 – கி.பி.300 வரையிலான காலகட்டத்தைச் சேர்ந்தவை எனத் தொல்லியல் துறையினர் கணித்துள்ளனர்.
7. பெருங்கற்காலத்தைச் சேர்ந்த தொல்குடிகளின் பொருள்கள் அதிக அளவிலும், புதிய கற்காலப் பானை ஓடுகள் குறைந்த அளவிலும் கிடைத்துள்ளன. அவற்றுள் கருப்பு – சிவப்பு பானை ஓடுகள், கருப்புப் பானை, சிவப்புப் பானை மற்றும் சாம்பல் வண்ணப் பானைகள் கிடைத்துள்ளன.
8. **குறிப்பு: வினாவில் தர்மபுரி மாவட்டம் எனத் தவறாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.**

**கொடுமணல் – ஈரோடு**

1. ஈரோடு மாவட்டம், நொய்யல் ஆற்றின் வடகரையில் கொடுமணல் அமைந்துள்ளது.
2. **கொடுமணம் பட்ட வினைமாண் அருங்கலம்**
   **பந்தர் பயந்த பலர் புகழ் முத்தம்**

என்ற பதிற்றுப்பத்து பாடலடிகள் மூலம் சங்ககாலத்தில் பல்வேறு வெளிநாட்டினர் வந்து வணிகம் செய்த சிறப்புடைய பகுதி என அறிய முடிகிறது.

3. சங்ககாலத்தில் இது கொடுமணம் என்று அழைக்கப்பட்டது.
4. கி.மு 5 ஆம் நூற்றாண்டு முதல் கி.மு.1 ஆம் நூற்றாண்டு வரை இங்கு நடைபெற்ற வணிகத் தடயங்கள் கிடைத்துள்ளன
5. தமிழ்நாடு தொல்லியல் துறையால் மேற்கொள்ளப்பட்ட அகழாய்வில் 200 க்கும் மேற்பட்ட வட்ட வடிவிலான நில அடையாளக் கற்குவைகள் கண்டறியப்பட்டுள்ளன.
6. 1950 இல் முதன்முதலாக சீனிவாச தேசிகரால் முறையான அகழ்வாராய்ச்சி தொடங்கப்பட்டது. அப்போது சங்ககால மணிகள், சங்குகள் கிடைத்தன.
7. 1961 இல் தமிழ்நாடு தொல்லியல் துறையினர் மேற்கொண்ட ஆய்வில், இது வணிகத் தளமாக இயங்கியது கண்டறியப்பட்டது.
8. இரும்பை உருக்கி ஆயுதங்கள் செய்த தொழிற்சாலை, மண்பாண்டங்கள் செய்யப்பட்ட இடங்கள், செப்பு பாத்திரங்கள் செய்யப்பட்ட ஆலைகள் போன்ற தனித்தனி ஆலைகள் இருந்ததற்கான ஆதாரங்கள் கிடைத்துள்ளன.
9. இங்குக் கிடைத்த மண்பாண்டங்களில், ஆதன், குவிரன், ஏகன் போன்ற சேர மரபினர்களில் பெயர்கள் பொறிக்கப்பட்டுள்ளன.
10. ரோமானிய நாணயங்கள், சங்ககால வணிக முத்திரைகள் கிடைத்துள்ளன.
11. இங்கு கிடைத்துள்ள ஆதாரங்கள் மூலம் சங்ககாலம், வரலாற்றுக் காலத்தின் தொடக்க காலம், இரும்புக் காலம் ஆகிய காலகட்டங்களில் மக்கள் வாழ்ந்துள்ளதை அறிய முடிகிறது.

30. **பின்வருவனவற்றுள் பொருத்தமானவற்றைத் தேர்ந்தெடுக்க**

1. பழங்காலத்தில் தமிழர்கள் திருமணத்தில் மணல் பரப்பி விழா எடுத்தனர் – அகநானூறு
2. மணமகளுக்கு மணமகன் தாலி அணிவித்தல் வழக்கமாகும் – தொல்காப்பியம்
3. மணமகள் வீட்டினர் மணமகன் வீட்டாருக்கு வரதட்சணை கொடுக்கும் வழக்கமிருந்து – நன்னூல்
4. தீ நெறிப்பட்ட வேள்வித் திருமணம் – சிலப்பதிகாரம்

**சரியான விடையளி :**

**A)** 1 மற்றும் 4 சரி **B)** 1 மற்றும் 3 சரி
**C)** 2 மற்றும் 3 சரி **D)** 3 மற்றும் 4 சரி

SURA'S

**விளக்கம் :** **விடை: (A)**

**அகநானூறு 86 ஆவது பாடலில்**

**தன் பெரும் பந்தர்த் தரு மணல் ஞெமிரி**
**மனை விளக்குறுத்து**

என்ற அடிகள் மூலம் சங்ககாலத்தில் நடைபெற்ற திருமணத்தில் பந்தர்கால் நடப்பட்டு பந்தல் போடப்பட்டதையும், அந்தப் பந்தலில் புதுமணல் பரப்பப்பட்டதையும் அறியமுடிகிறது.

**சிலப்பதிகாரம் – புகார்க்காண்டம்**

**....... .. வானத்துச்**
**சாலி ஒருமீன் தகையாளைக், கோவலன்**
**மாமுது பார்ப்பான் மறைவழி காட்டிடத்**
**தீவலம் செய்வது காண்பார்கண் நோன்பு என்னை**

என்ற அடிகள் மூலம் கோவலன் தீயை வலம் வந்து கண்ணகியைத் திருமணம் செய்தான் என்பதை அறியமுடிகிறது.

தொல்காப்பியம், சங்க நூல்கள், சிலப்பதிகாரம் உள்ளிட்ட காப்பியங்கள் எதிலும் தமிழர் திருமண முறையில் மணமகன் மணமகளுக்குத் தாலி அணிவித்தது பற்றிக் குறிப்பிடப்படவில்லை.

சங்ககாலத் திருமண முறையில் **மணமகன் வீட்டார்தான் மணமகள் வீட்டாருக்கு வரதட்சணை வழங்கினார்கள்.**

**குறுந்தொகை – 146 ஆவது பாடல்**

**அம்ம வாழி தோழி நம்மூர்ப்**
**பிரிந்தோர் புணர்ப்போர் இருந்தனர் கொல்லோ**
**தண்டுடைக் கையர் வெண்டலைச் சிதவர்**
**நன்றுநன் றென்னும் மாக்களோடு**
**இன்று பெரிது என்னும் ஆங்கண தவையே**

**– வெள்ளிவீதியார்**

**பொருள் :** ஊர் மக்கள் அவையின் முன்பு பலமுறை தலைவனின் பரிசப் பொருள்கள் திருப்பி அனுப்பப்பட்டன. இன்றோ தலைப்பாகை அணிந்து கையில் தண்டுடன் இருக்கும் முதியவர்கள் மூலமாகத் தலைவன் போதுமென்று சொல்லத்தக்க அளவு பரிசப் பொருள்களை கொண்டு வந்து அவை முன் வைத்துள்ளான், அவையில் இருந்த தலைவியின் உறவினரும் கண்டு நன்று நன்று என்று மகிழ்ந்தனர் இக்காட்சியைக் கண்ட தோழி, இனிமேல் அவர்கள் திருமணத்திற்குத் தடையேதும் இல்லை என்று தலைவியிடம் கூறுகிறாள்.

**குறிப்பு:** சங்ககாலத்தில் பரிசம் என்பது மணமகன் வீட்டார், மணமகள் வீட்டிற்குக் கொடுக்கும் அன்பளிப்பு ஆகும். இது பணம், அணிகலன்கள், நிலம் போன்ற வடிவில் வழங்கப்பட்டன. நற்றிணையில் (பாடல் 300) இது **சிறுவிலை பரியம்** எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. எவ்வளவு தொகை என்பது ஊர்மக்கள் அவை நிர்ணயித்தது.

# TNPSC குரூப்-II, IIA 2025 தேர்வு

1. **செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம், 2022–ஆம் வருடம் முதல் அதன் சொந்த புதிய பிரத்யேக வளாகத்தில் செயல்பட்டு வரும் இடம்**

   **A)** சேப்பாக்கம் **B)** மைசூர்
   **C)** கிளாம்பாக்கம் **D)** பெரும்பாக்கம்

**விளக்கம் :** **விடை : (D)**

1. செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் (Central Institute of Classical Tamil) என்பது தமிழ்மொழியின் வளர்ச்சிக்காக நடுவண் அரசின் கல்வி அமைச்சகம், மொழிப் பிரிவின் கீழ் செயல்பட்டு வரும் தன்னாட்சி நிறுவனம் ஆகும்.
2. 2004 ஆம் ஆண்டு அக்டோபர் 12 ஆம் நாள் தமிழ்மொழியைச் செம்மொழியாக நடுவண் அரசு அறிவித்தது.
3. 2005 ஆம் ஆண்டு ஜூலை மாதம், தமிழ்மொழி மேம்பாட்டுக்கான மையத்திட்டம் (Central Plan Scheme for Classical Tamil) நடுவண் அரசால் அமைக்கப்பட்டு மைசூரில் உள்ள இந்திய மொழிகளின் நடுவண் நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டது.
4. 2006 மார்ச் முதல் 2008 மே 18 வரை மைசூரிலுள்ள இந்திய மொழிகளின் நடுவண் நிறுவனத்தில், செம்மொழித் தமிழ் உயராய்வு மையம் என்னும் பெயரில் செயல்பட்டு வந்தது.
5. 2008 ஆம் ஆண்டு மே 19 முதல் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் என்ற புதிய பெயரில் சென்னை காமராசர் சாலையில் உள்ள பாலாறு இல்லத்தில் செயல்படத் துவங்குவது.
6. 2011 முதல் 2022 மார்ச் வரை தரமணியில் வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டு வந்தது.
7. செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்திற்காகச் சென்னை பெரும்பாக்கத்தில் தமிழக அரசு 16.58 ஏக்கர் நிலம் வழங்கியது.
8. பெரும்பாக்கத்தில் புதிய கட்டடம் கட்டுவதற்கு 2017 ஆம் ஆண்டு நடுவண் அரசு நிதி ஒதுக்கீடு செய்தது.
9. புதிய கட்டுமானப் பணிகள் முடிவடைந்ததும் 2022 ஆம் ஆண்டு ஜனவரி 12 ஆம் நாள், தமிழக முதல்வர் தலைமையில், பாரதப் பிரதமர் அவர்களால் புதிய கட்டடம் திறந்து வைக்கப்பட்டது.
10. 2022 ஆம் ஆண்டு முதல் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் தனது புதிய வளாகத்தில் செயல்பட்டு வருகிறது.

2. **பொருத்துக.**

| | | | |
|---|---|---|---|
| **a.** | ஆதரவு தேடுதலின் சின்னம் | **1.** | குறுந்தொகை |
| **b.** | அன்பின் சின்னம் | **2.** | அசோக மரத்தின இலை |
| **c.** | காகம் ஒரு நல்ல முன்னறிவிப்பான் | **3.** | நற்றிணை |
| **d.** | பண்டில் விளையாட்டு குறிப்பிடப்பட்டுள்ளது. | **4.** | வெள்ளை அல்லி மலர் |

**குறியீடுகள் :**

| | a) | b) | c) | d) |
|---|---|---|---|---|
| **A)** | 3 | 4 | 1 | 2 |
| **B)** | 2 | 4 | 1 | 3 |
| **C)** | 4 | 2 | 1 | 3 |
| **D)** | 1 | 4 | 3 | 2 |

**விளக்கம் :** **விடை : (B)**

சங்க இலக்கியங்களில் அசோக மரம் குறித்து கூறப்பட்டுள்ளது. ஆனால் அசோக மரத்தின் தமிழ்ப்பெயர் 'பிண்டி என்பதாகும். பிற்கால இலக்கியங்களில் 'செயலை என்று குறிப்பிடப்பட்டுள்ளது. சிலப்பதிகாரத்தில் 'அசோகு என்ற பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது. அசோக மரத்தின் இலை நம்பிக்கை மற்றும் ஆறுதலின் அடையாளமாகக் கருதப்படுகிறது. இராமயணத்தில், இலங்கை அசோகவனத்தில் இருந்த சீதா தேவி அசோக மரத்தடியில் ஆறுதல் தேடியதாகக் கூறப்படுகிறது.

சங்க இலக்கியங்களில் வெள்ளாம்பல் என்று குறிப்பிடப்படும் மலர் வெள்ளை அல்லி மலராகும். காதலின் அடையாளமாக இம்மலர் குறிக்கப்பட்டுள்ளது.

**குறுந்தொகை – பாடல் 210**

**திண்தேர் நள்ளி கானத்து அண்டர்**
**பல் ஆ பயந்த நெய்யின் தொண்டி**
**முழுதுடன் விளைந்த வெண்ணெல் வெஞ்சோறு**
**எழுகலத்து ஏந்தினும் சிறிது – என் தோழி**
**பெருதோள் நெகிழ்ந்த நெல்லற்கு**
**விருந்து வரக் கரைந்த காக்கையது பலியே**

**– காக்கைப் பாடினியார் நச்செள்ளையார்**

**பொருளுரை :** தலைவனைப் பிரிந்து தலைவி துன்பமுற்று இருந்தபோது, காகம் ஒன்று கரைந்ததைக் கண்ட தோழி, தலைவியிடம் தலைவன் வருவது உறுதியாகி விட்டது என்று நற்சொல் கூறுகிறாள்.

தலைவியின் துன்பத்தை நீக்கிய அந்த காகத்துக்கு, நள்ளி வள்ளலின் காட்டில் உள்ள பசுக்கள் மூலம் கிடைத்த நெய்யும், தொண்டியில் விளைந்த வெண்ணெல் அரிசியில் ஆக்கிய வெம்மையுடைய சோற்றை ஏழு பாத்திரங்களில் ஏந்திக் கொடுத்தாலும் தகும் என்று தோழி கூறுகிறாள்.

காகம் கரைந்தால் உற்றார் வீட்டிற்கு வருவர் என்பது சங்ககாலம் முதல் உள்ள நம்பிக்கையாகும்.

**நற்றிணை 127 ஆம் பாடலில் சீத்தலைச் சாத்தனார்** வண்டல் ஆயமொடு பண்டுதான் ஆடிய என்று குறிப்பிட்டுள்ளார். இதன் பொருள் தன் பழைய தோழியர்களுடன் தலைவி வண்டல் விளையாட்டு விளையாடினாள் என்பதாகும். வினாவில் பண்டில் என்று குறிப்பிட்டுள்ளது தவறாகும். நற்றிணையில் குறிப்பிடப்பட்டுள்ள விளையாட்டுகள்: **ஓரை, வட்டாடுதல், ஊசல், சிற்றில், கழங்காடுதல், வண்டலிழைத்தல், புனல் நீராடுதல்.**

**3. திருக்குறளில் யாருடைய கடமைகள் மறைமுகமாக கற்பிக்கப்படுகின்றன ?**

**A)** ஆடவர் **B)** மகளிர்
**C)** குடிமக்கள் **D)** அரசன்

**விளக்கம் :** **விடை : (*)**

திருக்குறளில் தந்தையின் கடமை, மகனின் கடமை, அரசரின் கடமை , அமைச்சரின் கடமை, துறவிகள் கடமை, தூதனின் கடமை, உழவரின் கடமை 1 மாணவனின் கடமை, வணிகனின் கடமை, நண்பனின் கடமை,குடிமக்கள் கடமை என்று பல குறட்பாக்கள் மூலம் வள்ளுவர் எடுத்துரைத்துள்ளார். ஆனால் பெண்ணிற்குரிய கடமைகள் குறித்து குறைவாகக் கூறியுள்ளார் என்று கூறலாமே தவிர மறைமுகமாகக் கூறியுள்ளார் என்று கூற இயலாது. நேர்முகமாகவே கூறியுள்ளார். கற்பு, ஒழுக்கம், இல்லறத்தைப் பேணுதல் போன்ற கடமைகள் நேரிடையாகவே கூறப்பட்டுள்ளன.

**4. புத்தகங்களையும் ஆசிரியரின் பெயரையும் சரியாகப் பொருத்தவும் :**

| | |
|---|---|
| **a.** திருக்குறள் உரைவளம் | **1.** வ.செ. குழந்தை சாமி |
| **b.** திருக்குறள் நுண்பொருள் மாலை | **2.** கி.வா. ஜெகந்நாதன் |
| **c.** திருக்குறள் ஆராய்ச்சிப் பதிப்பு | **3.** காரிரத்தினக் கவிராயர் |
| **d.** வாழும் வள்ளுவம் | **4.** தண்டபாணி தேசிகர் |

**குறியீடுகள் :**

| | a) | b) | c) | d) |
|---|---|---|---|---|
| **A)** | 4 | 3 | 2 | 1 |
| **B)** | 1 | 2 | 3 | 4 |
| **C)** | 4 | 2 | 1 | 3 |
| **D)** | 1 | 3 | 4 | 2 |

**விளக்கம் :** **விடை : (A)**

1. **திருக்குறள் உரைவளம்:** இந்நூலை எழுதியவர் ச.தண்டபாணி தேசிகர் ஆவார். மேலும் திருக்குறள் அமைப்பும் அழகும் என்ற நூலையும் எழுதியுள்ளார்.
2. **திருக்குறள் நுண்பொருள் மாலை :** இந்நூலை இயற்றியவர் காரிரத்தினக் கவிராயர் ஆவார். திருக்குறளுக்கு பரிமேலழகர் எழுதிய உரைநூலுக்கு இவர் எழுதிய விளக்கவுரை நூலே திருக்குறள் நுண்பொருள் மாலை என்ற நூலாகும். பொதுவாகக் கூறினால் உரைநூலுக்கு உரை நூல் ஆகும்.
3. **திருக்குறள் ஆராய்ச்சிப் பதிப்பு :** கி.வா.ஜகந்நாதன் அவர்களால் 1950 முதல் 1963 மேற்கொண்ட திருக்குறள் ஆராய்ச்சியின் வடிவம் இந்நூலாகும். ஒவ்வொரு குறளுக்கும் பரிமேலழகர் உரையுடன் பிற உரையாசிரியர்களின் உரை வேறுபாடு, அடிக்குறிப்புகள், திருவள்ளுவமாலை உரை, திருக்குறள் சொல் அகராதி, பொருள் அகராதி, பொது அகராதி, கி.வா.ஜ. அவர்களின் விரிவாக முன்னுரை, தமிழறிஞர்கள் பலரின் கருத்துகள் முதலியவற்றை அடக்கியுள்ள இந்நூலை 1963 இல் அப்போதைய ஜனாதிபதி திரு.இராதாகிருஷ்ணன் அவர்களால் வெளியிடப்பட்டது.
4. **வாழும் வள்ளுவம்:** இது திருக்குறள் பற்றிய ஆய்வு நூலாகும். இந்நூலின் ஆசிரியர் அறிவியலறிஞர் (நீரியல் துறை) டாக்டர் வா.செ.குழந்தைசாமி ஆவார். இவர் சிறந்த கவிஞரும் எழுத்தாளரும் ஆவார். 1988 ஆம் ஆண்டிற்கான சாகித்திய அகாதெமி விருது இந்நூலுக்கு வழங்கப்பட்டது.

**5. உடையவர்கள் என்போர் எதை உடையவர் என்று வள்ளுவர் கூறுகிறார் ?**

**A)** ஊக்கம் உடையோர் **B)** வீரம் உடையோர்
**C)** செல்வம் உடையோர் **D)** கல்வி உடையோர்

**விளக்கம் :** **விடை : (A)**

**உடையர் எனப்படுவது ஊக்கம் அஃதிலார்**
**உடையது உடையரோ மற்று.**

**பிரிவு –** பொருட்பால் **இயல் –** அரசியல்
**அதிகாரம் –** ஊக்கம் உடைமை **குறள் எண் : 591**

**பொருளுரை :** ஊக்கம் உடையவரே உடையவர் எனப்படுவர். ஊக்கமில்லாதவர் வேறு எதை உடையவராக இருந்தாலும் அவர் உடையவர் ஆக மாட்டார். ஊக்கம் என்பது மன உறுதி, விடாமுயற்சி ஆகியவற்றைக் குறிக்கிறது.

**6. காலவரிசைப்படி பல்லவ மன்னர்களை வரிசைப்படுத்து :**

| | | |
|---|---|---|
| **1.** சிம்மவிஷ்ணு | - | 555–லிருந்து 590 CE |
| **2.** மகேந்திரவர்மன் I | - | 590–லிருந்து 630 CE |
| **3.** நரசிம்மவர்மன் I | - | 630–லிருந்து 668 CE |
| **4.** ராஜசிம்மா | - | 695–லிருந்து 728 CE |

**சரியான விடையளி :**

**A)** (1), (2), (3), (4)
**B)** (3), (1), (2), (4)
**C)** (4), (2), (3), (1)
**D)** (2), (4), (1), (3)

**விளக்கம் :** **விடை : (A)**

**முற்காலப் பல்லவர்கள் (கி.பி. 250 – 350)**

முற்கால பல்லவர்கள் பிராகிருத மொழியில் பட்டையங்கள் வெளியிட்டனர்.

முற்கால பல்லவ மன்னர்கள் : சிவாஸ்கந்தவர்மன், விஜயாஸ்கந்தவர்மன்

**இடைக்காலப் பல்லவர்கள் (கி.பி. 350 – 550)**

இடைக்கால பல்லவர்கள் வடமொழியில் பட்டையங்கள் வெளியிட்டனர்.

இடைக்கால பல்லவ மன்னன் : விஷ்ணுகோபன் (சமுத்திர குப்தரின் தட்சிணபாத படையெடுப்பின் மூலம் விஷ்ணுகோபன் தோல்வியடைந்தார்)

**பிற்காலப் பல்லவர்கள் (கி.பி. 570 – 903)**

பிற்கால பல்லவர்கள் தமிழ் மற்றும் வடமொழியில் பட்டையங்கள் வெளியிட்டனர்.

பிற்கால பல்லவர்கள் : சிம்மவிஷ்ணு (கி.பி 555 - 590), முதலாம் மகேந்திர வர்மன் (கி.பி.590 – 630), முதலாம் நரசிம்ம வர்மன் (கி.பி 630 - 668), இரண்டாம் நரசிம்மவர்மன் ராஜசிம்மன் என்றும் அழைக்கப்பட்டார் (கி.பி. 695-728), மூன்றாம் நந்தி வர்மன் (கி.பி 825 - 850), அபிராஜித பல்லவன் (கி.பி 862 - 901)

தென்கிழக்குக் கடற்கரைப் பகுதியில் முக்கிய வணிக மையமாகத் திகழ்ந்த காஞ்சிபுரத்தை ஆட்சி செய்தனர்.

ஏழு மற்றும் எட்டாம் நூற்றாண்டுகளில் அவர்களது ஆட்சி தமிழகம் முழுவதும் விரிவடைந்தது. ஆனாலும் பல்லவ அரசின் மையப்பகுதியாக தொண்டை மண்டலமே இருந்தது.

**சான்றுகள்: கல்வெட்டுகள் :** மண்டகப்பட்டு குகைக் கல்வெட்டு, இரண்டாம் புலிகேசியின் ஐஹோல் கல்வெட்டு. **செப்பேடுகள் :** காசக்குடிச் செப்பேடுகள். **இலக்கியங்கள் :** மத்தவிலாசப் பிரகசனம், அவந்தி சுந்தரி கதை, நந்திக்கலம்பகம், பெரியபுராணம். **அயல்நாட்டவர் குறிப்புகள் :** யுவான்–சுவாங்கின் குறிப்புகள்.

**7. பொருத்துக.**

| | |
|---|---|
| **a.** தலைச் சங்கப் புலவனார் தம்முள் | **1.** கம்பர் |
| **b.** அகன் பொதியில் திருமுனிவன் தமிழ்ச் சங்கம் | **2.** சேக்கிழார் |
| **c.** கூடலினாய்ந்த ஒண்டீந் தமிழ் | **3.** திருஞானசம்பந்தர் |
| **d.** மதுரைத் தொகையாக்கினான் | **4.** மாணிக்க வாசகர் |

**குறியீடுகள் :**

| | a) | b) | c) | d) |
|---|---|---|---|---|
| **A)** | 2 | 3 | 1 | 4 |
| **B)** | 3 | 4 | 2 | 1 |
| **C)** | 1 | 3 | 4 | 2 |
| **D)** | 2 | 1 | 4 | 3 |

**விளக்கம் :** **விடை : (D)**

தலைச்சங்கப் புலவனார் தம்முன் – இத்தொடரை மாணிக்கவாசகர் எழுதியதாக, **ரா.சீனிவாசன் எழுதிய தமிழ் இலக்கிய வரலாறு (பக். எண் 12)** நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது. சேக்கிழாரும், பெரியபுராணத்தில், திருஞானசம்பந்தர் புராணத்தில் இத்தொடரை எழுதியுள்ளார். வினாவில் இத்தொடர் தலைச்சங்கப் புலவர் **தம்முள்** எனத் தவறாகக் கொடுக்கப்பட்டுள்ளது. **தம்முன்** என்பதே சரியான சொல்லாகும்.

தென் தமிழ்நாட்டு அகன் பொதியில் திரு
முனிவன் தமிழ்ச் சங்கம் சேர்கிற்பீரேல்

இத்தொடர் கம்பராமாயணத்தில், கிட்கிந்தா காண்டம், நாட விட்ட படலத்தில் அமைந்துள்ளது.

கூடலின் ஆய்ந்தஒண் தீந்தமிழின் என்ற தொடர் மாணிக்கவாசகர் இயற்றிய திருக்கோவையார் என்ற நூலில் அமைந்துள்ளது.

அற்றன்றி யந்தண் மதுரைத் தொகையாக்கினான் என்ற தொடர் திருஞானசம்பந்தர் தேவாரத்தில் அமைந்துள்ளது.

**8. சங்ககால தமிழ்ச் சமூகத்தில் 'தோன்றுவன் மாதோ போர்க்களத்தானே' என வீரத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து பாடிய பெண்பால் புலவர் யார் ?**

**A)** ஒக்கூர் மாசாத்தியார் **B)** காவல் பெண்டு
**C)** வெள்ளிவீதியார் **D)** ஔவையார்

**விளக்கம் :** **விடை : (B)**

**புறநானூறு – 86 ஆவது பாடல்**

**சிற்றில் நற்றூண் பற்றி நின்மகன்**
**யாண்டுஉள னோஎன வினவுதி ; என்மகன்**
**யாண்டு உளன் ஆயினும் அறியேன்; ஒரும்**
**புலி சேர்ந்து போகிய கல்அளை போல**
**ஈன்ற வயிறோ இதுவே**
**தோன்றுவன் மாதோ போர்களத் தானே! – காவற்பெண்டு**

**பொருளுரை:** இந்தச் சிறிய வீட்டின் வலிமையான தூணைப் பற்றிக் கொண்டு, 'உன் மகன் எங்கே இருக்கிறான் எனக் கேட்கிறாய். என் மகன் எங்கே இருக்கிறான் என்பதை யான் அறியேன். புலி குகையை விட்டுக் கிளம்பிய பின் அது எங்கே சென்றுள்ளது என்பதை யாரும் அறிய முடிவதில்லை! அதுபோல அவனை ஈன்ற வயிறோ இங்கே இருக்கிறது. அவன் எங்கு சென்றுள்ளான் என்பதை யான் அறியேன். ஆனால் அவன் போர்க்களத்தில்தான் இருப்பான். அவனைக் காண விரும்பின் போர்க்களத்திற்குச் சென்று காண்பீராக!

சங்ககாலப் பெண்பாற் புலவரான காவற்பெண்டு சோழ மன்னன் கோப்பெருநற்கிள்ளியின் செவிலித்தாய் ஆவார்.

**9. சோழ அரசி வானமாதேவி சதி மேற்கொண்டார் என்பதை வெளிப்படுத்தும் பட்டயம் .............. .**

**A)** அன்பில் பட்டயம் **B)** திருவாலங்காடு பட்டயம்
**C)** பாகூர் பட்டயம் **D)** வேள்விக்குடி பட்டயம்

**விளக்கம் :** **விடை : (B)**

பிற்கால சோழர்களின் ஆட்சிக் காலத்தில், கணவரை இழந்த பெண்கள் பிரிவாற்றாமையால் உடன்கட்டை ஏறியதைப் பற்றிச் சில கல்வெட்டுகளும், செப்பேடுகளும் கூறுகின்றன. முதலாம் பராந்தகன் ஆட்சிக் காலத்தில் வீரச்சோழ இளங்கோவேள் என்ற கொடும்பாளூர் சிற்றரசரின் மனைவி கங்காதேவியார் தீக்குளித்த செய்தியும், முதலாம் இராஜராஜ சோழனின் தாயார் **வானவன் மாதேவி**, தனது கணவர் சுந்தரச்சோழர் இறந்தவுடன், தானும் உடன்கட்டை ஏறி தீக்குளித்து உயிர்துறந்த செய்தியும் திருவாலங்காட்டு செப்பேட்டில் குறிப்பிடப்பட்டுள்ளன. திருவாலங்காட்டு செப்பேடுகளை வெளியிட்டவர் முதலாம் இராஜேந்திர சோழன் ஆவார். இதிலுள்ள 31 ஏடுகளில் முதல் 10 சமஸ்கிருதத்திலும், ஏனைய 21 ஏடுகள் தமிழிலும் உள்ளன. 1903 ஆம் ஆண்டு திருவாலங்காட்டுச் சிவன் கோயிலைப் புதுப்பித்தபோது இந்தச் செப்புப் பட்டயங்கள் கிடைத்தன.

**10. பொருத்துக.**

| | |
|---|---|
| **a.** பாரதியார் | **1.** பாண்டியன் பரிசு |
| **b.** கவிமணி தேசிக விநாயகம் | **2.** தமிழன் இதயம் |
| **c.** பாரதிதாசன் | **3.** கண்ணன் பாட்டு |
| **d.** இராமலிங்கம் பிள்ளை | **4.** ஆசிய ஜோதி |

**குறியீடுகள் :**

| | a) | b) | c) | d) |
|---|---|---|---|---|
| **A)** | 3 | 2 | 1 | 4 |
| **B)** | 4 | 3 | 1 | 2 |
| **C)** | 3 | 4 | 1 | 2 |
| **D)** | 2 | 3 | 4 | 1 |

**விளக்கம் :** **விடை : (C)**

பாரதியாரின் முப்பெரும் படைப்புகள் **கண்ணன் பாட்டு, குயில் பாட்டு, பாஞ்சாலி சபதம்.** பழந்தமிழ் இலக்கியங்களைப் பாடிய புலவர்கள் இறைவனைத் தலைவனாகவும் தங்களை நாயகியாகவும், அடிமையாகவும், தோழனாகவும் உருவகம் செய்து பாடியிருப்பார்கள். ஆனால் பாரதியார் அந்த மரபை உடைத்துவிட்டு தன்னைத் தலைவனாகவும், இறைவனாகிய கண்ணனை தன் காதலியாகவும், காதலனாகவும், சேவகனாகவும், அமைச்சனாகவும், தோழனாகவும், தாயாகவும், குழந்தையாகவும் உருவகம் செய்து பாடியதுதான் கண்ணன் பாட்டு ஆகும்.

**சர் எட்வின் ஆர்னால்ட்** என்பவர் ஆங்கிலத்தில் எழுதிய The Light of Asia என்ற நூலை கவிமணி தேசிகவிநாயகனார் தமிழில் மொழியாக்கம் செய்துள்ளார். புத்தரின் வரலாற்றைக் கூறும் இந்நூலைத் தழுவல் என்றே கூற முடியாத அளவு கவிமணி அவர்கள் எளிய தமிழ்நடையில் காப்பியமாக இயற்றியுள்ளார்.

**பாரதிதாசனின்** படைப்புகளைக் கவிதைகள், நாடகக் காப்பியம், காப்பியங்கள் என்று வகைப்படுத்தலாம். அவற்றுள் பாண்டியன் பரிசு என்பது செய்யுள் வடிவில் இயற்றப்பட்ட வரலாற்று அடிப்படையிலான குறுங்காவியம் ஆகும்.

நாமக்கல் கவிஞர் வெ.இராமலிங்கனாரின் 'தமிழன் இதயம் என்ற கவிதையில் தமிழர்களின் தனித்தன்மை, மாண்பு, தமிழிலக்கியங்களின் சிறப்புகள் குறித்து பாடியுள்ளார். இக்கவிதையின் புகழ் பெற்ற தொடர், தமிழன் என்றொரு இனமுண்டு, தனியே அவற்கொரு குணமுண்டு என்பதாகும்.

**11. பின்வருவனவற்றுள் எவை சரியாகப் பொருந்தியுள்ளன ?**

| | | |
|---|---|---|
| **1)** குறிஞ்சி | – | கிளி |
| **2)** முல்லை | – | காட்டுக் கோழி |
| **3)** மருதம் | – | வானம்பாடி |
| **4)** நெய்தல் | – | ஆந்தை |
| 5) பாலை | – | புறா |

**சரியான விடையளி :**

**A)** (1), (2), (3), (4), (5)
**B)** (2), (3), (4)
**C)** (3), (4), (5)
**D)** (1), (2), (5)

**விளக்கம் :** **விடை : (D)**

**ஐவகைத் திணைகளுக்குரிய கருப்பொருள்களில் பறவையினம் ஒன்றாகும்.**

| திணை | பறவை |
|---|---|
| குறிஞ்சி | கிளி, மயில் |
| முல்லை | காட்டுக்கோழி, மயில், குயில் |
| மருதம் | அன்னம், நாரை, குருவி, கோழி, மகன்றில், குருகு |
| நெய்தல் | கடற்காகம் |
| பாலை | புறா, பருந்து, கழுகு, ஆந்தை |

**விளக்கம் :** **விடை : (A)**

தனித்தமிழ் இயக்கம் 1916–ல் தோற்றுவிக்கப்பட்டது. இந்த இயக்கத்தின் முக்கிய நோக்கம் தமிழ் மொழியில் வடமொழி மற்றும் பிற மொழிக் கலப்புகளைத் தவிர்த்து, தமிழ் மொழிக்கு தூய்மையை அளிப்பதாகும்.

**தனித்தமிழ் இயக்கத்தின் முக்கிய அம்சங்கள்:**

- **பிற மொழிச் சொற்களைத் தவிர்த்தல்:** தனித்தமிழ் இயக்கத்தின் முக்கிய குறிக்கோள், தமிழ் மொழியில் பிற மொழிச் சொற்கள் கலப்பதை முற்றிலும் தவிர்ப்பது ஆகும்.
- **தமிழ் இலக்கணத்தைப் பின்பற்றுதல்:** தனித்தமிழ் இயக்கம், தமிழ் இலக்கணத்தை முறையாகப் பின்பற்றி, தமிழ் மொழிக்கு ஒரு தூய்மையான வடிவம் கொடுப்பதை வலியுறுத்துகிறது.
- **தமிழை மேம்படுத்துதல்:** இந்த இயக்கம், தமிழ் மொழியை மேம்படுத்தவும், மேலும் பரவவும், அதன் பயன்பாட்டை அதிகரிக்கவும் உதவுகிறது. தனித்தமிழ் இயக்கம், தமிழ் மொழி மீது ஒரு பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. இது தமிழ் மொழி ஆர்வலர்கள் மற்றும் தமிழ் மொழிப்பாதுகாப்பாளர்களிடையே ஒரு முக்கிய இயக்கமாக இருந்து வருகிறது.

# கூடுதல் வினாக்கள்

1. **பின்வரும் சொற்றொடர்களில் எது / எவை சரியானவை ?**
   1) நீதிக்கட்சியின் கூட்டங்கள் ஆங்கிலத்தில் மட்டுமே நடைபெற்றன.
   2) இந்தியதேசிய காங்கிரசின் கூட்டங்கள், பொது மக்களைக் கவருவதற்காக, தமிழிலும் நடந்தன.
   3) 1927–ஆம் ஆண்டு டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி சட்டமன்றத்தின் துணை சபாநாயகராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

   **சரியான விடையளி :**

   **A)** (1) மட்டும் சரியானது
   **B)** (2) மட்டும் சரியானது
   **C)** (1) மற்றும் (2) சரியானது
   **D)** (1), (2) மற்றும் (3) சரியானவை

**விளக்கம் :** **விடை : (D)**

அக்காலத்தில் முதன்மை அரசியல் கட்சியாக இருந்த இந்திய தேசிய காங்கிரஸ், பிராமணர்களின் ஆதிக்கத்தில் இருந்ததால் பிராமணரல்லாத உறுப்பினர்களின் கோரிக்கைகளை அவர்கள் ஏற்கவில்லை. எனவே சென்னை மாகாணத்தில் பிராமணரல்லாதோரின் சமூக அரசியல் மற்றும் பொருளாதார நலன்களை முன்னேற்றுவதற்காக 1916–இல் டாக்டர் டி.எம். நாயர், சர் பிட்டி தியாகராயர் மற்றும் டாக்டர் சி.நடேசனார் போன்றோரால் தென்னிந்திய விடுதலைக் கூட்டமைப்பு (SILF) உருவானது. இது பின்னர் புகழ் பெற்ற நீதிக்கட்சியாக மாற்றம் பெற்றது.

**முத்துலட்சுமி ரெட்டி**

ஜூலை 30, 1886 இல் புதுக்கோட்டையில் பிறந்தார். பெற்றோர் நாராயணசாமி – சந்திரம்மாள் ஆவர். ஆண்கள் மட்டுமே படித்த புதுக்கோட்டை கல்லூரியில் முதன் முதல் இடம் பெற்ற ஒரே மாணவி ஆவார். சென்னை மருத்துவக் கல்லூரியல் 1912–ம் ஆண்டில் மருத்துவராக பட்டம் பெற்ற முதல் இந்திய பெண் ஆவார்.

சென்னை சட்டமன்றத்தில் இடம் பெற்று நியமிக்கப் பெற்ற முதல் இந்தியப் பெண்மணியாகவும் பின்னர் 1927 இல் அந்த சட்ட மன்றத்தின் துணைத் தலைவராகவும் விளங்கினார்.ஆடவரைப் போன்று மகளிருக்கும் வாக்குரிமையும், சொத்துரிமையும் அளிக்க வேண்டும் என்று கேட்டவரும் இவரே ஆவார். 1937 ல் சென்னை நகராட்சியின் முதல் அதிகாரியாகவும் இவர் தேர்வு செய்யப்படார். 1930–ம் ஆண்டு பூனாவில் அனைத்திந்தியப் பெண்கள் மாநாட்டை நடத்தினார். 1933 முதல் 1947 வரை இடையில் இருவருடங்கள் தவிர தொடர்ந்து இந்திய மாதர் சங்கத்தின் தலைவியாக இருந்தார்.

2. **சத்தியாகிரகிகள் உப்புச் சட்டத்திற்கு எதிராக தஞ்சை நோக்கி சென்றபோது பின்வருபவரில் யார் தஞ்சை ஆட்சியராக இருந்தார் ?**

   **A)** க. சந்தானம் **B)** ஏ.ஜே. ராஜன்
   **C)** ஜி. ராமசந்திரன் **D)** செல்வி துர்காபாய்

**விடை : (B)**

3. **சென்னை மகாஜன சபை எப்போது தொடங்கப்பட்டது ?**

   **A)** மே 17, 1884 **B)** மே 26, 1884
   **C)** மே 16, 1884 **D)** மே 6, 1884

**விளக்கம் :** **விடை : (C)**

**சென்னை மகாஜன சபை**

தென்னிந்தியாவில் தெளிவான தேசிய நோக்கங்களுடன் துவங்கப்பெற்ற தொடக்ககால அமைப்பு சென்னை மகாஜன சபையாகும். 1884 மே 16–இல் ஆ. வீரராகவாச்சாரி, ஞ. அனந்தாச்சார்லு, ஞ.ரங்கையா மற்றும் சிலரால் நிறுவப்பட்ட இவ்வமைப்பின் முதல் தலைவராக ஞ. ரங்கையா பொறுப்பேற்றார். இதனுடைய செயலாளராக பொறுப்பேற்ற ஞ.அனந்தாச்சார்லு இதன் செயல்பாடுகளில் பங்காற்றினார். அமைப்பின் உறுப்பினர்கள் குறிப்பிட்ட இடைவெளிகளில் ஒன்று கூடி தனிப்பட்ட விதத்திலும் அறைக்கூட்டங்கள் நடத்தியும் பொதுப்பிரச்சனைகள் குறித்து விவாதித்து தங்கள் கருத்துகளை அரசுக்குத் தெரியப்படுத்தினர். குடிமைப் பணிகளுக்கான தேர்வுகள் இங்கிலாந்திலும் இந்தியாவிலும் ஒரே சமயத்தில் நடத்தப்பட வேண்டும். லண்டனிலுள்ள இந்தியக் கவுன்சிலை மூடுவது, வரிகளைக் குறைப்பது, இராணுவ குடியியல் நிர்வாகச் செலவுகளைக் குறைப்பது ஆகியன இவ்வமைப்பின் கோரிக்கைகளாகும். இவ்வமைப்பின் பல கோரிக்கைகள் பின்னர் 1885–இல் உருவாக்கப்பட்ட இந்திய தேசிய காங்கிரசின் கோரிக்கைகளாயின.

4. **பின்வரும் தமிழறிஞர்களை காலமுறைப்படி வரிசைப்படுத்துக.**
   1) மாயூரம் வேதநாயகம் பிள்ளை
   2) வேதநாயக சாஸ்திரியார்
   3) தஞ்சை ஆபிரகாம் பண்டிதர்
   4) எச்.ஏ. கிருஷ்ணப்பிள்ளை

   **குறியீடுகள் :**

| | | | | |
|---|---|---|---|---|
| **A)** | 1 | 2 | 4 | 3 |
| **B)** | 2 | 1 | 3 | 4 |
| **C)** | 2 | 1 | 4 | 3 |
| **D)** | 3 | 4 | 2 | 1 |

**விளக்கம் :** **விடை : (C)**

1. வேத நாயக சாஸ்திரியார் – (1774 -1864)
2. மாயூரம் வேதநாயகம் பிள்ளை – (1826 -1889)
3. எச்.ஏ கிருஷ்ணப்பிள்ளை – (1827 - 1919)
4. தஞ்சை ஆபிரகாம் பண்டிதர் – (1859 - 1919)

**தஞ்சை ஆபிரகாம் பண்டிதர்**

| | | |
|---|---|---|
| பெற்றோர் | : | முத்துசாமி – அன்னம்மை அம்மாள் |
| ஊர் | : | தென்காசிக்கு அருகேயுள்ள சாம்பவர் வடகரை. |
| காலம் | : | 2.08.1859 முதல் 31.08.1930 வரை |
| பணி | : | ஆசிரியர் |

- இவர் இசைத்தமிழுக்கு பெரும் தொண்டாற்றியவர் இளமையிலேயே புகைப்படக்கலை, அச்சுக்கலை, சோதிடம், மருத்துவம், இசை ஆகிய துறைகளில் பெரும் விருப்பங் கொண்டு அதன் நுட்பங்களைப் பயின்றார்.
- திண்டுக்கல்லில் ஆசிரியராகப் பணியாற்றும் போது சித்தமருத்துவத்தில் தேர்ச்சி பெற்றார். அவரை மக்கள் அன்புடன் '**பண்டுவர்**' **(மருத்துவர்)** என அழைத்தனர்.
- பின்னர் தஞ்சையில் குடியேறினார். அங்கு பண்டைத் தமிழ் நூல்களை எல்லாம் ஆழ்ந்து கற்று, '**சங்கீத வித்தியா மகாஜன சங்கம்**' என்ற அமைப்பை உருவாக்கி, தமது சொந்த செலவில் தமிழிசை மாநாடுகளை நடத்தினார். அவரை அங்குள்ள மக்கள் 'பண்டிதர்' என அழைத்தனர்.

▪ இவருடைய இசைத்தமிழ்த் தொண்டின் சிகரமாக, இவருடைய '**கருணாமிர்த சாகரம்**' என்ற நூல் 1917 –இல் வெளிவந்தது.

**மாயூரம் வேதநாயகம் பிள்ளை**

**காலம் : 1826 – 1889**

இவர், தமிழ் மொழியின் முதல் புதினமான '**பிரதாப முதலியார் சரித்திரத்தை**' எழுதியவர். இவர் நீதிபதியாகப் பணியாற்றியவர். மாயவரத்தின் நகர்மன்றத் தலைவராகவும் பணியாற்றியுள்ளார். கி.பி. 1805 முதல் கி.பி. 1861 வரையுள்ள ஆங்கிலத்தில் இருந்த நீதிமன்றத் தீர்ப்புகளை முதன்முதலில் தமிழில் மொழிபெயர்த்து '**சித்தாந்த சங்கிரகம்**' என்ற நூலாக வெளியிட்டார்.

பெண்மதிமாலை, திருவருள் அந்தாதி, சர்வ சமய சமரசக் கீர்த்தனை, சுகுண சுந்தரி, நீதிநூல், நீதிபேதம் முதலிய நூல்களையும் பல தனிப்பாடல்களையும் இயற்றியுள்ளார். இசையிலும் வீணை வாசிப்பதிலும் வல்லவராகத் திகழ்ந்த இவர், ஆயிரத்திற்கும் மேற்பட்ட கீர்த்தனைகளை இயற்றியுள்ளார். வடமொழி, பிரெஞ்சு, இலத்தீன் ஆகிய மொழிகளைக் கற்றறிந்திருந்தார். பெண்கல்விக்கு குரல்கொடுத்த மிக முக்கிய ஆளுமையாகக் கருதப்படுகிறார்.

19–ஆம் நூற்றாண்டில் தென்னிந்தியப் பகுதியில் ஏற்பட்ட மிகக் கொடிய பஞ்சமான தாதுவருட பஞ்சத்தின் போது (1876 – 1878) தனது சொத்துகள் அனைத்தையும் கொடையாக அளித்தார். இதனைப் போற்றும் விதமாக கோபாலகிருஷ்ண பாரதியார், "**நீயே புருஷமேரு**" என்ற பாடலை இயற்றி இவரைப் பெருமைப்படுத்தினார்.

**எச்.ஏ கிருஷ்ணப்பிள்ளை**

தமிழகத்திலுள்ள திருநெல்வேலி மாவட்டத்தில் கரையிருப்பு என்னும் சிற்றூரில் 1827ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 23ஆம் நாள் பிறந்தவர் கிருஷ்ணபிள்ளை. தந்தையார் சங்கர நாராயண பிள்ளை; தாயார் தெய்வநாயகி அம்மையார். இவர்கள் வைணவ சமயத்தினர். ஆழ்ந்த தமிழ்ப் புலமையும் கல்வியறிவும் மிக்கவர்கள். கிருஷ்ண பிள்ளையின் தந்தை கம்பராமாயணத்தைத் தொடர் சொற்பொழிவாக விளக்கியுரைக்கும் திறம் பெற்றவர். தம் புதல்வருக்கும் தக்க ஆசிரியர்கள் வாயிலாகத் தமிழ்ப் பயிற்சியும் வடமொழிப் பயிற்சியும் கொடுத்தார்.

சாயர்புரம் திருமறைக் கல்லூரியில் தமிழாசிரியராகக் கவிஞர் பணியாற்றினார். அப்பொழுது, இயேசு பெருமானின் அறக்கருத்துகளினால் ஈர்க்கப்பெற்றுக் கிறித்துவராக மாறினார். இவர் சென்னையில் தினவர்த்தமானி என்ற இதழின் துணையாசிரியராகவும், மாநில உயர்நிலைப் பள்ளித் தமிழாசிரியராகவும் பணியாற்றினார். பின்னர், பாளையங்கோட்டை சி.எம்.எஸ்.கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராகவும், திருவனந்தபுரம் மகாராசர் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியராகவும் பணி செய்தார். மேலும் கிறித்தவ இலக்கியச் சங்கத்தின் ஆசிரியராகவும் பணியாற்றினார்.

**வேதநாயக சாஸ்திரியார்**

வேதநாயகம் சாஸ்திரியார், திருநெல்வேலியைச் சேர்ந்த திரு. தேவசகாயம் என்பவரின் முதல் மகனாக 1774 செப்டம்பர் 7 ஆம் தேதி பிறந்தார். இளம் வயதிலேயே தனது தாயை இழந்தார். சுமார் பத்து வயதில், அவருக்கு சிலுவை பற்றிய தெளிவான பார்வை இருந்தது, இந்த நிகழ்வு அவரது முழு வாழ்க்கையையும் பாதிக்க இருந்தது. 1785 ஆம் ஆண்டில், ஒரு ஜெர்மன் மிஷனரி, அதாவது ரெவ். கிறிஸ்டியன் ஃபிரடெரிக் ஸ்வார்ட்ஸ் திருநெல்வேலிக்கு விஜயம் செய்தார். அவர் வேதநாயகத்தை தஞ்சாவூருக்கு அழைத்துச் சென்றார். படிப்பை முடித்த பிறகு, வேதநாயகம் தஞ்சையைச் சுற்றியுள்ள கிராமங்களில் பணியாற்றினார். சிறிது காலம் ஒரு மிஷனரி பள்ளியில் ஆசிரியராகப் பணியாற்றினார். கிறிஸ்தவ பாடல் வரிகள் மற்றும் இலக்கியங்களை எழுதத் தொடங்கினார். அவர் 133 புத்தகங்களை எழுதினார், மேலும் அவரது மிகவும் பிரபலமான படைப்பு 'பெத்லகேம் குறவஞ்சி'.

அவரது முன்னாள் வகுப்புத் தோழரான இளவரசர் சரபோஜி தஞ்சையின் அரசரானதும், வேதநாயகத்தை அதிகாரப்பூர்வ அரசவைக் கவிஞராக நியமித்ததும் அவரது வாழ்க்கையில் ஒரு திருப்புமுனையாக அமைந்தது. வேதநாயகத்திற்கு 'ஞானதீப கவிராயர்', வேத சாஸ்திரிகள் மற்றும் 'சுவிசேஷ கவிராயர்' போன்ற பல்வேறு பட்டங்கள் வழங்கப்பட்டன, இது அவரை சுவிசேஷக் கவிஞர்களின் மன்னராக நிலைநிறுத்தியது.

**5. இந்தியாவை "மொழிகளின் காட்சிச் சாலை என்று குறிப்பிட்டவர்**

**A)** மாக்ஸ்முல்லர் **B)** தொ.பொ.மீனாட்சி சுந்தரம்
**C)** கி.வா. ஜெகந்நாதன் **D)** ச. அகத்தியலிங்கம்

**விளக்கம் :** **விடை:(D)**

இந்தியாவை "மொழிகளின் காட்சி சாலை" என்று கூறியவர் பேராசிரியர் ச. அகத்தியலிங்கம் ஆவார். இந்தியாவில் பல மொழிகள் பேசப்படுவதால், இந்தியாவை "மொழிகளின் காட்சி சாலை" என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தோ–ஆசிய, திராவிட, ஆஸ்திரோ–ஆசியா மற்றும் சீன–திபெத்திய போன்ற பல்வேறு மொழிக்குடும்பங்களைச் சேர்ந்த பல மொழிகள் பேசப்படுவதே இதற்குக் காரணம், அவரது கூற்றுப்படி, இந்தியாவில் சுமார் 12 மொழிக்குடும்பங்களும், 325 மொழிகளும் இருப்பதாக இந்திய மானுடவியல் கணக்கெடுப்பு தெரிவிக்கிறது.

**6. தவறான இணையைக் கண்டறிக.**

**A)** திருக்குறளின் ஞானப்பிரகாசர் மூலத்தை அச்சிட்டவர் தஞ்சை
**B)** திருக்குறளுக்கு முதலில் உரை எழுதியவர் – மணக்குடவர்
**C)** திருக்குறளில் இருமுறை வரும் அதிகாரம் – நட்பு
**D)** திருக்குறளை ஆங்கிலத்தில் முதலில் மொழிபெயர்த்தவர் – ஜி.யு.போப் முதலில்

**விளக்கம் :** **விடை: (C)**

திருக்குறள் முதன்முதலில் அச்சிடப்பட்ட ஆண்டு கி.பி. 1812.

முதன் முதலில் அச்சிட்டவர் தஞ்சாவூர் மலையத்துவசன் மகன் ஞானப்பிரகாசம்.

திருக்குறளில் இரண்டு அதிகாரங்கள் ஒரே பெயரில் அமைந்துள்ளன.

அவை,

குறிப்பறிதல் – அதிகாரம் 71 (பொருட்பால்)

குறிப்பறிதல் – அதிகாரம் 110 (காமத்துப்பால்)

திருக்குறளை முதன்முதலில் மொழி பெயர்த்தவர் வீரமாமுனிவர் (இலத்தீன்);

திருக்குறளை ஆங்கிலத்தில் முதலில் மொழிபெயர்த்தவர் ஜி.யு. போப்

திருக்குறள் 107 மொழிகளில் மொழிபெயர்க்கப் பட்டுள்ளது.

இந்நூலில் இடம் பெறாத சொற்கள் 'தமிழ்', 'கடவுள்'.

இந்நூலில் இடம் பெற்றுள்ள மலர்கள் அனிச்சம், குவளை.

இந்நூலில் இடம் பெற்றுள்ள பழம், நெருஞ்சிப்பழம்

இந்நூலில் இடம் பெற்றுள்ள விதை, குன்றிமணி.

இந்நூலில் இடம் பெற்றுள்ள மரங்கள் பனை, மூங்கில்.

**7. மாமழை போற்றுதும் மாமழை போற்றுதும் நாமநீர் வேலி உலகிற்கு அவன் அளிபோல் மேல்நின்று தான் சுரத்தலான் இவ்வடிகள் இடம்பெற்றுள்ள நூலின் பெயர்**

**A)** சீவக சிந்தாமணி **B)** மணிமேகலை
**C)** குண்டலகேசி **D)** சிலப்பதிகாரம்

**விளக்கம் :** **விடை: (D)**

"மாமழை போற்றுதும் மாமழை போற்றுதும் நாமநீர் வேலி உலகிற்கு அவன் அளிபோல் மேல்நின்று தான் சுரத்தலான்"

இவ்வடிகள் இளங்கோவடிகள் இயற்றிய சிலப்பதிகாரம் என்னும் காப்பியத்தில் இடம்பெற்றுள்ளன. இது சிலப்பதிகாரத்தின் மங்கல வாழ்த்துப் பாடலில் இடம்பெறும் மழையைப் போற்றும் வரிகள் ஆகும்.

**8. தமிழ், கன்னடம், மலையாளம் ஆகியன**

**A)** நடுத்திராவிட மொழிகள்
**B)** வடதிராவிட மொழிகள்
**C)** தென்திராவிட மொழிகள்
**D)** வட இந்திய மொழிகள்

**விளக்கம் :** **விடை: (C)**

**மொழிக்குடும்பம்**

தனக்கெனத் தனிச் சிறப்பும்,பல மொழிகள் தோன்றி வளர அடிப்படையாகவும் உள்ள மூலமொழியும், அதிலிருந்து தோன்றி வளர்ந்த கிளை மொழிகளும் ஒரே மொழிக்குடும்பம் எனப்படும்.

இந்தியாவில் பேசப்படும் மொழிக்குடும்பங்கள் : 4.

இந்தோ–ஆசிய மொழிகள், திராவிட மொழிகள், ஆஸ்திரோ–ஆசிய மொழிகள், சீன–திபெத்திய மொழிகள்.

நம் நாட்டில் 1300–க்கு மேற்பட்ட மொழிகளும், அதன் கிளை மொழிகளும் பேசப்பட்டு வருகின்றன. ஆதலால் இந்திய நாட்டை 'மொழிகளின் காட்சி சாலை' என்று குறிப்பிட்டுள்ளார் மொழியியல் பேராசிரியர் ச. அகத்தியலிங்கம்.

**திராவிட மொழி வகைகள்:**

| தென் திராவிடம் | நடுத் திராவிடம் | வட திராவிடம் |
|---|---|---|
| தமிழ் மலையாளம் கன்னடம் குடகு (கொடகு) துளு கோத்தா தோடா கொரகா இருளா | தெலுங்கு கூயி கூவி (குவி) கோண்டா கோலாமி (கொலாமி) நாய்க்கி பெங்கோ மண்டா பர்ஜி கத்பா கோண்டடி கோயா | குருக் மால்தோ பிராகுப் (பிராகுயி) |

**9. பகைவரை வென்றதைப் பாடும் இலக்கியம் எது ?**

**A)** பரணி
**C)** உலா
**B)** குறவஞ்சி
**D)** பிள்ளைத்தமிழ்

**விளக்கம் :** **விடை: (A)**

**பரணி**

போர்முனையில் ஆயிரம் யானைகளைக் கொன்று வெற்றிகொண்ட வீரரைப் புகழ்ந்து பாடும் இலக்கியம் பரணி ஆகும். கலிங்கத்துப்பரணி தொண்ணூற்றாறு வகைச் சிற்றிலக்கியங்களுள் ஒன்றான பரணி வகையைச் சார்ந்த நூல். தமிழில் முதல்முதலில் எழுந்த பரணி இந்நூலே ஆகும். இது முதலாம் குலோத்துங்க சோழன், அவருடைய படைத்தலைவர் கருணாகரத் தொண்டைமான் ஆகியோரின் கலிங்கப்போர் வெற்றியைப் பேசுகிறது. இந்நூலைத் தென்தமிழ்த் தெய்வப்பரணி என்று ஒட்டக்கூத்தர் புகழ்ந்துள்ளார். கலிங்கத்துப் பரணி கலித்தாழிசையால் பாடப்பெற்றது; 599 தாழிசைகள் கொண்டது.

**குறவஞ்சி**

நாடக இலக்கியத்திற்கு நல்ல சான்றாக விளங்குவது குறவஞ்சி இலக்கியம். பாட்டுடைத் தலைவனை அவனது உலாவின்போது கண்டு காதல் கொண்டு, காதல் வேதனையால் வாடித் தவிக்கும் தலைவி ஒருத்திக்குக் குறவர் குலத்தைச் சேர்ந்த வஞ்சியொருத்தி குறி கூறுவதாக அமைவதே குறவஞ்சி இலக்கியம். திரிகூடராசப்பக் கவிராயரால் இயற்றப் பெற்ற குற்றாலக் குறவஞ்சியே முதல் குறவஞ்சி இலக்கியமாகும். இது சுவையாலும் நடைநயத்தாலும் முதன்மை பெற்றது.

**உலா**

இலக்கிய வகைகளில் பொருண்மைச் சிறப்பால் பொலிவு பெற்று விளங்கும் சிலவற்றுள் உலா இலக்கியமும் ஒன்று. உலகைக் காக்கும் இறைவனின் திருவுருவோ, அரசனோ, உலகம் போற்றும் ஒரு வள்ளலோ, யானை, குதிரை, தேர் முதலிய வாகனங்களில் ஏறி வர, மங்கல இசைக்கருவிகள் முழங்க, வீதியில் உலா வருவதாகவும், பேதை பெதும்பை, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை, பேரிளம்பெண் என்ற ஏழு பருவ மகளிரும் அவரைக் கண்டு காதல் கொண்டு வருந்துவதாகவும், புலவர்களால் கற்பனைச் செறிவுடன் பாடப்பெறும் ஒருவகைச் சிற்றிலக்கியமே உலா என்று அழைக்கப்பெறுகின்றது.

உலா நூல்களில் முதலாவதாகப் பாடப் பெற்றது திருக்கயிலாய ஞானவுலாவாகும். முதலில் பாடப்பெற்றதனால் ஆதியுலா என்றும் இது வழங்கப்பெறும். கி.பி. எட்டாம் நூற்றாண்டில் சேர நாட்டின் சிறு பகுதியை ஆட்சி புரிந்தவரும், செந்தமிழ்ச் சைவப் புலவருமாகிய சேரமான் பெருமான் நாயனார் இதனைப் பாடினார்.

**பிள்ளைத்தமிழ்**

இவ்வகை இலக்கியத்தில் பாட்டுடைத் தலைவனைப் பிள்ளைப் பருவத்தனனாக எண்ணி உருவகித்துப் பாடப்பெறும். பிற்காலத்தில் பாட்டியல் நூல்கள் பிள்ளைத்தமிழ் என்னும் இலக்கிய வகையில் இலக்கணத்தை உருவாக்கியுள்ளன.

ஆண்பால் பிள்ளைத் தமிழுக்குக் காப்பு, செங்கீரை, தால், சப்பாணி, முத்தம், வருகை, அம்புலி, சிற்றில், சிறுபறை, சிறுதேர் என்னும் பத்துப் பருவங்கள் உரியன. பெண்பாற் பிள்ளைத் தமிழாயின் இறுதி மூன்றையும் நீக்கிவிட்டுக் கழங்கு, அம்மானை, ஊசல் ஆகியன பாடப்படும். தலைவனைக் குறிப்பிட்ட வயதுடையவனாக எண்ணிப் பிள்ளைத்தமிழ் பாடுதல் மரபாகும். குழந்தை பிறந்த மூன்றாம் மாதம் முதல் இருபத்தொரு மாதம் வரையுள்ள பத்து மாதங்களுக்கும் பத்துப் பருவம் பாடப்பெறும். பத்துப் பருவங்களும் பத்துப் பத்துப் பாடல்கள் கொண்டவை.

**10. "தம் மக்கள் மெய் தீண்டல் உயிர்க்கு இன்பம்" என்று கூறியவர் யார்?**

**A)** நா. முத்துக்குமார்
**B)** திருவள்ளுவர்
**C)** பாரதியார்
**D)** வாணிதாசன்

**விளக்கம் :** **விடை: (B)**

**திருக்குறள் (குறள் 65)**

**சொற்கேட்டல் இன்பம் செவிக்கு மக்கள்மெய்**
**தீண்டல் உடற்கின்பம் மற்றுஅவர்** – திருவள்ளுவர்

பொருள்: பெற்றோர் தங்கள் குழந்தைகளின் உடம்பைத் தொடுதல் உடம்பிற்கு இன்பம் தருவதாகும்: அவர்களின் மழலைச் சொற்களைக் கேட்டால் செவிக்கு இன்பம் தருவதாகும்.

**11. வாக்கியம் I: திருக்குறள் 'அ' கரத்தில் தொடங்கி 'ன' கர ஒற்றில் முடிகிறது.**

**வாக்கியம் II: திருக்குறளில் இருமுறை வரும் ஒரே அதிகாரம் குறிப்பறிதல்.**

**A)** I மட்டும் சரி
**B)** II மட்டும் சரி
**C)** I மற்றும் II சரி
**D)** I மற்றும் II தவறு

**விளக்கம் :** **விடை: (C)**

**வாக்கியம் I :** திருக்குறள் 'அ' என்ற எழுத்தில் தொடங்கி 'ன' என்ற எழுத்தில் முடிகிறது என்பது சரி.

**வாக்கியம் II:** திருக்குறளில் குறிப்பறிதல்' என்ற அதிகாரம் மட்டுமே இரண்டு முறை இடம்பெறுகிறது என்பதும் சரி எனவே இரண்டு வாக்கியங்களும் சரியானவை.

**திருக்குறளின் சிறப்புகள்**

* திருக்குறளுக்கு முதலில் வைத்த பெயர் முப்பால். உலகம் ஏற்கும் கருத்துகளைக் கொண்டுள்ளதால் 'உலகப் பொதுமறை' என வழங்கப் பெறுகிறது.
* முதன்முதலில் அச்சிடப்பட்ட ஆண்டு கி.பி.1812.
* முதன் முதலில் அச்சிட்டவர் தஞ்சாவூர் மலையத்துவசன் மகன் ஞானப்பிரகாசம்.
* திருக்குறளில் இரண்டு அதிகாரங்கள் ஒரே பெயரில் அமைந்துள்ளன.
* குறிப்பறிதல் – அதிகாரம் 71 (பொருட்பால்)
* குறிப்பறிதல் – அதிகாரம் 110 (காமத்துப்பால்)
* திருக்குறளை முதன்முதலில் மொழி பெயர்த்தவர் வீரமாமுனிவர் (இலத்தீன்) ; ஆண்டு –1730.
* இந்நூலில் இடம் பெறாத ஒரே உயிரெழுத்து 'ஔ'.
* இந்நூலில் அதிகம் பயன்படுத்தப்பட்ட எழுத்து 'னி'
* ஒரேயொருமுறை மட்டும் பயன்படுத்தப்பட்ட எழுத்து 'ளீ'

✶ தமிழில் உள்ள 247 எழுத்துகளில் 37 எழுத்துகள் மட்டுமே பயன்படுத்தப்படவில்லை.

**12. தவறான இணையைக் கண்டறிக:**

**A)** சேரர் தலைநகரம் – வஞ்சி
**B)** பாண்டியர் சின்னம் – மீன்
**C)** சோழர் தலைநகரம் – காவிரிப்பூம்பட்டினம்.
**D)** சேரர் அடையாளப் பூ – போந்தை

**விளக்கம்:** **விடை: (C)**

**i)** சோழர்களின் தலைநகரம் உறையூர்.
**ii)** சேரர் தலைநகர் – வஞ்சி; துறைமுகம் – தொண்டி, முசிறி; சின்னம் (கொடி) – வில் அம்பு; பூ – பனம் பூ (போந்தை)
**iii)** சோழர் தலைநகர் – உறையூர் (உறைந்தை) துறைமுகம் – காவிரிப்பூம்பட்டினம் சின்னம் (கொடி) – புலி; பூ – அத்திப் பூ (ஆர்)
**iv)** பாண்டியன் தலைநகர் – மதுரை; துறைமுகம் – கொற்கை சின்னம் (கொடி) – மீன்; பூ – வேப்பம் பூ

**13. தவறான சொற்றொடர் எது?**

**A)** இறைவன் ஜோதி வடிவானவன் என்று கூறியவர் இராமலிங்க அடிகள்.
**B)** பசி மற்றும் வறுமையே சமூகத்தின் அனைத்து தீமைகளுக்கும் காரணம் என வள்ளலார் நம்பினார்.
**C)** ''வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்'' என்று கூறியவர் இராமலிங்க அடிகள்.
**D)** மனித இனத்திற்கு செய்யும் தொண்டே மோட்சத்தை அடைவதற்கான வழி என்பது விவேகானந்தர் வாக்கு.

**விளக்கம் :** **விடை: (D)**

மனித இனத்திற்கு செய்யும் தொண்டே மோட்சத்தை அடைவதற்கான வழி என்பது வள்ளலார் வாக்கு.

**இராமலிங்க அடிகளார் (வள்ளலார்) (1823-1874)**

✶ இவர் சிதம்பரத்திற்கு அருகேயுள்ள மருதூர் என்ற கிராமத்தில் பிறந்தார். இறைவன் ஜோதி வடிவானவன் என்றும் அருட்பெரும் ஜோதியாக இருக்கிறார் என்றும் கூறினார்.

✶ ஏழைகளுக்கு உணவளிப்பதே சிறந்த வழிபாடு என உறுதியாக நம்பினார். அன்பு வழியில் ஆன்மிகத்தை அடைய முடியும் என உறுதியாக நம்பினார்.

✶ தாவரங்கள், புழு பூச்சிகள், விலங்குகள் மற்றும் பறவைகள் என அனைத்து உயிர்களிடத்தும் அன்பு செலுத்தினார். 'வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்' என்று கூறினார்.

✶ மதவெறியையும் பகுத்தறிவற்ற தன்மையையும் கண்டனம் செய்தார். தன்னுடைய பாடல்களில் முற்போக்குச் சிந்தனைகளை வெளிப்படுத்தினார். இதனால் வைதீக சைவ சமயத்தினர் இவர்பால் வெறுப்பு கொண்டனர்.

✶ இவர் சத்திய தர்மசாலை ஒன்றை 1867 –ஆம் ஆண்டு வடலூரில் நிறுவி சாதிமத வேறுபாடின்றி அனைவருக்கும் உணவளித்தார்.

✶ தன்னை பின்பற்றுவோரை ஒருங்கிணைப்பதற்காக சத்யஞான சபை (சமரச சுத்த சன்மார்க்க சங்கம்) என்னும் அமைப்பை 1870–ஆம் ஆண்டு நிறுவினார்.

✶ இவருடைய காலத்தில் சைவ சமயமானது திருவாவடுதுறை, தர்மபுரம், திருப்பனந்தாள் போன்ற சைவ மடங்களின் கட்டுப்பாட்டில் இருந்தது. இவர் சத்ய ஞானசபையை தொடங்கியதால் சைவ மடங்களுடன் மோதல் அதிகரித்தது.

✶ தொலுவூர் வேலாயுதனார் போன்ற வள்ளலாரின் சீடர்கள் அவருடைய பாடல்களைத் திரட்டி 'திருவருட்பா' என்னும் பெயரில் 1867–இல் வெளியிட்டனர்.

**14. 'சிறுகதை மன்னன்' என்று அழைக்கப்படுபவர்**

**A)** ப. சிங்காரம் **B)** கு. அழகிரிசாமி
**C)** ஜெயகாந்தன் **D)** நாகூர் ரூமி

**விளக்கம் :** **விடை : (C)**

'சிறுகதை மன்னன்' என்று அழைக்கப்படுபவர் ஜெயகாந்தன் ஆவார். இவர் தமிழ் இலக்கியத்தில் சிறுகதைகள், புதினங்கள், கட்டுரைகள் மற்றும் திரைப்படங்களில் பணியாற்றிய ஒரு குறிப்பிடத்தக்க எழுத்தாளர் ஆவார். தனது படைப்புகளில் யதார்த்தமான பாத்திரங்களையும், சமூகப் பிரச்சினைகளையும் மையமாகக் கொண்டு எழுதியவர்.

**15. ஒறுத்தாரை ஒன்றாக ............... வைப்பர்**
**பொறுத்தாரைப் பொன்போல் பொதிந்து.**
**விடுபட்ட சீரைத் தேர்ந்தெடுக்க.**

**A)** வைப்பாரை **B)** வையாரே
**C)** செய்தாரை **D)** பொறுத்தாரை

**விளக்கம் :** **விடை : (B)**

விடுபட்ட சீர் ''வையாரே''. இக்குறள் திருக்குறளின் ''பொறையுடைமை'' அதிகாரத்தில் 155வது குறளாகும்.

**ஒறுத்தாரை ஒன்றாக வையாரே வைப்பர்**
**பொறுத்தாரைப் பொன்போற் பொதிந்து.**

**பொருள்:**

தமக்கு இழைக்கப்படும் தீமையைப் பொறுத்துக் கொள்பவர்களை உலகத்தார் பொன்னாக மதித்துப் போற்றுவார்கள். பொறுத்துக்கொள்ளாமல் தண்டிப்பவர்களை உலகத்தார் ஒரு பொருளாக மதியார்.

**16. ''ஒப்புடன் முகம் மலர்ந்தே உபசரித்து உண்மை பேசி'' – இத்தொடர் இடம்பெற்றுள்ள நூல் எது ?**

**A)** விவேகசிந்தாமணி **B)** பரிபாடல்
**C)** காசிக்காண்டம் **D)** முல்லைப்பாட்டு

**விளக்கம் :** **விடை : (C)**

''ஒப்புடன் முகம் மலர்ந்தே உபசரித்து உண்மை பேசி''–இத்தொடர் இடம்பெற்றுள்ள நூல் காசிக்காண்டம் ஆகும். இது அதிவீரராம பாண்டியர் இயற்றிய நூல் ஆகும்.

விருந்தோம்பலின் சிறப்பைக் கூறும் பகுதியாக இது உள்ளது. விருந்தினரை முகமலர்ச்சியுடன் வரவேற்று, உபசரித்து, உண்மையானவற்றைப் பேச வேண்டும் என்பதே இத்தொடரின் பொருளாகும்.

**17. வாக்கியம்–I : முல்லைப்பாட்டு என்னும் நூலை இயற்றியவர் கீரந்தையார் ஆவார்.**
**வாக்கியம்–II : முல்லைப்பாட்டு ஆசிரியப்பாவால் இயற்றப்பட்டது.**
**சரியான விடையளி :**

**A)** I மட்டும் சரி **B)** II மட்டும் சரி
**C)** I மற்றும் II சரி **D)** I மற்றும் II தவறு

**விளக்கம் :** **விடை : (B)**

பத்துப்பாட்டில் நான்கு ஆற்றுப்படைகளுக்குப் பின் வைத்து எண்ணப்படுவது முல்லைப்பாட்டு. இது அகம் சார்ந்த நூல். 103 அடிகளைக் கொண்டது. பத்துப்பாட்டு நூல்களுள் அளவில் மிகச் சிறியது. இதன் ஆசிரியர் காவிரிப்பூம்பட்டினத்துப் பொன்வணிகனார் மகனார் **நப்பூதனார்**. இந்நூல் **ஆசிரியப்பாவால்** இயற்றப்பட்டது. பாண்டியன் நெடுஞ்செழியனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு எழுதப்பட்டது எனினும் தலைவன் பெயர் பாட்டில் கூறப்படவில்லை. இந்நூல் நெஞ்சாற்றுப்படை எனவும் அழைக்கப்படுகின்றது. எனவே வாக்கியம் II மட்டும் சரி.

**18. ''உண்டி முதற்றே உணவின் பிண்டம்**
**உணவெனப் படுவது நிலத்தொடு நீரே''**
**– எனப்பாடிய சங்கப் புலவர் யார் ?**

**A)** மாங்குடி மருதனார்
**B)** குடபுலவியனார்
**C)** ஔவையார்
**D)** பெருங்குன்றூர்க் கௌசிகனார்

**விளக்கம் :** **விடை : (B)**

''உண்டி முதற்றே உணவின் பிண்டம் உணவெனப் படுவது நிலத்தொடு நீரே'' என்ற வரிகள் **புறநானூற்றில்** இடம்பெற்றுள்ளன. இந்த வரிகளைப் பாடிய சங்கப் புலவர் **குடபுலவியனார்** . அவர் பாண்டியன் நெடுஞ்செழியனைப் பாடியபோது, உணவின் முக்கியத்துவத்தையும், உணவு உற்பத்தியில் நிலமும் நீரும் எவ்வாறு இன்றியமையாதவை என்பதையும் வலியுறுத்தினார்.

19. **வாக்கியம்–I : தொல்காப்பியம் மூன்று அதிகாரங்களையும் 27 இயல்களையும் கொண்டது.**

**வாக்கியம்–II : தொல்காப்பியம் பிறப்பியலில் எழுத்துகள் பிறக்கும் இடங்களை உடற்கூற்றியல் அடிப்படையில் விளக்கியிருக்கிறது.**

**சரியான விடையளி :**

**A)** I மட்டும் சரி **B)** II மட்டும் சரி
**C)** I மற்றும் II சரி **D)** I மற்றும் II தவறு

**விளக்கம் :** **விடை : (C)**

தொல்காப்பியம் மூன்று அதிகாரங்களையும் (எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், பொருளதிகாரம்) 27 இயல்களையும் கொண்டது என்பது சரி. மேலும், தொல்காப்பியத்தின் 'பிறப்பியல்' இயல், எழுத்துகள் பிறக்கும் இடங்களை (மார்பு, கழுத்து, தலை, மூக்கு) உடற்கூற்றியல் அடிப்படையில் மிக நுட்பமாக விளக்கியுள்ளது என்பதும் சரி.

20. **தவறான இணையைக் கண்டறிக.**

**A)** மலைபடுகடாம் - பத்துப்பாட்டு
**B)** மதுரைக்காஞ்சி - எட்டுத்தொகை
**C)** சீவகசிந்தாமணி - ஐம்பெருங்காப்பியம்
**D)** சூளாமணி - ஐஞ்சிருகாப்பியம்

**விளக்கம் :** **விடை : (B)**

**மலைபடுகடாம் –பத்துப்பாட்டு :**

மலைபடுகடாம் என்பது பத்துப்பாட்டு நூல்களுள் ஒன்றாகும். இது நன்னன் என்பவனை பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு பாடப்பட்டது.

**மதுரைக்காஞ்சி –எட்டுத்தொகை:**

மதுரைக்காஞ்சி என்பது எட்டுத்தொகை நூல் அல்ல, இது பத்துப்பாட்டு நூல்களுள் ஒன்று. மாங்குடி மருதனார் என்பவரால் இயற்றப்பட்டது.

**சீவகசிந்தாமணி –ஐம்பெருங்காப்பியம்:**

சீவகசிந்தாமணி என்பது ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்றாகும். திருத்தக்கதேவர் என்பவரால் இயற்றப்பட்டது.

**சூளாமணி –ஐஞ்சிறுகாப்பியம் :**

சூளாமணி என்பது ஐஞ்சிறுகாப்பியங்களுள் ஒன்றாகும். தோலாமொழி தேவரால் இயற்றப்பட்டது.

21. **வாக்கியம்–I : முல்லைப்பாட்டு, பத்துப்பாட்டு நூல்களுள் ஒன்று.**

**வாக்கியம்–II : மாலை சிறுபொழுதுகளுள் ஒன்று.**

**சரியான விடையளி :**

**A)** I மட்டும் சரி **B)** II மட்டும் சரி
**C)** I மற்றும் II சரி **D)** I மற்றும் II தவறு

**விளக்கம் :** **விடை : (C)**

**வாக்கியம் – I :** ''முல்லைப்பாட்டு, பத்துப்பாட்டு நூல்களுள் ஒன்று''. இது சரியானது. சங்க இலக்கியத்தில் உள்ள 'பத்துப்பாட்டு' தொகுப்பில் முல்லைப்பாட்டும் ஒரு நூலாகும்.

**வாக்கியம் – II :** ''மாலை சிறுபொழுதுகளுள் ஒன்று''. இதுவும் சரியானது. தமிழர்களின் நிலம் மற்றும் காலப் பிரிவுகளின்படி, ஒரு நாளின் ஆறு சிறுபொழுதுகளில் (காலை, நண்பகல், எற்பாடு, மாலை, யாமம், வைகறை) 'மாலை' என்பதும் ஒன்றாகும்.

22. **தவறான இணையைக் கண்டறிக.**

**A)** வெண்பாவிற்கு - புகழேந்தி
**B)** பரணிக்கு - ஜெயங்கொண்டான்
**C)** கலம்பகத்திற்கு - இரட்டையர்கள்
**D)** சந்தத்திற்கு - ஒட்டக்கூத்தன்

**விளக்கம் :** **விடை : (D)**

வெண்பாவிற்குப் புகழேந்தி என்பது சரியான இணை. புகழேந்திப் புலவர் வெண்பாவால் இயற்றப்பட்ட நளவெண்பாவைப் பாடியவர்.

பரணிக்கு ஜெயங்கொண்டான் என்பது சரியான இணை. ஜெயங்கொண்டார் கலிங்கத்துப் பரணி எனும் நூலைப் பாடியவர்.

கலம்பகத்திற்கு இரட்டையர்கள் என்பது சரியான இணை. திருக்கலம்பகம் போன்ற கலம்பக நூல்களை இரட்டையர்கள் இயற்றியுள்ளனர்.

சந்தத்திற்கு அருணகிரிநாதர் என்பதே சரியான இணை. அருணகிரிநாதர் சந்தப் பாடல்களால் இயற்றப்பட்ட திருப்புகழ் எனும் நூலைப் பாடியவர். ஒட்டக்கூத்தன் பரணி, உலா, பிள்ளைத்தமிழ் போன்ற சிற்றிலக்கியங்களைப் பாடியவர்.

23. **வாக்கியம்–I : 'பாஞ்சாலி சபதம் பாடிய பாரதி' என்ற வரலாற்றுப் புதினத்தை எழுதியவர் ராஜம் கிருஷ்ணன்.**

**வாக்கியம்–II : 'குறிஞ்சி மலர்' என்னும் நூலை இயற்றியவர் நா. பார்த்தசாரதி**

**சரியான விடையளி :**

**A)** I மட்டும் சரி **B)** II மட்டும் சரி
**C)** I மற்றும் II சரி **D)** I மற்றும் II தவறு

**விளக்கம் :** **விடை : (C)**

'பாஞ்சாலி சபதம் பாடிய பாரதி' என்ற வரலாற்றுப் புதினத்தை எழுதியவர் எழுத்தாளர் ராஜம் கிருஷ்ணன் ஆவார். அவர் 1925–2014 காலகட்டத்தில் வாழ்ந்த மூத்த தமிழ் எழுத்தாளர் மற்றும் பெண்ணியவாதி ஆவார். மேலும் உப்பளத் தொழிலாளர்களின் வாழ்க்கையைப் பற்றிய புதினம் **கரிப்பு மணிகள்**, நீலகிரி, படுகர் இன மக்களின் வாழ்வியல் மாற்றங்களைக் குறித்து **''குறிஞ்சித் தேன்''** புதினம், கடலோர மீனவர் வாழ்வின் சிக்கல்களைப் பற்றிய **''அலைவாய்க் கரையில்''** புதினம், அமைப்புசாரா வேளாண் தொழிலாளர்களின் உழைப்பு சுரண்டப்படுவதை பற்றிய **''சேற்றில் மனிதர்கள்'', ''வேருக்கு நீர்''** ஆகிய புதினங்கள் இவர் எழுதியவை

**'குறிஞ்சி மலர்'** என்னும் புகழ்பெற்ற நாவலை எழுதியவர் நா. பார்த்தசாரதிதான். அவர் 'தீபம்' இதழின் ஆசிரியராக இருந்ததால், 'தீபம்' நா. பார்த்தசாரதி என்றும் அழைக்கப்படுகிறார். பிற படைப்புகள்: அனிச்ச மலர், சாயங்கால மேகங்கள் போன்ற பல நூல்களையும் எழுதியுள்ளார். எனவே வாக்கியம் இரண்டும் சரி.

24. **''தென்னாட்டுச் சிங்கம்'' என்று போற்றப்படுபவர்**

**A)** காமராசர் **B)** அறிஞர் அண்ணா
**C)** இராஜாஜி **D)** முத்துராமலிங்கத் தேவர்

**விளக்கம் :** **விடை : (D)**

தென்னாட்டுச் சிங்கம் என்று போற்றப்படுபவர் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் ஆவார். இவர் ஒரு இந்திய அரசியல்வாதி, சமூக சீர்திருத்தவாதி மற்றும் ஆன்மீகவாதி ஆவார்.

25. **பொருத்துக.**

| | | | |
|---|---|---|---|
| **a)** | எம்.எஸ். சுப்புலட்சுமி | **1.** | சமூகப் போராளி |
| **b)** | பாலசரஸ்வதி | **2.** | எழுத்தாளர் |
| **c)** | ராஜம் கிருஷ்ணன் | **3.** | நடனக்கலைஞர் |
| **d)** | கிருஷ்ணம்மாள் ஜெகந்நாதன் | **4.** | பாடல் கலைஞர் |

**குறியீடுகள் :**

| | a) | b) | c) | d) |
|---|---|---|---|---|
| **A)** | 4 | 1 | 2 | 3 |
| **B)** | 4 | 3 | 2 | 1 |
| **C)** | 4 | 2 | 3 | 1 |
| **D)** | 4 | 1 | 3 | 2 |

**விளக்கம் :** **விடை : (B)**

எம்.எஸ்.சுப்புலட்சுமி ஒரு புகழ்பெற்ற பாடல் கலைஞர் (கர்நாடக இசைப் பாடகி).

பாலசரஸ்வதி ஒரு புகழ்பெற்ற நடனக்கலைஞர் (பரதநாட்டியம்).

ராஜம் கிருஷ்ணன் ஒரு புகழ்பெற்ற எழுத்தாளர்.

கிருஷ்ணம்மாள் ஜெகந்நாதன் ஒரு சமூகப் போராளி மற்றும் சமூக சேவகர்.

**26. வள்ளுவர் வாக்கின் படி,**
**தீய செயலால் பொருள் சேர்ப்பது என்பது**

**A)** சல்லடையில், நீர்ப்பிடிப்பது போன்றது
**B)** மூங்கில் கூடையில் நீர்ப்பிடிப்பது போன்றது
**C)** வாளியில் நீரைச் சேமிப்பது போன்றது
**D)** பசுமண் கலத்தில் நீரைச் சேமிப்பது போன்றது

**விளக்கம் :** **விடை : (D)**

திருவள்ளுவர் திருக்குறளில், தீய வழிகளில் சேர்க்கப்படும் செல்வம் நிலைக்காது என்பதை வலியுறுத்துகிறார். ஊழல் அல்லது தவறான வழிகளில் சேர்க்கப்படும் செல்வம், ஒருபோதும் ஒருவரிடம் நிலைத்து நிற்காது. இது, சுடப்படாத மண் பானையில் (பசுமண் கலம்) நீரை ஊற்றிச் சேமிக்க முயற்சிப்பது போன்றது. சுடப்படாத மண் பானை நீரை உறிஞ்சிவிடும் அல்லது கரைந்துவிடும். நீர் அதில் தங்காது. அதுபோல, தீய வழியில் ஈட்டிய செல்வமும் விரைவில் அழிந்துவிடும்.

**சலத்தால் பொருள்செய்தே மார்த்தல் பசுமண்**
**கலத்துள்நீர் பெய்திரீஇ யற்று**

– குறள் 660 ( வினைத்தூய்மை அதிகாரம்)

**27. வாக்கியம்–I : வீரமாமுனிவர் இயற்றிய நூல் தொன்னூல் விளக்கம் ஆகும்.**
**வாக்கியம்–II : தேவநேயப் பாவாணர் இயற்றிய நூல் சொல்லாய்வுக் கட்டுரைகள் ஆகும்.**
**சரியான விடையளி :**

**A)** I மட்டும் சரி **B)** II மட்டும் சரி
**C)** I மற்றும் II சரி **D)** I மற்றும் II தவறு

**விளக்கம் :** **விடை : (C)**

''தொன்னூல் விளக்கம்'' என்ற நூலின் ஆசிரியர் வீரமாமுனிவர் ஆவார். அவரது இயற்பெயர் கான்ஸ்டான்சியுசு ஜோசப் பெஸ்கி (Costanzio Giuseppe Beschi) . இவர் இத்தாலியைச் சேர்ந்த ஒரு பாதிரியார். தமிழ் மொழியின் மீது கொண்ட ஆர்வத்தால் இலக்கண நூல்களை எழுதினார். வாக்கியம் I சரி.

தேவநேயப் பாவாணர் தமிழறிஞர், சொல்லாராய்ச்சி வல்லுனர், பன்மொழி அறிஞர், தனித்தமிழ் இயக்கத்திற்கு பங்காற்றியவர். 'தமிழ் சொற்பிறப்பியல், அகரமுதலி, சொல்லாய்வு கட்டுரைகள் இவரால் உருவாக்கப்பட்டது. மொழிஞாயிறு என்னும் பட்டத்துடன் அறியப்படுகிறார். எனவே வாக்கியம் II சரி.

**28. பொருத்துக.**

| | | | |
|---|---|---|---|
| a) | பாவலர் மணி | 1. | சுந்தரர் |
| b) | தமிழ்த்தென்றல் | 2. | பாரதியார் |
| c) | தம்பிரான் தோழர் | 3. | வாணிதாசன் |
| d) | செந்தமிழ்த் தேனீ | 4. | திரு.வி.க. |

**குறியீடுகள் :**

| | a) | b) | c) | d) |
|---|---|---|---|---|
| A) | 3 | 1 | 2 | 4 |
| B) | 1 | 3 | 4 | 2 |
| C) | 3 | 4 | 1 | 2 |
| D) | 2 | 1 | 4 | 3 |

**விளக்கம் :** **விடை : (C)**

பாவலர் மணி – வாணிதாசன்
தமிழ்த்தென்றல் – திரு. வி. க.
தம்பிரான் தோழர் – சுந்தரர்
செந்தமிழ்த் தேனீ – பாரதியார்

**29. "சனி நீராடு" என்று கூறியவர்**

**A)** ஔவையார் **B)** ஆண்டாள்
**C)** நச்செள்ளையார் **D)** வெள்ளிவீதியார்

**விளக்கம் :** **விடை : (A)**

''சனி நீராடு'' என்ற வாக்கியம் ஔவையார் இயற்றிய ஆத்திசூடியில் இடம்பெற்றுள்ளது. இது சனிக்கிழமை தோறும் எண்ணெய் தேய்த்துக் குளிக்க வேண்டும் என்ற ஆரோக்கியம் சார்ந்த அறிவுரையாகும். எனவே சனி நீராடு என்பது ஔவை வாக்கு.

**30. "உழுவார் உலகத்தார்க்கு ஆணி அஃதாற்றாது**
**எழுவாரை எல்லாம் பொறுத்து"**
**– இக்குறட்பாவில் பயின்று வரும் அணி**

**A)** உருவக அணி
**B)** தீவக அணி
**C)** ஏகதேச உருவக அணி
**D)** எடுத்துக்காட்டு உவமை அணி

**விளக்கம் :** **விடை : (C)**

இக்குறட்பாவில், உழுபவர்கள் உலகத்தார்க்கு ஆணி என்று உருவகப்படுத்தப்பட்டுள்ளனர். ஆனால், உலகத்தார் ஆணிக்குத் தாங்கப்படும் பொருளாக உருவகப்படுத்தப்படவில்லை. இவ்வாறு ஒரு பொருளை மட்டும் உருவகம் செய்து, மற்றொன்றை உருவகம் செய்யாமல் விடுவதால், இப்பாடலில் பயின்று வந்துள்ள அணி ஏகதேச உருவக அணி ஆகும்.

**31. "யாதானும் நாடாமல் ஊராமால் என்னொருவன்"– என்ற அடி இடம்பெற்றுள்ள நூல்**

**A)** புறநானூறு **B)** திருக்குறள்
**C)** நற்றிணை **D)** நல்வழி

**விளக்கம் :** **விடை : (B)**

''யாதானும் நாடாமல் ஊராமால் என்னொருவன்'' என்ற அடி திருக்குறளில் இடம்பெற்றுள்ளது. இந்த வரியானது, ''கற்றவனுக்கு எந்த நாடும் தன் நாடே'' என்ற கருத்தை வலியுறுத்துகிறது.

**யாதானும் நாடாமல் ஊராமால் என்னொருவன்**
**சாந்துணையும் கல்லாத வாறு.**

**பொருள்:** கற்றவனுக்குத் தன் நாடு, அயல் நாடு என்று வேறுபாடு இல்லை; எல்லா நாடுகளும் அவனுக்குத் தன் நாடுகள் போலவே சிறப்புடையன.

❖◆❀◆❖